2013, June 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

# ஒழுக்கக்கோவை யாருக்குத்தேவை? திருத்தம், திருத்தத்திற்கு திருத்தம், அப்புறம்..?

■ தேசியவாதிகள் கற்கவேண்டிய நடுப்பாதை ■ நவதாராளவாதத்தின் இரண்டாவது அலை ■ சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாடுகள் ■ மோடியும் அத்வானியும் ■ ஜெயலலிதாவின் லாஸ்ட் மினிட் கோல் ■ சூடு பிடிக்கும் கச்சதீவு சர்ச்சை ■ அவுஸ்திரேலியாவில் தொடரும் அகதிகள் அவலம் ■ அமெரிக்காவின் இணையத்தள வேவு வேலை ■ புட்டினின் விவாகரத்து

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |


NEW CITY MOTORS
Link Lanka
Budget Taxi
&
Link Taxi Meter Services
Hotline:
0724 990 990
0722 909 909
தவணைக் கொடுப்பனவு முறையிலும்
Link Meterஐ கொள்வனவு செய்யலாம்.
(வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)
இலவசம்
மீட்டர் டெக்சி
Board, Sticker
உலகில் உற்பத்தியான
சிறந்த முச்சக்கர வண்டி மீட்டர்
New City Motors LINK LANKA
Head Office
# 181, Araamiya Place, Dematagoda,
Colombo - 09
Sri Lanka.
Office : 0112 690 744
Galle : 0114 345 960 - 4, 0114 345 962




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

2013, ஜூன் 16 - 30





**26** அவுஸ்திரேலியாவில் தொடரும் அகதிகள் அவலம்
- கலாநிதி சந்திரிகா சுப்பிரமணியன்

**53** முதுமையையும் மரணத்தையும் தள்ளிப் போடும் அறிவியல் முயற்சிகள்
- டாக்டர் எம்.கே.முருகானந்தன்




**50** ரஷ்ய அரசியலில் ஒரு தடையைத் தகர்த்த விவாகரத்து

**45** தகவல் அறியும் உரிமையா? இந்திய கட்சிகளுக்கு ஆத்திரம்
- அ.மார்க்ஸ்




**40** மோடியும் அத்வானியும் குருவை விஞ்சிய சீடன்
- எம்.பி.வித்தியாதரன்




**12** ஒழுக்கக்கோவை அரச ஊடகங்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்
- கலாநிதி ஜெஹான் பெரேரா




**32** அமெரிக்காவின் இணையத்தள வேவு வேலை




**34** ஜெயலலிதாவின் ‘லாஸ்ட் மினிட் கோ’
-எம்.காசிநாதன்

**29** திருத்தம், திருத்தத்திற்கு திருத்தம், அப்புறம்...!
- என்.சத்தியமூர்த்தி

**60** சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாடுகள்
- க.சண்முகலிங்கம்


**16** ‘அவர்களின் சொந்த ஊடகங்களுக்கு’ ஒரு ஒழுக்கக்கோவை
- குசல் பெரேரா




**23** நவதாராளவாதத்தின் இரண்டாவது அலை
- அகிலன் கதிர்காமர்

**20** தேசியவாதிகள் கற்க வேண்டிய நடுப்பாதை
- கலாநிதி தயான் ஜெயதிலக

**48** சூடுபிடிக்கும் கச்சதீவு சர்ச்சை




**66** கடைசிப் பக்கம்
செ.கணேசலிங்கன்


*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியபீடமிருந்து...

# அடிப்படையில் வேறுபாடு இல்லை

அண்மையில் 37 பௌத்த அமைப்புகள் ஒன்றிணைந்து 'மாகாண சபைமுறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பு' என்ற இயக்கமொன்றை ஆரம்பித்திருந்தன. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்பதும் வடமாகாண சபைக்கு தேர்தலை நடத்துவதென்ற தீர்மானத்தை இடைநிறுத்த வேண்டும் என்பதுமே அந்த இயக்கத்தின் பிரதான கோரிக்கைகள். இக்கோரிக்கைகளை உடனடியாகவே அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாவிட்டால் வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக நிறைவேற்ற வேண்டிய ஐந்து நிபந்தனைகளை அரசாங்கத்திடம் இயக்கம் முன்வைத்திருக்கிறது.

மாகாணசபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டும்; காணி அதிகாரங்களை ரத்துச் செய்ய வேண்டும்; மாகாணங்கள் இணைந்து தனியலகாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கும் ஏற்பாட்டை அகற்றவேண்டும்; மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் எதையும் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு முன்னதாக சகல மாகாணசபைகளினதும் சம்மதத்தைப் பெறவேண்டுமென்றிருக்கும் ஏற்பாட்டை பெரும்பான்மையான மாகாண சபைகளின் சம்மதம் என்று மாற்றம் செய்யவேண்டும்; மாகாணசபைகளுக்கு பணிப்புரைகளை மத்திய அரசாங்கம் வழங்குவதற்கு அனுமதிக்கக்கூடிய சட்ட ஏற்பாடொன்றை அரசியலமைப்பில் புகுத்தவேண்டும் என்பவையே இந்த நிபந்தனைகளாகும். இன்று பரவலாக்கம் செய்யப்படவேண்டியது நிருவாக அதிகாரங்களே தவிர அரசியல் அதிகாரங்கள் அல்ல என்பது மாகாண சபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்றும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

பௌத்த அமைப்புகளுடன் இணைந்து இந்தத் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய தனிநபர்களில் பேராசிரியர்கள் நளின் டி சில்வா, குணதாச அமரசேகர, சட்டத்தரணி எஸ். எல்.குணசேகர ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்கள் எல்லோருமே இதுகாலவரையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கெனக்கூறிக்கொண்டு முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு அதிகாரப் பரவலாக்கல் யோசனையையும் கர்ண கடூரமாக எதிர்த்து வந்தவர்களே. தற்போது நாட்டில் மூளவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கு எதிரான பிரசார இயக்கத்தில் தங்களுக்கும் ஒரு இடம்தேடிக்கொள்ளுமுகமாக மாகாணசபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்தப் பிரமுகர்கள் முன்னின்று உதவியிருக்கிறார்கள். முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது என்னவெனில், இந்த பௌத்த அமைப்புகளும் பிரமுகர்களும் மாகாண சபைமுறையை மாத்திரம் எதிர்ப்பவர்கள் அல்ல. இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மைத் தேசிய இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் என்று கூறப்படக்கூடியவற்றில் குறைந்த பட்சமானவற்றில் கூட, எந்தவொன்றையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாதவர்கள் இவர்கள். இவர்களின் கடந்தகால அரசியற் செயற்பாடுகள் இதற்கு பிரகாசமான சான்றுகளாக விளங்குகின்றன.

மாகாணசபை முறைக்கும் அந்த முறையை இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து அறிமுகப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கும் எதிரான பிரசாரங்கள் என்று இன்று முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பவை அடிப்படையில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு விரோதமான நச்சுப் பிரசாரங்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மாகாண சபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கும் ஐந்து நிபந்தனைகளைப் பொறுத்தவரை, அவற்றை அரசாங்கத்திற்குள் இருக்கக்கூடியவர்கள் (சிங்களக் கடும்போக்கு கொள்கைகளைக் கொண்ட தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்றவை மாத்திரமல்ல) ஏற்கனவே வேறு தொனிகளில் தென்னிலங்கையில் பிரசாரப்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களும் இதில் அடக்கம். வடமாகாண சபைக்கான தேர்தல் குறித்த பேச்சு கள் எழுந்த ஆரம்பக் கட்டத்திலேயே அவர்கள் இந்த நிபந்தனைகளின் தொனியிலான கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கியிருந்தார்கள். இன்று மாகாணசபை முறைக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைப்பாட்டுக்கும் அரசாங்கத்திற்குள் இருக்கக்கூடிய கணிசமான பிரிவினரின் நிலைப்பாட்டுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் உரிமைகள், நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் என்று வரும்போது சிங்கள அரசியல் சமுதாயத்தின் பெரும்பகுதிக்கும் சிங்கள பௌத்த கடும்போக்குச் சக்திகளுக்கும் இடையே அடிப்படையில் வேறுபாடு எதுவுமில்லை. ■

# கடிதங்கள்













### பிரதானமான பிரச்சினைகள்

சமகாலத்தின் 2013, மே 16-30 இதழில் பல கட்டுரைகள் வடக்கு நிலவரங்கள் குறித்து, விசேடமாக வடமாகாண சபைத் தேர்தல், தமிழர்களின் நிலத்தை அபகரிக்கும் இராணுவத்தின் செயற்பாடுகள் பற்றியவையாக அமைந்திருந்தன. அந்தப் பிரச்சினைகள் குறித்து நியாயமான நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள் குறிப்பாக சிங்கள சமூகத்தின் மத்தியில் உள்ள புத்திஜீவிகள் தெரிவித்திருக்கும் கருத்துகள் கனதியானவை.

இதேபோன்று நாட்டின் எரியும் பிரச்சினைகளில் ஒவ்வொன்றைப் பிரதானமாக எடுத்து ஒவ்வொரு சமகாலம் இதழிலும் பல கட்டுரைகளைப் பிரசுரிப்பது பயனுடையதாக இருக்கும். சமகாலம் ஆசிரியர் குழு இந்த யோசனையைக் கருத்திலெடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ரகுபதி சேனாதிராஜா, வல்வெட்டித்துறை.

### வாசிப்பின் மேன்மை

கல்விப் 'பெருவெளியில்' வாசிப்பின் பங்கு என்ற தலைப்பில் கடந்த இதழில் நெடுந்தீவு செ.மகேஷ் எழுதிய கடைசிப் பக்கக் கட்டுரை வாசிப்புப் பழக்கத்தின் மேன்மையை அந்தச் சிறுவெளியில் மணிச் சுருக்கமாகத் தந்திருக்கிறது

எம்.அரவிந்தன், அல்வாய்.

### நூல் விமர்சனங்கள்

சமகாலத்தில் வெளியாகும் பனுவல் பார்வைப் பகுதியில் தரமான நூல்களைப் பற்றிய விமர்சனங்களையே காணக்கூடியதாக இருக்கின்றன. இந்த நடைமுறையையே தொடர்ந்து பின்பற்றுமாறு ஆசிரியர் குழுவிடம் கேட்டுக்கொள்கிறேன். எழுத்தாளர்கள் என்ற பெயரில் குப்பைகளை எழுதிக்குவிக்கும் பேர்வழிகளை முகமன் செய்வதற்காக விமர்சனங்கள் வெளியிடும் ஒரு வித ஆரோக்கியமற்ற கலாசாரம் வளர்ந்துவருகின்ற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் சமகாலத்தின் தெரிவுகள் தரமானவையாயிருப்பது வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு இதழிலும் நூல் விமர்சனங்கள் வெளிவரவேண்டும். சில இதழ்களில் அதைக் காணமுடிவதில்லை.

மாரிமுத்து மகேந்திரன், யாழ்நகர்.

### குல்திப் நாயர்

சர்வதேச ரீதியில் கீர்த்தி பெற்ற அரசியல் ஆய்வாளர்கள், அவதானிகளின் ஆக்கங்களை இலங்கையில் தமிழில் படிக்கக் கூடிய வாய்ப்புகள் கிட்டுவதில்லை. குல்திப் நாயர், தாரிக் அலி போன்ற பத்திரிகையாளர்களின் கட்டுரைகளை சமகாலம் வெளியிட்டு வருவது வரவேற்கத்தக்கது. இவர்களைப் போன்று சர்வதேச ரீதியாக இருக்கக்கூடிய அறிஞர்களின் ஆக்கங்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட ஏற்பாடுகள் செய்தால் பயனுடையதாக இருக்கும்.

ஜீவராணி நகுலேஸ்,
திருகோணமலை.

### ரி.எம்.எஸ்.

ரி.எம்.சௌந்தரராஜன் மறைவு குறித்து மதுசூதனன் எழுதியிருந்த கட்டுரை அருமையிலும் அருமை. 'ரி.எம்.எஸ். கோலோச்சிய யுகத்திற்குப் பிறகு பல சிறந்த பாடகர்கள் தமிழ்த்திரையுலகிற்கு வந்திருக்கிறார்கள். அதில் சந்தேகமில்லை. ஆனால், அவரைப் போன்ற ஒருவர் வரவேயில்லை' என்ற கடைசிக்குறிப்பு ஒன்றே போதும் அந்த நினைவுப் பரவலின் உயர்த்தியை உணர்ந்துகொள்வதற்கு.

கமலா நடராஜா, வேலணை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

## மலையகத் தமிழர் பிரச்சினைகள்

மலையகத் தமிழர் பிரச்சினைகளுக்கு சமகாலம் போதிய முக்கியத்துவத்தை வழங்க வேண்டும். பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா.ரமேஷ் சம காலத்தில் எழுதிவரும் கட்டுரைகள் காத்திரமானவையாக அமைந்திருக்கின்றன. அவரைப் போன்று மலையகத்தில் இருக்கக்கூடிய இளையசந்ததி புத்திஜீவிகள், ஆர்வலர்களுக்கு சமகாலம் வாய்ப்பளிக்கும் என்று நம்புகிறோம்.

மனோகரன் நடராஜா, கினிகத்தேனை.

## 13 ஆவது திருத்தமும் அரசாங்கமும்

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நிலையில், கடந்த 'சமகாலம்' இதழில் பாக்கியசோதி சரவணமுத்து எழுதியிருக்கும் 'குறைபாடுகளின் மத்தியிலும் 13 ஆவது திருத்தம் ஒரு முறைப்படியான தொடக்கப் புள்ளி' என்ற கட்டுரை முக்கியமானதாகும். இந்தக் கட்டுரையில் 13 ஆவது திருத்தத்தின் முக்கியமான அம்சங்கள் பலவற்றை கட்டுரையாளர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதேவேளையில், இவ்விடயத்தில் அரசாங்கத்தின் தவறான அணுகுமுறைகளையும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் கூட அவர் விளக்கியுள்ளார்.

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் அரசாங்கத்துக்கு அக்கறையில்லை என்பது தெளிவானது எனக் குறிப்பிடும் ஆசிரியர், அடையப்பட்ட இராணுவ வெற்றிக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவையில்லை என்றே அரசாங்கம் நம்புகின்றது எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். உண்மையில் போருக்குப் பின்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது, இதனை உணரமுடிகின்றது. போர் வெற்றியை வைத்து அரசியலை நடத்துவதற்கு அரசு முற்படுகின்றதே தவிர, நாட்டைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பில் கட்டுரையாளர் பாக்கியசோதி குறிப்பிட்டிருக்கும் பின்வரும் கருத்துகளும் கவனிக்கத்தக்கவை:

அதிகாரப் பரவலாக்கலைப் பொறுத்தவரையில் மாகாண அதிகாரங்களைப் பறிக்கும் செயற்பாடுகளே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. திவி நெகும சட்டமூலம் கூட மாகாண அதிகாரங்களைப் பறிப்பதை நோக்கமாகக் கொண்டது என்பது கவனிக்கத்தக்கது. இப்போது 13 இல் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் கைவைப்பதற்கு அரசு முற்பட்டிருக்கின்றது. போருக்குப் பின்னரான நல்லெண்ண முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகள் பாதகமானவையாகவே அமையும் என்பதை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கின்றார். இவ்வாறான கருத்துகள் சிங்களவர்களை எந்தளவுக்குச் சென்றடைகின்றன என்பதுதான் இன்றுள்ள கேள்வி.

– எஸ்.இராசக்கோன், நல்லூர், யாழ்ப்பாணம்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 24
2013, ஜூன் 16 - 30


A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@ex-pressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



மக்கள் கேட்க விரும்பாததை அவர்களுக்கு சொல்வதற்கு இருக்கின்ற உரிமையே சுதந்திரம் என்பது.

- ஜோர்ஜ் ஓர்வெல்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோரை உள்ளடக்கிய நிறைவேற்றுக் கவுன்சில் ஒன்றினால் பதலீடு செய்யும் ஐக்கியதேசியக் கட்சியின் புதிய அரசியலமைப்பு யோசனைகள் வெறும் ஏமாற்றாகும். பிரதமராகவும் சபாநாயகராகவும் தனது பொம்மைகளை ஜனாதிபதியினால் நியமிக்க முடியுமென்பதால் நிறைவேற்றுக் கவுன்சிலின் ஒரு ஆள் நினைத்ததைச் செய்யக்கூடிய அரங்காகவே இருக்கும். ஐ.தே.க. மக்களை ஏமாற்றுகிறது.



சரத்பொன்சேகா

அமெரிக்காவின் வானிலை அவதான திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட செய்தியை இலங்கையில் உள்ள பொருத்தமான அரசாங்க நிறுவனத்தினால் சரியாகப் பெற்றுக்கொள்ள முடியாமற் போய்விட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் அரசாங்கசேவை சின்னாபின்னமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு இது தெளிவான சான்று.



எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க

இலவசக் கல்வித் திட்டம் இல்லையென்றால் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவையும், கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவையும் இன்று யாருமே அறிந்திருக்கமாட்டார்கள். திசாநாயக்க இன்று ஒரு விவசாயியாகவே இருந்திருப்பார். இத்தகைய ஆட்கள் தான் இன்று இலவசக் கல்வி முறையை இல்லாமற்செய்து, 150,000 ரூபாவுக்கு பல்கலைக்கழக பட்டங்களை விற்பனை செய்ய முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.



ஜே.வி.பி.எம்.பி. அநுரகுமார திசாநாயக்க

அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைப்பதற்கு புதிய அரசியலமைப்புக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் எந்தப்பிரச்சினையும் இல்லை. தற்போது எமது கட்சிக்கு 40 எம்.பி.க்களே இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் எதிர்கால அரசியல் 25 பேரை அமைச்சர்களாகவும் மிகுதிப் பேரை பிரதியமைச்சர்களாகவும் நியமிக்க முடியும். ஏனைய சகல எம்.பி.க்களும் புதியவர்களாகத் தானே இருப்பார்கள்.



ஐ.தே.க.சிரேஷ்ட பிரதித்தலைவர்
லக்ஷ்மன் கிரியெல்ல



அரசாங்க எம்.பி.சஜின் வாஸ் குணவர்தனவுக்கு சொந்தத்தில் ஒரு ஹெலிகொப்டர் இருக்கிறது. கடுமையான காற்றுவீசிய நாட்களில் கடலில் காணாமற் போன தங்கள் சகாக்களை மீட்பதற்கு அந்த ஹெலிகொப்டரை அனுப்புமாறு மீனவர்கள் குணவர்தனவைக் கேட்டார்கள். அவர் மறுத்துவிட்டார். ஆனால், ஒரு மணி நேரத்துக்கு 65 ஆயிரம் ரூபாவுக்கு அந்த ஹெலிகொப்டரை அவர் ஊடாக நிறுவனமொன்றுக்கு வாடகைக்குக் கொடுத்தார்.

ஐ.தே.க.எம்.பி. விஜேதாச ராஜபக்ஷ

எனக்குச் சொந்தமாக இருப்பது சிறிய தனியொரு இயந்திரத்தைக் கொண்ட ஹெலிகொப்டர். கடுமையான காற்று, மழைபோன்ற பாதகமான காலநிலையில் அதனால் பறக்கமுடியாது. அத்துடன் இரட்டை இயந்திரம் கொண்டதும் கதவுகள் மற்றும் தடுப்புகள் அகற்றப்பட்டதுமான ஹெலிகொப்டர்களையே மீட்புப் பணிகளுக்கு பயன்படுத்த முடியும். இதைத் தெரியாதவராக தன்னைத் தானே பெரிய சட்டமேதை என்று பிரகடனஞ் செய்கிற விஜேதாச ராஜபக்ஷ இருக்கிறார். எனது ஹெலிகொப்டரை கடலில் தத்தளித்த மீனவர்களை மீட்க அனுப்பவில்லையென்று குறை கூறுவதைவிடுத்து பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு நிதியுதவி செய்ய அவர் முன் வரட்டும்.



சஜின் வாஸ் குணவர்தன எம்.பி.

அதிகாரப் பரவலாக்கலையும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக எனது அமைச்சுப் பதவியையும் துறக்கத் தயாராயிருக்கிறேன்.



கடற்றொழில் அமைச்சர்
ராஜித சேனாரத்ன

செய்தி ஆய்வு

# யாருக்குத் தேவை ஒழுக்கக்கோவை?

ஊடக நெறிமுறை குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு திடீரென்று ஒரு அக்கறை பிறந்திருக்கிறது. ஊடகங்களுக்கு ஒரு ஒழுக்கக் கோவையொன்றை அறிமுகப்படுத்துவதில் அது அவசரம் காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஊடகவியலாளர்களுக்கு வாகனங்களை வாங்குவதற்கு கடன்வசதிகளையும் இலவச மடிக்கணினிகளையும் வழங்கியதன் மூலமாக சாதிக்க முடியாமற் போனதை ஒழுக்கக் கோவையின் ஊடாக சாதிக்கப் பார்க்கிறதோ அரசாங்கம் என்று ஊடகத்துறை வட்டாரங்கள் கேலியாகப் பேசுகின்றன.

அரசாங்கத்தினால் வரையப்பட்ட ஊடகங்களுக்கான ஒழுக்கக்கோவை அரசியல்வாதிகளின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. உண்மையில் ஊடக ஒழுக்கக் கோவைக்கும் அரசியல்வாதிகளுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

அரசியல்வாதிகள் ஊடகவியலாளர்களைப் பெரிதும் நேசிக்கின்ற ஒரு வர்க்கத்தினர் அல்ல. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்குப் பொறுப்பாக இருக்காத ஒரு அரசியல் கட்சியையும் குழுவையும் அடையாளம் கண்டுவிட முடியாது. அரசியல்வாதிகளின் அணுகுமுறைகள் காரணமாகவே ஊடகநிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் தொடர்ச்சியாக அச்சுறுத்தலை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது.

ஊடகவியலாளர்களுக்கு ஒழுக்கக் கோவையைக் கொண்டுவருவதற்கு முன்னதாக அரசியல்வாதிகள் குறிப்பாக அரசாங்கத் தரப்பினர் இதுகால வரையில் ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான குற்றச்செயல்களுக்குப் பொறுப்பான வர்களைச் சட்டத்தின் முன்னிறுத்தித் தண்டிக்கவேண்டும். இத்தகைய குற்றச்செயல்களில் எந்த ஒன்று தொடர்பான விசாரணையுமே பூர்த்தியான தாகவோ பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட்டதாகவோ வரலாறு இல்லை.

(44ஆம் பக்கம் பார்க்க...)



செய்தி ஆய்வு

# மியன்மார் சீர்திருத்தங்கள் இடைநடுவில் நின்றுவிட முடியாது

மியன்மாரை ஆட்சி செய்யும் சீருடை அணியாத ஜெனரல்கள் 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்னதாகவே எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகீ ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுவதில் தனக்கு இருக்கும் நோக்கத்தை வெளிப்படையாக அறிவித்துவிட்டார். தலைநகர் நய்ப்பிட்டோவில் இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற உலகப் பொருளாதார அரங்கத்தின் (World Economic Forum) மகாநாட்டில் உரையாற்றிய சூகீ, 'நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறேன், இதை பகிரங்கமாகக் கூறுகிறேன்' என்று (ஜூன் 6) குறிப்பிட்டார். மியன்மாருக்கும் மேற்குலகிற்கும் இடையேயான உறவுகள் சுமுகமானவையாக மாறத் தொடங்கியதற்குப் பிறகு அந்த நாட்டில் உலகின் பல நாடுகளையும் சேர்ந்த அரசியல் தலைவர்களும் வர்த்தகத்துறைத் தலைவர்களும் கலந்துகொண்ட முதல் மகாநாடு இதுவேயாகும். இத்தகைய ஒரு கூட்டத்தில் வைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது நோக்கத்தை அறிவிப்பதற்கு ஏற்கனவே சூகீ திட்டமிட்டிருந்தார் என்பது வெளிப்படையானது.

தற்போதைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுவதற்கான தகுதி சூகீயிற்கு இல்லை என்பது அவருக்கும் அவரின் ஜனநாயகத்திற்கான தேசிய கழகத்தினருக்கும் நன்றாகவே தெரியும். வெளிநாட்டுப் பிரஜையொருவரைத் திருமணம் செய்த எந்தவொரு வேட்பாளரும் அல்லது வெளிநாட்டுப் பிரஜைகளான பிள்ளைகளைக் கொண்ட எந்தவொரு வேட்பாளரும் மியன்மாரின் ஜனாதிபதியாகவோ அல்லது உப ஜனாதிபதியாகவோ வருவதை அரசியலமைப்பின் 59 (f) சரத்து தடுக்கிறது.

சூகீயின் கணவர் மைக்கேல் அரிஸ் (அவர் 1999 ஆம் ஆண்டு இறந்துவிட்டார்) ஒரு பிரிட்டிஷ் பிரஜை. அவரின் இரு மகன்மாரும் கூட பிரிட்டிஷ் பிரஜைகளே. இத்தயைதொரு தடை தனக்கு இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டும்கூட, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது நோக்கத்தை பிரகடனம் செய்ததன் மூலமாக சூகீ தனது ஆதரவாளர்கள் மத்தியில் எதிர்பார்ப்புகளைக் கிளப்பியிருப்பதுடன், நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கிறார்.



2012 பாராளுமன்ற இடைத்தேர்தல்களில் ஜனநாயகத்திற்கான தேசிய கழகம் தீர்க்கமான வெற்றிகளைப் பெற்றது. ஆனால், பாராளுமன்றத்தில் அரசியல் மாற்றச் செயன்முறைகளை ஊக்கப்படுத்துவதற்கு பெரிதாக எதையும் செய்யக்கூடியதாக இருக்கவில்லை. ஏனென்றால், சனப்பிரதிநிதிகள் சபையின் (Pyithu Hluttaw) 440 ஆசனங்களில் 312 ஆசனங்கள் இராணுவத்துக்கு சார்பான ஒருமைப்பாட்டு, அபிவிருத்தி யூனியன் (Union solidarity and Development party) கட்சியிடமும் இராணுவத்தினால் நியமிக்கப்பட்ட ஏனையவர்களிடமுமே இருக்கின்றன.

மியன்மாரை ஆண்ட சிரேஷ்ட ஜெனரல் தீய்ன் சீன் இருவருடங்களுக்கு முன்னர் தனது சீருடையை கழற்றிவிட்டு ஜனாதிபதியாக வந்தார். சூகீ ஜனாதிபதியாக வரவிரும்பினால், ஜனநாயகத்திற்கான தேசிய கழகமும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிற பல்வேறு இனக்குழுக்களும் கட்டிறுக்கமான அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதை நோக்கி பாடுபடவேண்டியிருக்கும். ஆனால், இராணுவக் கட்சியில் உள்ள ஒரு பிரிவினர் அரசியல் இணக்கத் தீர்வுக்காகவும் நல்லிணக்கத்திற்காகவும் பாடுபட முன்வராத பட்சத்தில், (அரசியலமைப்பைத் திருத்துவதென்ற) அத்தகைய மிகப்பெரிய சவாலைச் சந்திக்க முடியாது. இந்த இடத்தில்தான் இந்தியா உட்பட மியன்மாரின் அயல்நாடுகள் ஆக்கபூர்வமான பங்கொன்றை வகிக்க வேண்டியிருக்கிறது. தனது திட்டத்தை உலக பொருளாதார அரங்க மகாநாட்டில் பகிரங்கமாக அறிவித்தன் மூலமும் தனது மக்களுக்கு நேர்மையானவராக இருக்க விரும்புவதாகக் கூறியதன் மூலமும் சூகீ மாற்றங்களுக்காகவும் முன்னாலுள்ள சவால்களுக்காகவும் இராணுவத்தையும் பரந்துபட்ட உலகையும் தயார்படுத்தியிருக்கிறார் எனலாம்.

தற்போது சர்வதேச சமூகம் மியன்மாருடன் முழு அளவில் ஊடாட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறது.

*(22ஆம் பக்கம் பார்க்க...)*

செய்தி ஆய்வு

# நெருக்கடிக்குள் அமெரிக்க ஜனநாயகம்



விக்கிலீக்ஸ் இணையத்தளத்திற்கு சுமார் 7 இலட்சம் அமெரிக்க இராஜதந்திர கேபிள்களையும் இரகசிய ஆவணங்களையும் வெளிப்படுத்தியதற்காக அமெரிக்க இராணுவப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த பிராட்லி மானிங் மீது வழக்கு விசாரணை ஆரம்பமாகியிருக்கிறது. எதிரிக்கு உதவியது, வேவுச் சட்டத்தை (Espionage Act) மீறியது என்பன உட்பட 22 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், அவர் ஆயுட்காலச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

மானிங்கின் செயற்பாடுகள் அமெரிக்காவை மாத்திரமல்ல, முழு உலகையுமே துருவமயப்படுத்தியிருக்கிறது. இரகசியமானவை என்று வகைப்படுத்தப்பட்ட தகவல்களை விக்கிலீக்ஸுக்கு வழங்கியதை மானிங் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆனால், எதிரிக்கு உதவியதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் மீது குற்றஞ்சாட்டப்படுபவர்கள் அல்-கயெடா இயக்கத்துக்கும் சுதந்திர உலகின் ஏனைய எதிரிகளுக்கும் தகவல்களை வழங்கியதன் மூலமாக ஒரு துரோகியாகச் செயற்பட்டவர் என்று அவரை வர்ணிக்கிறார்கள். மற்றையவர்களைப் பொறுத்தவரை மானிங் ஒரு ஹீரோ-ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்காவின் போரின் சுயரூபத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களை அம்பலப்படுத்திய ஒரு ஹீரோ. அமெரிக்க அரசாங்கத்துக்கும் மக்கள் ஆதரவற்ற அரபுலகச் சர்வாதிகாரிகளுக்கும் இடையே பரிமாறப்பட்ட கேபிள்களும் ஆவணங்களும் அவர்களுக்கிடையே சொகுசான தோழமைகளை அம்பலப்படுத்தின. இதனால் மக்கள் கொந்தளித்தார்கள்.

மானிங் மீதான விசாரணை அவரின் குற்றத்தை நிரூபிப்பதுடன், நிலை நாட்டுவதுடன் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டதல்ல. அவர் அமெரிக்கச் சட்டங்களை மீறினார் என்பது எல்லோருக்கும் தெரியும். அத்துடன், பெரும்பாலான குற்றச்சாட்டுகளை அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார். அமெரிக்க நலன்களுக்கு தான் ஊறு விளைவித்துக் கொண்டிருந்தார் என்பதை, எதிரிக்கு உதவிக்கொண்டிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தாரா, இல்லையா என்பதையே வழக்கு விசாரணை வெளிப்படுத்தும். ஆனால், அமெரிக்க ஜனநாயகத்தின் ஆழத்துக்கும் அதன் நீதிமுறையின் தரத்திற்கும் ஒரு பரீட்சையாக இந்த விசாரணை அமையப்போகிறது என்பதே கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு உண்மையைப் பேசத் துணிச்சல்கொண்ட ஒருமனிதனுக்கு நேர்மையான விசாரணையொன்றை உறுதிப்படுத்தக்கூடிய ஆற்றல் அமெரிக்காவுக்கு இருக்கிறதா? அத்தகைய ஆற்றல் இல்லை என்பதையே முதலில் காட்டப்பட்ட சமிக்ஞைகள் உணர்த்துகின்றன. வழக்கு விசாரணையில் சில பகுதிகள் மக்களுக்கு மூடப்பட்டிருக்கும், ஒளிவுமறைவற்ற தன்மைக்கு மேலாக மழுப்பல்களுக்கு முன்னுரிமை கொடுப்பதையே அமெரிக்கா தொடர்ந்து செய்யும் என்பதே இதன் அர்த்தமாகும்.

விசாரணைக்கு முன்னதாக மூன்று வருடங்களாக மானிங்கை அமெரிக்க அரசாங்கம் நடத்திய விதம் அவரின் உரிமைகளைப் பாதுகாப்பதென்பது முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கப்போவதில்லை என்பதை உணர்த்துகிறது. அது நல்லதாகத் தெரியவில்லை.

எதிர்காலத்தில் தவறுகளை அம்பலப்படுத்துபவர்களுக்கு கடுமையான ஒரு செய்தியை அனுப்புவதற்கு மானிங்கின் வழக்கு விசாரணையை அமெரிக்க அரசாங்கம் பயன்படுத்தும்; அமெரிக்காவின் முறைகேடான காரியங்களை அம்பலப்படுத்தத் துணிச்சல் கொண்டால், குரல்வளை நெரிக்கப்படும் அல்லது நீண்டகாலத்துக்குச் சிறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்க வேண்டிவரும் என்பதே அச்செய்தியாகும்.

மானிங்கின் வழக்கு விசாரணை அமெரிக்க வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனை. குடியியல் சுதந்திரங்கள் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. மானிங்கின் விசாரணையில் உள்ளார்ந்தமாக இருக்கும் உண்மையான பிரச்சினைகள் குறித்து அமெரிக்க மக்கள் விழிப்படைய வேண்டும். அவர்களது ஜனநாயகம் கூர்மையான நெருக்கடிக்குள் இருக்கிறது. ■

பொதுசன நூலகம்

கலாநிதி ஜெஹான் பெரேரா



# ஒழுக்கக் கோவை

## அரச ஊடகங்கள் முன்மாதிரியாக நடந்துகாட்ட வேண்டும்




இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியாக எதிர்நோக்குகின்ற சவால்களில் ஒன்று அது ஊடகங்களை நடத்துகிற முறையின் விளைவாக ஏற்படுகிற பிரச்சினையாகும். ஊடக நிறுவனங்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை அலுவலகம் தாக்குதலுக்குள்ளானது. இந்த அலுவலகம் மீது ஏற்கனவே பல தடவைகள் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. இத்தாக்குதல்கள் வன்முறை வடிவங்களிலும் அரசாங்க ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் வடிவிலும் இடம்பெற்று வந்திருக்கின்றன. ஊடக நிறுவனங்களு க்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவதாக இல்லை. பெரும்பாலான சம்பவங்கள் பற்றி முறையான விசாரணைகளும் இல்லை. அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை அல்லது அதன் கொள்கைகளை விமர்சனம் செய்பவர்களைத் துரோகிகள் என்றும் தேச விரோதிகள் என்றும் அழைப்பதில் அரசாங்க ஊடகங்களுக்கு எந்த அசௌகரியமும் இல்லை. சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டை அனுமதித்து, சமுதாயத்தின் 'காவல்நாய்' என்ற வகையில் ஊடகங்களின் பங்கை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் ஏனைய நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதைப் போன்று, ஊடகங்களையும் கட்டுப்படுத்துவதில் நாட்டம் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலை நல்லாட்சி செய்யப்படுகிற எந்தவொரு சமுதாயத்திலும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு இருக்கக்கூடிய ஏற்பாடுகளை பலவீனப்படுத்தும் ஆபத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

கடந்த காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்த பல அனர்த்தங்கள் மத்தியில், உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெருமளவில் கவனத்தை

ஈர்த்த ஒரு சம்பவம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமையாகும். அவர் ஒரு கேலிச் சித்திரக் கலைஞர். 2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தல் தினத்துக்கு முதலில் அவர் காணாமற்போனார். ஊடக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான பொதுநிகழ்வுகளில் இன்று எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவைக் காணக்கூடியதாக இருக்கிறது. கணவரின் ஊடகவியல் பணிகள் பற்றிய சிறிய நூலொன்றை சந்தியா இந்த நிகழ்வுகளின் போது தனது கையில் வைத்திருக்கிறார். இவ்வாறு செய்வதன் மூலமாக அவர் தனது கணவர் பற்றிய நினைவை சமுதாயத்தின் மனச்சாட்சியின் முன்பாக உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க முயற்சிக்கிறார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட போன்று காணாமல் போனவர்களின் கதியும் அவர்கள் விட்டுச் சென்றவர்களின் கவலையும் இந்த நாட்டின் வடக்கு, கிழக்குப்பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு நன்கு தெரிந்தவை. தனது அன்புக்குரியவரைத் தேடி அலைகின்ற சந்தியாவின் உணர்வுகளை வடக்கு, கிழக்கு மக்கள் நன்றாக விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள். காணாமல் போன தங்களின் அன்புக்குரியவர்களை அவர்கள் இன்னமும் தொடர்ந்து தேடிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களில் சிலர் காணாமற் போன தங்கள் குடும்ப உறுப்பினர்களைக் கண்டு பிடிப்பதற்காக நீதிமன்றங்களை நாடியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது. காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறியாமல் காயங்களை குணப்படுத்துவது சாத்தியமானதல்ல என்பதையும் ஆணைக்குழு ஒத்துக் கொண்டிருக்கிறது. எனவே, விசேட விசாரணைப் பொறிமுறையொன்றை ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று ஆணைக்குழு அதன் அறிக்கையில் விதப்புரை செய்திருக்கிறது. இன்னும் அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யவில்லை.




காணாமற்போன பிரகீத் எக்னெலிகொட உண்மையில் உயிருடன் இருக்கிறார் என்றும் அவர் தற்போது பிரான்ஸில் வசிக்கிறார் என்றும் அரசாங்கத் தரப்பு எம்.பி.யொருவர் திடீரென்று ஒரு அறிவிப்பைச் செய்தார். அந்த அறிவிப்புக்கு ஊடகங்களில் பரந்தளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எக்னெலிகொடவைப் பற்றியும் அவர் காணாமற் போய்விட்டதாகக் கூறுகிறவர்களைப் பற்றியும் குற்றங்காண்கிற விதமான கருத்துகள் அரசாங்க ஊடகங்களில் வெளியாகின. காணாமற்போன அல்லது தாங்களாகவே வெளிநாட்டுக்குச் சென்று அஞ்ஞாதவாசம் செய்கிற வேறுபல ஊடகவியலாளர்களும் எக்னெலிகொடவுடன் பிரான்ஸில் இருப்பதாகவும் அரசாங்க ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. காணாமற் போயிருப்பதாகக் கூறப்படுபவர்கள் உண்மையில் காணாமற்போகாமல் இருந்திருக்கலாம் என்பதே அரசாங்க ஊடகங்கள் இத்தகைய செய்திகள் மூலமாக அழுத்தம் கொடுத்துக் கூற வருகின்ற விடயமாகும். இலங்கையில் தங்களுக்கு பாதுகாப்பில்லை என்ற காரணத்துக்காக நாட்டைவிட்டுத் தப்பியோடியவர்களில் சிலரை

**பல்வேறுபட்ட குற்றச் சாட்டுகளினால் தனது பெயருக்கு களங்கம் ஏற் படுத்தப்படுவதாக அர சாங்கம் கொண்டிருக்கும் விசனமே ஊடகங்க ளுக்கென தானாகவே ஒரு ஒழுக்கக்கோவை கொண்டுவர அது உத் தேசித்ததற்கான நோக்கமாக இருந்திருக்கக்கூடும்**

யும் கூட காணாமற் போனவர்களின் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் உண்மையில் வெளிநாடுகளில் நன்றாக வாழ்கின்றவர்கள். அதேவேளை, தாய்நாட்டை அவமதித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே நெருக்குதலுக்குள்ளாகியிருக்கும் அரசாங்கத்துக்கு மேலதிக தொல்லைகளை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம் என்று அரசாங்க ஊடகங்கள் கூறுகின்றன. இதை மக்கள் நம்ப வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

தகவல்களுக்காக அரசாங்க ஊடகங்களை நம்பியிருப்பவர்கள் இந்த ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு பக்கச்சார்பான தகவல்களையே பெறுகிறார்கள். அதாவது சொந்த நாட்டில் துன்புறுத்தல்களுக்குள்ளாவதாகக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் வசதியான வாழ்க்கை வாழும் இந்த ஊடகவியலாளர்கள் நேர்மையீனமான காரியங்களைச் செய்கிறார்கள் என்ற செய்தியே கூறப்படுகிறது. அத்தகைய ஊடகவியலாளர்களை கட்டுப்பாட்டுக்குட்படுத்துவதற்கு சார்பான முறையிலேயே பொது அபிப்பிராயம் உருவாக்கப்படுகிறது.

ஒழுக்கக்கோவையொன்று வரவேற்கப்படக்கூடியதேயென்றாலும், அதன் உள்ளடக்கம் குறித்து சம்பந்தப்பட்ட தொழில்சார் நிபுணத்துவக் குழுக்களுடன் கலந்தாரய வேண்டியது அவசியமானதாகும். ஊடகத்துறைக்கான அரசாங்கத்தின் உத்தேச ஒழுக்கக்கோவை விடயத்தில் இத்தகைய கலந்தாலோசனை நடத்தப்படவில்லை. அதனால், இந்த ஒழுக்கக்கோவை சர்ச்சைக்குரிய விவகாரமாகியிருக்கிறது. அரசாங்கத்தின் பெரும்பாலான நோக்கங்களில் உள்ளதைப் போன்றே, இங்கும் ஊடகவியலாளர்களுக்கு உரிமையளிப்பதைக் காட்டிலும் அவர்கள் மீது அரசாங்கக் கட்டுப்பாட்டைப் பிரயோகி ப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த ஒழுக்கக் கோவையை கொண்டுவர உத்தேசிக்கப்படுகிறது என்பதே உண்மையான பிரச்சினையா கும்.

தனியார்துறைக்குச் சொந்தமான ஊடகங்கள் ஒரு ஒழுக்கக் கோவையைக் கொண்டிருக்கின்றன. சுதந்திர ஊடக இயக்கம், பிரசுரிப்பாளர் சங்கம் ஆகியவற்றுடன் சேர்ந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் 2002 ஆம் ஆண்டில் இந்த ஒழுக்கக்கோவையை வரைந்தது. இதன் பிரதான விசை பத்திரிகைகளுக்குப் பிரயோகிக்கக்கூடியதாகவே அமைந்தது. ஊடக அமைப்புகளினால் வரையப்பட்ட இந்த ஒழுக்கக்கோவை பத்திரிகைகளுக்கு எதிராக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் தீர்ப்புகளை வழங்குவதற்காக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படுகிறது. இலத்திரனியல் ஊடகங்களையும் (தொலைக்காட்சி, வானொலி) புதிய ஊடகங்களையும் (இணையம் மற்றும் அதை அடிப்படையாகக் கொண்ட ஊடகங்கள்) உள்ளடக்கி பரந்தளவிலானதாக ஒரு ஒழுக்கக்கோவையைக் கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கம் உணர்ந்திருந்தால், ஏற்கனவே தனியார்துறை ஊடகங்களின் இந்த ஒழுக்கக்கோவையை அடிப்படையாகக்கொண்டு ஊடகத்துறையின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கி கலந்தாலோசனையை முன்னெடுத்திருக்க முடியும். ஆனால், அரசாங்கத்தின் உத்தேச ஊடக ஒழுக்கக் கோவையை வரைந்தவர்கள் இதைச் செய்யவில்லை. தனியார்துறை ஊடகங்களின் சுயகட்டுப்பாட்டு (Self regulation) உதாரணத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறையவே இருக்கிறது.




**ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவதாக இல்லை. பெரும்பாலான சம்பவங்கள் பற்றி முறையான விசாரணைகளும் இல்லை. அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை அல்லது அதன் கொள்கைகளை விமர்சனம் செய்பவர்களை துரோகிகள் என்றும் தேசவிரோதிகள் என்றும் அழைப்பதில் அரசாங்க ஊடகங்களுக்கு எந்த அசௌகரியமுமில்லை**

பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளினால் தனது பெயருக்கும் தனது உறுப்பினர்களின் பெயருக்கும் நேர்

மையற்ற முறையில் களங்கம் ஏற்படுத்தப்படுவதாக அரசாங்கம் கொண்டிருக்கும் விசனமே ஊடகங்களுக்கென தானாகவே ஒரு ஒழுக்கக்கோவையைக் கொண்டுவர அது உத்தேசித்ததற்கான நோக்கமாக இருந்திருக்கக்கூடும். இணையத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய ஊடகங்களில் கணிசமான பிரிவுகள் அரசாங்கத்தைக் கடுமையாகக் கண்டனஞ் செய்பவையாக இருக்கின்றன. இந்த ஊடகங்களில் சிலவற்றில் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய தகவல்கள் அரசாங்கத் தலைவர்களைப் பற்றி மிகவும் கொச்சைத்தனமான விமர்சனங்களைக் கொண்டவையாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. அவற்றின் உண்மைத்தன்மை தெரியவில்லை. உண்மையைத் திரிபுபடுத்துவதோ அல்லது அரசியல்வாதியின், அரசியல் கட்சியின் அனுகூலத்துக்காக செய்தியைக் கையாளுவதோ ஜனநாயகமொன்றில் ஏற்புடைய பண்பாக இருக்கப்போவதில்லை. அதேவேளை, உண்மைகளை பிரசுரிப்பதென்பது நாட்டை ஆட்சி செய்கிறவர்களின் நலன்களுக்கு உகந்தவையாக எப்போதுமே இருக்கப்போவதுமில்லை. இராணுவ இரகசியங்களையும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுடைய வேறு அரசாங்கத் தகவல்களையும் வெளியிடுவது (அவை உண்மையானவையாக இருந்தாலும் கூட) பொதுநலன்களுக்கு மாறானவையாக அமையக் கூடும்.

அரசாங்கத்தின் ஊடக ஒழுக்கக் கோவை வரைவு 'வெளியுறவுகளைப் பாதிக்கிற விமர்சனங்களையும் தேசவிரோத மனப்பான்மைகளை ஊக்குவிக்கிற விமர்சனங்களையும்' தடுக்கிறது. 'நிறைவேற்று அதிகார பீடத்தினதும் நீதித்துறையினதும் பாராளுமன்றத்தினதும் கண்ணியத்திற்கு எதிரான' விடயதானங்களையும் அது தடுக்கிறது. அரசாங்கத்தின் ஒழுக்கக்கோவையை மீறிவிட்டதாகக் கருதப்படக்கூடும் என்ற அச்சத்தில் ஊடகங்கள் சுயதணிக்கையில் இறங்கக்கூடிய சூழ்நிலைக்கு இந்தப் பரந்த அளவிலான பிரமாணங்கள் வழிவகுக்கலாம். ஊடகங்களை அச்சுறுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய மொழியையும் அரசாங்கத்தின் வரைவு கொண்டிருக்கிறது. ஒரு பொதுவிதி என்ற வகையில், பொது நலனுக்கு உகந்த எதையுமே பிரசுரிப்பதற்கு ஊடகங்களை அனுமதிக்க வேண்டும். கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமைக்கு மென்மையான அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிற ஜனநாயக நாடுகளில் இதுவே நடைமுறையாகும். ஆனால், சிலவேளைகளில் பொதுநலனுக்கு உகந்தது எது, பொதுநலனுக்கு பாதகமானது எது என்ற தீர்மானத்தை எடுப்பது எளிதானதாக இருப்பதில்லை. இலங்கை தகவலைப் பெறுவதற்கான உரிமைச் சட்டம் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதால் இந்தப் பிரச்சினை இங்கு மேலும் சிக்கலானதாகிறது. தகவல்களைப் பெறுவதற்கான பொதுமக்களின் உரிமையின் வீச்செல்லை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு எந்தவழிகாட்டல் விதிகளும் இல்லையென்பதாலேயே இச்சிக்கல்.

தனது பொதுமதிப்புக்கு பாதகமான எதுவுமே தடைசெய்யப்படவேண்டுமென்று ஒரு அரசாங்கம் விரும்பும் என்கிற அதேவேளை, ஆளும் அரசியல்வாதிகளின் ஊழல்களும் திறமையின்மைகளும் தவறான நடத்தைகளும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென்று பொதுமக்களின் நலன்கள் வேண்டி நிற்கின்றன. வேறு ஜனநாயக நாடுகளில் அவை பகிரங்கப்படுத்தப்படுகின்றன. நீதிமன்றங்களில் பல வழக்குகளும் இருக்கின்றன. இறுதித் தீர்மானத்தை நீதிமன்றம் எடுக்கும்.

தெற்காசியாவில் இலங்கையில் மாத்திரமே தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் இல்லை என்பது கவலைக்குரியது. 2004ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைக்கான சட்ட மூலத்தை நிறைவேற்றுவதன் மூலம் நல்லாட்சிக்கான ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு இசைவான முறையில் ஒரு ஜனநாயக நாடென்ற வகையில் உரித்தான இடத்தை இலங்கை பெறுவதற்கு அரசாங்கம் வழிவகுக்கும் என்று எதிர்பார்ப்போமாக.

அரசாங்க ஊடகங்களிலும் தனியார்துறைக்குச் சொந்தமான ஊடகங்களிலும் தராதரங்கள் மேம்படுத்தப்படவேண்டும், மேம்படுத்தப்பட முடியும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால், இது சுய ஒழுங்கமைப்பாக இருக்க வேண்டுமே தவிர, தனியார்துறைக்குச் சொந்தமான ஊடகங்களின் மீதான அரசாங்கத்தின் திணிப்பாக இருத்தலாகாது. அரசாங்க ஊடகங்கள் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் அவற்றின் அரசியல் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இது ஏற்புடையதல்ல. அரசாங்க ஊடகங்கள் பொதுமக்களின் நிதியிலேயே நடத்தப்படுகின்றன. அதனால் அவை அவற்றின் அணுகுமுறைகளைப் பொறுத்தவரை பக்கச்சார்பற்றவையாக இருக்கவேண்டும். அத்துடன், அரசியல் சமுதாயத்தின் சகல பிரிவினருக்கும் நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

ஒழுக்கக்கோவையொன்று இல்லாமலேயே அரச ஊடகங்கள் ஊடகத்துறைக்குரிய தொழில்சார் கோட்பாடுகளைப் பின்பற்றுவதையும் ஊடக நெறிமுறையைக் கடைப்பிடிப்பதையும் உறுதிப்படுத்த அரசாங்கத்தினால் முடியும். துரதிர்ஷ்டவசமாக, பிரகீத் எக்னெலிகொட விவகாரத்திலும் அவரைப்போன்று வாழ்வின் பலதுறைகளையும் சேர்ந்தவர்கள் மத்தியில் இருந்து காணாமற்போன எண்ணற்றவர்களின் விவகாரத்திலும் அரசாங்க ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதற்கு கடைப்பிடித்த அணுகுமுறை அவ்வாறானதாக இருக்கவில்லை. அதனால், ஒரு முதற்படியாக, அரசாங்கம் தான் வரைந்திருக்கும் ஒழுக்கக் கோவையை தனது கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களுக்கே பிரயோகிக்க வேண்டும். ■

குசல்பெரேரா






உள்நாட்டு அரசியல்


# 'அவர்களின் சொந்த ஊடகங்களுக்கு' ஒரு ஒழுக்கக் கோவை

அரச ஊடக அமைச்சு வரைந்திருக்கும் ஒழுக்கக்கோவைக்கும் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை

அரசாங்கம் அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கும் ஊடகங்களுக்கான ஒழுக்கக் கோவை (The code of Media Ethics) சகல அச்சு ஊடகங்களுக்கும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் பிரயோகிக்கப்படக்கூடியதாக இருக்கும் என்று தகவல், ஊடகத்துறை அமைச்சு கூறுகிறது. தற்போது இலத்திரனியல் ஊடகங்களுக்கென்று ஒரு ஒழுக்கக் கோவை இல்லை. தகவல், ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அறிந்திருக்காவிட்டாலும் கூட, அச்சு ஊடகங்களுக்கு மிகவும் விரிவானதொரு ஒழுக்கக் கோவை இருக்கிறது. சுதந்திர ஊடக இயக்கத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் (The Editors Guild) வரைந்த இந்த ஒழுக்கக்கோவை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினாலும் (Sri Lanka Press Institute) அதன் முறைப்பாட்டு ஆணைக்குழுவினா

லும் 2001ஆம் ஆண்டு முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரு பிரதான காரணங்களுக்காக அது செயற்படுத்தப்படாமலிருக்கிறது. தங்களது சொந்த ஒழுக்கக்கோவையைக் கடைப்பிடிப்பதில் பத்திரிகை ஆசிரியர்கள் எந்த அக்கறையையும் காட்டுவதாக இல்லை என்பது ஒரு காரணம். என்ன காரணத்துக்காக அவர்கள் தாங்களாகவே ஒரு ஊடக ஒழுக்கக் கோவை யை வரைந்து அதை ஏற்றுக் கொண்டு, பிறகு எளிதாகவே அவமதித்தார்கள் என்ற கேள்வி இங்கு எழுகிறது. பெரும்பாலான ஊடகவியலாளர்கள் இந்த ஒழுக்கக் கோவையையோ தங்களது தொழிலுக்கு அதன் பொருத்தப்பாட்டையோ தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்பது இரண்டாவது காரணம். தங்களது ஆசிரியர்களே இந்த ஒழுக்கக் கோவையைப் பற்றிய அக்கறையில்லாமல் இருக்கும் போது, ஊடகவியலாளர்கள் அதைப்பற்றி ஒரு போதுமே அக்கறைப்படப்போவதில்லை என்பது தர்க்கரீதியான தாகும்.

ஊடகத்துறைக்கென ஒரு தொகுதி ஒழுக்கக் கோவையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத் தரப்பில் இருக்கக்கூடிய காரணம் ஊடகத்துறையில் தொழில்சார் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதுடனோ தரமான முறையில் மக்களுக்குச் செய்திகளை அளிக்கவேண்டிய கடப்பாட்டுடனோ சம்பந்தப்பட்டதல்ல. அரசாங்கத்துக்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்ட கொடுமையான குற்றவியல் அவதூறுச் சட்டத்தை (Criminal Defamation Law) மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையிருப்பதாக அரசாங்கத் தரப்பு எம்.பி.யான சஜின் வாஸ் குணவர்தன பாராளுமன்றத்தில் கூறினார். ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் 'பாதாள உலகக் குண்டர்கள்' போன்று நடந்துகொள்வதைத் தடுக்க வேண்டியிருக்கிறது என்றும் அதற்கு அவர் காரணமும் கூறினார். அரசியல் மந்திகள் வரியிறுப்பாளர்களின் பணத்தை



யும் தேசிய செல்வத்தையும் சூறையாடுவதைத் தடுப்பதற்கு, ஆட்களைத் தாக்குவது, கொந்தராத்துக்கு கொலைகள் செய்வது, பாலியல் வல்லுறவு மற்றும் சிறுவர், சிறுமிகளைக் கூட பாலியல் துஷ்பிரயோகம் செய்வது உட்பட எண்ணற்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு இந்த நாட்டுக்கு எத்தகைய சட்டம் தேவைப்படும் என்பதைப் பற்றி நாம் தற்போது ஆராயாமல் இருப்போமாக....! அரசாங்க உயர்மட்டத்துடன் மிகவும் நெருக்கமானவரான ஒரு எம்.பி.யினால் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் இந்தக் கருத்தையும் அறிமுகப்படுத்தப்பட விருப்பதாகக் கூறப்படும் ஒழுக்கக் கோவையின் நகல்வரைவில் வெளிநாடுகளுடனான உறவு விவகாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஊடகத் தொழில்துறைக்குள் வேறுபட்ட பாதைகளின் ஊடாக பிரவேசிப்பதில் ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு வேறு நலன்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இன்றைய உலகமய யுகத்தில் ('அச்சு', 'இலத்திரனியல்' என்று கலைநுட்ப ரீதியாக அழைக்கப்படுகின்ற) ஊடகம் இணையத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் கூட நகர்ந்து விட்டது. வழமையாக ஊடகங்கள் அரசுக்குச் சொந்தமானவை யென்றும் தனியார்துறைக்குச் சொந்தமானவை என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. ராஜபக்ஷ ஜனாதிபதியாக 7 வருடங்கள், 7 மாதங்களுக்கு முன்னர் பதவியேற்றபோது ஊடகங்கள் அவ்வாறுதான் இருந்தன. போர் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஊடகங்கள் விரைவாகவே வேறுபட்ட வகைப்படுத்தலுக்கும் உள்ளாகின. 'போருக்கு ஆதரவான ஊடகங்கள்', 'போருக்கு எதிரான ஊடகங்கள்' என்று அவை மாறின. அத்தகைய வகைப்படுத்தலுக்குள் ஊடகவியலாளர்கள் தங்களுக்குரிய இடத்தைத் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. போருக்கு எதிரானவர்கள் என்று கருதப்பட்டவர்கள் துரோகிகள் என்றும் புலிகளை ஆதரிக்கும் சிங்களப் புலிகள் என்றும் நாமகரணஞ் சூட்டப்பட்டனர். அவர்களுக்கு எதிராகத் தாக்குதல்கள் இடையறாது தொடுக்கப்பட்டன.

சிங்கள அரசியலுக்கும் தமிழ் அரசியலுக்கும் இடையே கோடு வரையப்பட்டது. தாக்குதலின் போது முதலில் தமிழ் ஊடகங்களே இலக்கு வைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஊடகங்களும் பிரசுர நிறுவனங்களும் தாக்குதலுக்கு இலக்காகின. முதலில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் எஸ்.ராஜன் ஆவார். திருகோணமலை நகரில் அதியுயர் பாதுகாப்பு வலயமொன்றிற்குள் வைத்து 2006 ஜனவரி 24

ஆம் திகதி இக்கொலை, அதுவும் மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்ற 65 நாட்களுக்குள் அது நடந்தது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கி மனிதன் ராஜனைச் சுட்டுக்கொன்றான். 2006 ஜனவரி 2ஆம் திகதி திருகோணமலையில் 5 இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 'சுடர் ஒளி' செய்திப்பத்திரிகையில் புகைப்படங்களைப் பிரசுரித்தமைக்காகவும் இக்கொலைகள் தொடர்பில் புலனாய்வுப் பாணியில் செய்திகளை வெளியிட்டமைக்காகவுமே அவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டு 9 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் 8 பேர் தமிழர்கள். மேலும் 8 பேர் கடத்தப்பட்டார்கள். அவர்களிலும் நால்வர் தமிழர்கள். மேலும் சிலர் காணாமற் போனார்கள். ஊடகங்கள் மீதும் ஊடகத்துறைப் பணியாளர்கள் மீதுமான இத்தாக்குதல்கள் கொழும்பில் சிங்கள ஊடகவியலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதான ஊடகங்களினால் கருத்தில் எடுக்கப்படவில்லை. அவ்வாறு கருத்திலெடுக்கப்பட வேண்டிய அளவுக்கு அவை பாரதூரமான சம்பவங்கள்.

கொழும்பில் ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதில், எதிர்ப்பியக்கங்களை முறியடிப்பதில் சிங்களத் தேசாபிமானத்தினால் செய்ய முடியாமற் போனதை அரச புலனாய்வுப் பிரிவும் பொலிஸும் செய்ய வேண்டியிருந்தது. 2007ஆம் ஆண்டிலும் 2008 ஆம் ஆண்டிலும் பெருவாரியான கைதுகள் இடம்பெற்றன. 'பயங்கரவாதச் சந்தேக நபர்கள்' என்ற பெயரில் அல்லது 'புலிகளுக்கு தகவல் கொடுப்பவர்கள்' என்ற பெயரில் ஆட்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள். அந்த இரு ஆண்டுகளிலும் இரு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். திஸ்ஸநாயகமும் ஜசிகரனும் கூட கைதாகினர். இங்கு ஒரு விசித்திரமான அம்சத்தைக் குறிப்பிட்டாக

> ஒரு காலத்தில் வெறுத்து ஒதுக்கப்பட்ட கொடுமையான குற்றவியல் அவதூறுச்சட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய தேவையிருப்பதாக அரசாங்க தரப்பு எம்.பி. ஒருவர் கூறியிருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஒழுக்கக்கோவை விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கங்களை புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

வேண்டும். இந்தக் கைதுகளுக்கு ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பொலிஸார் தரப்பில் கூறப்பட்டதைக் கேட்டு அவர்களை பொதுமக்கள் கண்களுக்கு 'பயங்கரவாதிகளாகவே' ஊடகங்கள் காட்டின. 'மௌபிம' பத்திரிகையாளர் செல்வி எம்.பரமேஸ்வரியும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பகுதிநேர அறிவிப்பாளர் செல்வி சுசந்தி தம்பிராஜாவும் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்டனர். அவர்களைக் கூட பிரதான போக்கு சிங்கள ஊடகங்களில் சில 'விடுதலை புலிகளின் தற்கொலைக்குண்டுத் தாக்குதல்காரர்கள்' என்றே முதலில் செய்திகளை வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

பிரதானபோக்கு ஊடகங்களும் உழைக்கும் பத்திரிகையாளர்களும் பலவழிகளில் தாக்குதலுக்குள்ளாகிக் கொண்டிருந்த வேளையிலேயே, மேற்கூறப்பட்ட 'போர் ஆதரவு, சிங்கள ஊடக மனப்போக்கு' தோற்றுவிக்கப்பட்டது. இத்தாக்குதல்களில் பன்னிப்பிட்டிய, தெபனமவில் அமைந்துள்ள சிரச தொலைக்காட்சி நிறுவனம் மீதான தீவைப்பும் அடங்குகிறது.

சட்ட மீறல்களைத் தட்டிக்கேட்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் எதிரான அரச அனுசரணையுடனான அதீத ஆரவாரங்களினாலும் ஒன்று விடாமல் சகல கொடூரமான அடக்குமுறைகளையும் ஆதரிப்பதில் வெளிக்காட்டப்பட்ட ஆரவாரங்களினாலும் முதலில் உணர்ச்சியற்றுப் போன சிங்களத் தென்னிலங்கை பிறகு அதன் 'தேசாபிமானத்துக்கு' இணங்கி நடந்து கொண்டது. இதனால் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்கான வெளி பாரதூரமாகக் குறுக்கப்பட்டது. இத்தகைய சூழலில் பெருவாரியான ஊடகத்துறைப் பணியாளர்கள் போருக்கு ஆதரவாகவே செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

சுதந்திர ஊடக இயக்கம் கவலையை வெளிப்படுத்தி எதிர்ப்பியக்கங்களை நடத்தியிருந்தாலும், அதற்கு மட்டுப்பாடுகள் இருந்தன. அந்த இயக்கம் நடைமுறைசார்ந்த ஊடகத்தை ஒருபோதும் பிரதிநிதித்துவப் படுத்தியதில்லை. அத்துடன் பிரதான போக்கு ஊடகத்துறைசார் ந்த அமைப்பாகவும் ஒருபோதும் இருக்கவில்லை. எனவே, வீழ்ச்சி கண்டு கொண்டிருந்த ஊடகக் கலாசாரத்தில் கவனத்தை ஈர்க்கக்கூடிய எந்தவிதமான மேம்பாட்டையும் ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு வலிமை கொண்டதாக சுதந்திர ஊடக இயக்கம் இருக்கவில்லை. பிரபலங்கள் பற்றிய வம்புப் பேச்சுகளுக்கு பெருமளவுக்கு பங்களிப்புச் செய்கிற இலத்திரனியல் ஊடகங்களில் (தொலைக்காட்சி மற்றும் எவ்.எம்.நிலையங்கள்) பணியாற்றுகின்றவர்களில் அதிகம் பேருக்கு ஊழியர்கள் என்ற வகையில் தங்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகள் எவை என்பது கூடத் தெரியாது. ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களுக்கு

நெருக்கமான வர்த்தகர்களின் ஆதிக்கத்தில் இருக்கிற (தேக்கநிலையை அடைந்திருக்கும்) சந்தைப் பொருளாதாரமொன்றில் வாய்ப்புகளுக்காக போட்டாபோட்டியை வேண்டி நிற்கின்ற சமூக-பொருளாதார கலாசாரத்தில் வளர்ந்தவர்கள் அவர்கள்.

அந்தப் பொருளாதாரம் கடந்த 30 வருட காலத்தில் இலங்கையில் ஒரு 'முதலாளித்துவ வர்க்கம்' வளர்ச்சியுற உதவவில்லை. பதிலாக அது அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு நெருக்கமான ஒரு வர்த்தகர் கூட்டத்தை (Business cronies) மாத்திரமே வளர்த்தெடுத்திருக்கிறது. அதனால், பொருளாதாரம் அரசாங்கத்தினாலோ, சந்தையின் இயக்க ஆற்றலினாலோ கட்டுப்படுத்தப்படுவதாக இல்லை. அது பேராசை பிடித்ததும் ஊழல் தனமானதுமான ஒரு அதிகாரக் கும்பலினால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆதாயம் என்று சட்டைப் பைக்குள் போடப்படுகிற ஒவ்வொரு சதத்துக்கும் இந்தக் கும்பலின் அனுசரணை முக்கியமானதாகும். இத்தகைய சூழ்நிலை அரசாங்கத்துடன் எப்போதுமே இணங்கிப் போவதற்குத்தயாராக இருக்கிற ஊடகத்துறை உரிமையாளர்களையும் பிரசுரகர்த்தாக்களையும் கொண்ட குழுவொன்றைத் தோற்றுவிக்கிறது. இதனாற்தான் தங்களது ஊழியர்கள் அச்சுறுத்தப்படும்போது, கடத்தப்படும் போது, சித்திரவதை செய்யப்படும் போது, அல்லது அடாத்தாகக்கைது செய்யப்படும் போது இந்த ஊடக உரிமையாளர்களும் பிரசுரகர்த்தாக்களும் உறுப்பினர்களாக இருக்கின்ற கூட்டு அமைப்புகள் ஆட்சேபிக்காமல் இருந்ததை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. பிரசுரகர்த்தாக்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகிய மூன்று தரப்பினரை உள்ளடக்கிய இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் இடம் பெற்றிருக்கக்கூடிய எந்தவொரு தாக்குதல் குறித்தும் ஆக்ரோஷமாக பிரச்சினை கிளப்பியதில்லை. அந்தவெளிப்படையான கொடூர காலகட்டமே ஜனவரி 2009 இல் சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையையும் கண்டது. அதே வருடம் மே மாத நடுப்பகுதியில் போர் முடிவு க்கு வருவதற்கு முன்னதாக அக்கொலை இடம்பெற்றது.

மூலதன முதலீடுகளின் ஊடாகக் கட்டுப்படுத்தப்படுகின்ற அதே ஊடகங்களின் விரிவாக்கப்பட்ட கட்டத்தில் நாம் இப்போது இருக்கின்றோம். 'அரசுக்குச் சொந்தமானது', 'தனியார் துறைக்குச் சொந்தமானது', என்று ஊடகத்தை இப்போது வகைப்படுத்துவது பொருத்தமானதல்ல. போரின் முடிவுக்குப் பிறகு கொழும்பை மையமாகக்கொண்ட ஊடகங்கள் பாதுகாப்புத்துறையினால் வகுக்கப்பட்டு, ராஜபக்ஷ ஆட்சியினால் ரப்பர் முத்திரை குத்தப்பட்ட கோட்பாட்டுத்தோரணையையே பின் பற்றி வருகின்றன. அதனால், அந்த ஊடகங்கள் யாருக்குச் சொந்தமானவையாக இருக்கின்றன என்பது ஒரு பொருட்டல்ல.

எனவே, இலங்கையில் ஊடகங்கள் சில குடும்பங்களுக்குச் சொந்தமானவையாக, அல்லது ஆட்சியாளர்களுடன் வேறு வர்த்தக முயற்சிகளில் பிணைக்கப்பட்ட தனிநபர்களுக்குச் சொந்தமானவையாக இருக்கின்றன. இவை ராஜபக்ஷ ஆணையின் எல்லைக்குள் தான் இயங்குகின்றன. பெரியவையும் நீண்டகால வரலாற்றைக் கொண்டவையுமான ஊடக நிறுவனங்களும்கூட, அரசியல் அனுகூலத்திற்கான ஒரு முண்டுகொடுக்கும் கருவியாகவே ஊடகத்துறையைப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பரந்த பங்குடைமையைக் கொண்ட நிறுவனங்களையும் விட குடும்பங்களுக்குச் சொந்தமான அல்லது தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்களை கட்டுப்பாட்டிற்குள் எடுப்பது மிகவும் சுலபமானதாகும். அதனால் நாம் இப்போது அரசாங்கத்தினால் நேரடியாக நடத்தப்படுகிற அல்லது மறைமுகமாக (அரசாங்கத்துக்கு நெருக்கமான ஆட்களின் நிதியுதவியுடன்) நடத்தப்படுகிற ஊடகங்களுடனேயே வாழ்கிறோம்.

> **இன்று உண்மையில் எவருக்காவது ஊடகங்களுக்கான நல்லதொரு ஒழுக்கக்கோவை தேவை என்றால், சுதந்திர ஊடக இயக்கத்துடன் சேர்ந்து பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் வரைந்த ஒழுக்கக்கோவையில் சகல மேம்பாடுகளையும் செய்வதே பொருத்தமானதாக இருக்கும்**

'ராவய' சிங்கள வாரப்பத்திரிகை மாத்திரமே இவற்றில் இருந்து வேறுபட்டதாக ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது எனலாம். என்றாலும், 'விழுங்கப்படுவதிலிருந்து' தப்பிப்பிழைப்பதற்கு அப்பத்திரிகை பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. வாசகர்கள், ஆசிரிய பீடத்தவர்கள், ஊடக சுதந்திரத்தை விரும்புகிறவர்களின் பரந்துபட்ட பங்காண்மையைக் கொண்ட பத்திரிகையாக அனேகமாக தெற்காசியாவிலேயே ராவய மாத்திரமே விளங்குகிறது எனலாம்.

எனவே, ராஜபக்ஷ அரசியலுக்குள் கெட்டியாக இயங்குகின்ற அச்சு ஊடகங்களுடனும் இலத்திரனியல் ஊடகங்களுடனும் தான் நாம் வாழ்கிறோம். அதனால், ஊடகங்களுக்கான எந்தவொரு ஒழுக்கக் கோவையுமே நடைமுறையில் பொருத்தமற்றதாகவே அமையும். ஆட்சியாளர்கள் விரும்புகிற வழியில் செயற்படுகிற ஊடகங்களுக்கான ஒழுக்கக்கோவை ஒன்றைப்பற்றியே நாம் பேசிக்

(56ஆம் பக்கம் பார்க்க...)

பொதுசன நூலகம்

கலாநிதி தயான் ஜெயதிலக



# தேசியவாதிகள் கற்க வேண்டிய நடுப்பாதை

**உள்நாட்டு அரசியல்**

ஐ.தே.க.வினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரினதும் தவறுகளின் விளைவாகவே மாகாண சபைகளுக்கும் ஊடகங்களுக்கும் எதிரான தற்போதைய முயற்சிகள் சாத்தியமாக்கப்பட்டிருக்கின்றன

பொதுநலவரசு உச்சி மகாநாட்டுக்கு இன்னும் 6 மாதங்களுக்கும் குறைவான காலமே இருக்கும் நிலையில், அரசாங்கம் ஒரு 'சுற்றிவளைப்புத் தாக்குதலில்' இறங்கியிருக்கிறது. அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்திற்கு சுருக்குப் போடுவது அத்தாக்குதலில் ஒரு பகுதி. மற்றைய பகுதி ஊடகங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கான முயற்சி. உச்சி மகாநாட்டு க்கு முன்னதாக இத்தகைய நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கத்தினால் ஈடுபடக்கூடியதாக இருக்கிறதென்பது பொதுநலவரசு அமைப்பின் பலவீனத்தையே வெளிக்காட்டுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கத்தின் (ஆசியான்) தலைமைப்பொறுப்பை மியன்மாரிடம் ஒப்படைத்தபோது அதன் நடத்தைகளில் மேம்பாடு ஏற்படுவதை ஆசியான் அமைப்பினால் உறுதிசெய்யக்கூடியதாக இருந்தது. ஆனால், பொதுநலவரசு அமைப்பின் நிலையோ மறுதலையானதாக இருக்கிறது.

கொழும்பையோ அல்லது அம்பாந்தோட்டையையோ பொதுநலவரசு பகிஷ்கரிக்க வேண்டுமென்று இல்லை. அந்த அமைப்பின் தலைமைப்பொறுப்பை இலங்கையே அடுத்து ஏற்கவிருப்பதால், பொதுநலவரசின் தராதரங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் இணங்கச் செயற்படுவதை மெய்ப்பித்துக் காட்டியிருக்க வேண்டும். ஊடகச்சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பது மதச் சிறுபான்மையினத்தவர்கள் கண்ணியமான முறையில் நடத்தப்படுவது, ஜனநாயக ஆட்சி முறையையும் சட்டத்தின் ஆட்சியையும் கடைப்பிடிப்பது இதில் முக்கியமானதாகும்.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறையின் பரிமாணங்களை எதிரணியும் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற புத்திஜீவிகளும் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. வடக்கு- கிழக்கு இணைப்புத் துண்டிப்பை விதிமுறைப்படுத்துவதென்பது என்னைப் பொறுத்தவரை குறைகாண முடியாத ஒன்று. ஏனென்றால், உச்ச நீதிமன்றம் இரு மாகாணங்களையும் பிரித்துவிட்டது. உத்தேச அரசியலமைப்புத் திருத்தமானது நடப்பின்படி உண்மையாக இருக்கின்றது மாத்திரமல்ல, சட்டப்படி இருக்கின்றதுமான சூழ்நிலையொன்றுக்கு அரசியலமைப்பு ரீதியான அந்தஸ்தைக் கொடுப்பதாகவே அமைகிறது. எது எவ்வாறெனினும், வடக்கு மாகாணத்தினதும் கிழக்கு மாகாணத்தினதும் இணைப்பு என்பது 1986 நடுப்பகுதியில் அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் காணப்பட்ட முற்போக்கான (ஐக்கியதேசியக் கட்சி- ஜனநாயக இடதுசாரிகள்) கருத்தொருமிப்பின் ஒரு அங்கமாக இருக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தின் பிரதான ஆதரவாளர்களினால் கூட, (அதாவது ஜே.ஆர்.ஜெயவர்தனாவினாலும் விஜேகுமாரதுங்கவினாலும்) இணைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

மாகாணங்களுக்கு பரவலாக்கம் செய்யப்பட்ட அல்லது மாகாணங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளை பாதிக்கக்கூடிய எந்தவொரு சட்டமூலத்தையும் சகல மாகாணங்களினதும் சம்மதத்தைப் பெற்றதன் பின்னரே பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்று தற்போது இருக்கின்ற ஏற்பாட்டுக்குப் பதிலாக பெரும்பான்மையான மாகாண சபைகளின் சம்மதத்தைப் பெற்ற பின்னர் நிறைவேற்றுவதற்கு வசதியாக கொண்டு வரப்படவிருக்கிற புதிய ஏற்பாடு ஆபத்தானதாகும். இது அதிகாரப்பரவலாக்க த்தை சிறிது சிறிதாகக் குறைத்து இறுதியில் ஒன்றுமில்லாததாக்குகின்ற ஒரு தந்திரோபாயமாகும். இதை கெடுபிடி யுத்த கால (Cold War era) சொற்பிரயோகத்தின்படி salami tactics என்று கூறுவார்கள். அதாவது ஒருவரை ஒரே வெட்டில் கொல்வதற்குப் பதிலாக பல தடவைகள் வெட்

டிக் கொல்வதையொத்ததாகும். முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், இது தமிழர்களை மாத்திரம் பாதிக்கப்போவதில்லை. எதிர்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது மாகாண சபையொன்றில் பதவிக்கு தெரிவு செய்யப்படக்கூடிய ஜனநாயக எதிரணியை (ஐ.தே.க.வாக இருந்தாலென்ன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலென்ன, அல்லது ஜே.வி.பி.யாக இருந்தாலென்ன) யும் பாதிக்கும். தற்போது சகல மாகாண சபைகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் கட்டுப்பாட்டில் இருப்பது வேறு விடயம்.

உண்மையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சியினதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் தவறுகளின் விளைவாகவே மாகாண சபைகளுக்கும் ஊடகங்களுக்கும் எதிரான தற்போதைய முயற்சிகள் சாத்தியமாக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் மோசமானவை என்று முன்னர் வர்ணிக்கப்பட்ட கால கட்டங்களில், அதாவது 1970-1977 சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின்போதும் 1977 - 1988 ஜே.ஆர்.ஜெயவர்தன ஆட்சியின் போதும் பாராளுமன்ற எதிர்க்கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மிகுந்த விசையாற்றலுடன் எதிர்த்து நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. சிறிமாவோ காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்தனவும் (பிரேமதாசாவுடன் சேர்ந்து) ஜெயவர்தன காலத்தில் அநுரா பண்டாரநாயக்கவும் எதிர்க்கட்சிக்கு தலைமை தாங்கினர். அநுராவுடன் சேர்த்து எதிர்க்கட்சியில் 8 எம்.பி.க்களே இருந்தனர்.

ஜெயவர்தனவினாலும் அநுராவினாலும் அவ்வப்போதைய அரசாங்கங்கள் அவை நினைத்த மாதிரி நடப்பதைத் தடுக்க முடியாமற் போயிருந்தாலும், அவர்கள் ஒருபோதுமே மௌனமாக இருந்ததில்லை. கர்வத்தனமான அரசாங்கங்கள் உயர்ந்த அரசியல் மற்றும் சமூக விலையைச் செலுத்த வேண்டிய அளவுக்கு தங்கள் செயற்பாடுகளை ஜெயவர்தனவும் அநுராவும் முறையே எதிர்க்கட்சிக்கான தலைமைத்துவத்தை பயனுறுதியுடன் வகித்தார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தற்போதைய தலைவரையே தொடர்ந்தும் வைத்திருப்பதற்கும் அவரின் தலைமைத்துவத்தின் கீழேயே இருப்பதற்கும் தீர்மானித்திருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, ஊடகங்களையும் அதிகாரப் பரவலாக்கலையும் கொலை செய்வதற்கு அரசாங்கம் மேற்கொள்கிற முயற்சிகளுக்கு அவர்களே அரசியல் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் பொறுப்பானவர்களாகிறார்கள். ஐக்கியதேசியக் கட்சித் தலைவரின் புலமையும் எழுச்சியார்வமும் கொண்ட தந்தையார் தனது காலத்தில் பத்திரிகைச் சுதந்திரம் எதிர்நோக்க வேண்டியிருந்த அச்சுறுத்தலுக்கு எதிராக பயனுறுதியுடைய போராட்டத்தை நடத்தினார். இன்று உள்ளதைப் போன்று அன்று உலகளாவிய கட்டமைப்பைக் கொண்டதாகவோ வல்லமை மிக்கதாகவோ ஊடகங்கள் இருக்காத போதிலும் அவர் அவ்வாறு செயற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இதுவிடயத்தில் குறைந்தளவுக்கு குற்றப்பொறுப்பைக் கொண்டதல்ல. 13 ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க அது தவறிவிட்டது. அந்தத் திருத்தத்தின் மீது பற்றுறுதி கொண்டதாக கூட்டமைப்பு இருக்கவில்லை. அந்தத் திருத்தத்திற்கு அப்பால் செல்வதற்கு திருமதி சந்திரிகா குமாரதுங்கவினால் மேற்கொள்ளப்பட்ட துணிச்சலான முயற்சிகளையும் கூட கூட்டமைப்பு ஆதரிக்க மறுத்தது. தமிழ்த்தேசியம் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட) தருணமறிந்து செயற்படவில்லை. தருணமறிந்து செயற்படத் தெரிந்திருக்கவுமில்லை. அது விடுதலைப் புலிகளின் இராணுவத்தின் மீது பந்தயம் கட்டி தோற்றுப்போனது. அதிகாரப்பரவலாக்கலுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிற நெருக்குதல் தமிழ்த்தேசியம் செலுத்த வேண்டியிருக்கும் விலையேயாகும்.

வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரத்திலும் இதே நிலைதான். எமது இராணுவத்தின் பங்கை மாற்றிச் சீரமைப்புச் செய்ய வேண்டும், அது நிலைகொண்டுள்ள பரப்பளவில் குறைப்புச் செய்ய வேண்டும் என்று நிச்சயமாக நான் வலியுறுத்துகின்ற அதேவேளை, வரலாற்று ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான யதார்த்த நிலை என்னை இராணுவங்கள் தாராளமாக இரத்தத்தைச் சிந்தி நீண்டகாலம் போராடி நிலப்பிராந்தியங்களை வெற்றிகொண்ட அல்லது விடுதலை செய்த பெரும்பாலான வரலாற்று நிகழ்வுகள் குறித்துச் சிந்திக்க வைக்கிறது. தங்கள் இரத்தத்தையும் எலும்புகளையும் பசளையாகப் பெற்ற நிலப்பிராந்தியத்தில் உரிமை கொண்டாடுவதற்கான பாத்தியதை தங்களுக்கு இருப்பதாக இந்த இராணுவங்கள் நினைக்கின்றன.

கிளர்ச்சியுடன் எவரும் ஒருபோதுமே விளையாடக்கூடாது

> அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் மீது பற்றுறுதி கொண்டதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இருக்கவில்லை. அந்த திருத்தத்திற்கு அப்பால் செல்வதற்கு திருமதி குமாரதுங்க மேற்கொண்ட துணிச்சலான முயற்சிகளையும் கூட கூட்டமைப்பு ஆதரிக்க மறுத்தது. தமிழ்த் தேசியம் தருணம் அறிந்து செயற்படவில்லை.

என்று மார்க்ஸும் ஏங்கெல்ஸும் அன்று எச்சரித்தார்கள். உண்மையில், விடுதலை அவர்களின் பரந்தளவிலான ஆதரவுக் கட்டமைப்புகளும் அவ்வாறே விளையாடவில்லை. ஆனால், செய்தி தெளிவானது; தோல்வியின் செலவு மிகவும் உயர்ந்ததாகப் போய் விட்டது. சனத்தொகையின் 75 சதவீதமானவர்கள் மத்தியில் இருந்து படையணிக்கு ஆட்திரட்டலைச் செய்யக்கூடிய ஒரு எதிரியுடன் போரைத் தொடுத்து அதில் வெற்றிபெறலாம் என்று ஒருபோதும் நம்பிக்கை வைக்கக்கூடாது. அவ்வாறு செய்யக்கூடிய எவரையும் நம்பி சகல பந்தயங்களையும் கட்டக்கூடாது. ஆனால், தமிழ்த் தேசியவாதம் செய்தது அதைத்தான். வெறித்தனமான வீரசாகசச் செயற்பாடுகளில் இருந்து தூரவிலகியிருந்திருக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் தேசிய முன்னணியும் இன்னமும் அதைச் செய்ய முன்வரவில்லை. பிரபாகரன் மீதும் அவரது விடுதலைப் புலிகள் மீதுமான நேரடியான கண்டன விமர்சனத்தின் வடிவில் இதைச் செய்ய முடியும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பெருமளவு பக்கங்களைக் கொண்ட விமர்சனமொன்றைச் செய்ய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் முடியுமென்றால், நிச்சயமாக அதில் சில பக்கங்களைச் சேர்த்து விடுதலைப் புலிகளையும் விமர்சனம் செய்திருக்க முடியும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் பலவற்றின் தலைவர்கள் பலர் விடுதலைப் புலிகளின் கைகளினாலேயே கொல்லப்பட்டவர்கள்.

அதனால் மேசைமீது இருந்தபோது தாங்கள் ஆதரித்து ஏற்றுக்கொள்ளத் தவறிய யோசனைகளுக்குத் திரும்பிச் செல்வது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் எதிர்பார்க்க முடியாது. புலிகளின் பயங்கரவாதத்தை இப்போது கூட கண்டனம் செய்யாமல் கூட்டமைப்பினர் போர்க்காலத்தில் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் தாங்கள் கடைப்பிடித்த அணுகுமுறையை நாட்டின் ஏனைய பகுதி மக்கள் மறந்து மன்னித்துவிட வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

இப்போது போர் முடிந்துவிட்டது என்பதை அடிப்படையாகக் கொண்டு, வடக்கில் போருக்கு முன்னர் நிலவிய சூழ்நிலைக்குச் செல்லலாம் என்று கூட்டமைப்பு எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் போர் வேறு எதையும் போலன்றி எல்லாவற்றையுமே மாற்றிவிடுகிறது, தோல்வி கண்டவர்களைத் தவிர.

தமிழ்த் தேசியமும் சர்வதேச சமூகமும் குவாட்டமாலாவிலிருந்தும் ஆர்ஜன்டீனாவில் இருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். குவாட்டமாலாவில் ஜெனரல் றியோஸ் மொன்ருக்கும் ஆர்ஜன்டீனாவில் சிரேஷ்ட இராணுவ கமாண்டர் ஜோர்ச் விடெலாவுக்கும் ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. நீதியும் பொறுப்புடைமையும் உண்மையில் சாதிக்கப்படக்கூடியவை. ஆனால், உள்நாட்டுச் செயன்முறைகளின் ஊடாக மாத்திரமே சாத்தியமாகும். அதுவும் கூட பல தசாப்தங்கள் எடுக்கும். ஆட்சியை எதிர்ப்பதற்கு சரியான பகுப்பாய்வு தேவைப்படுகிறது.

ஆட்சியின் கண்களுக்கு சகலவிதமான எதிர்ப்பும் விமர்சனங்களும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சதி முயற்சிகளின் அங்கமாகவே தெரிகிறது. மணிக்கூட்டின் ஊசற் குண்டு தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிரான பக்கத்துக்கு ஆடியசைந்திருக்கிறது. அது சிங்களத் தேசியவாதிகளுக்கு எதிராகவும் கூட ஆடியசையும், பிறகு நடுவில் எங்காவது ஓய்வு கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். சிங்களவர்களும் தமிழர்களும்- சிங்களத் தேசியவாதிகளும் தமிழ்த் தேசியவாதிகளும் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும் - இறுதியில் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ■

> மணிக்கூட்டின் ஊசற் குண்டு தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிரான பக்கத்திற்கு ஆடி அசைந்திருக்கிறது. அது சிங்களத் தேசியவாதிகளுக்கு எதிராகவும் கூட ஆடி அசையும். பிறகு நடுவில் எங்காவது ஓய்வு கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஜனாதிபதி தீய்ன் சீன் அண்மையில் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தபோது பராக் ஒபாமா அவரை வெள்ளைமாளிகையில் வரவேற்றார். உண்மையான சிவிலியன் ஆட்சியை நோக்கிய மாற்றத்துக்காக பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடியதாக பணிகளை இப்போது ஆரம்பிக்க முடியும். 2015 ஜனாதிபதித் தேர்தலில் இருந்து சூகீயை கொடுங்கோன்மையான முறையில் விலக்கி வைப்பது மியன்மார் இராணுவத்துக்கு எந்த மதிப்பையும் கொண்டுவரப் போவதில்லை. மாற்றத்துக்காக மியன்மார் ஆட்சி கட்டமைப்பை திறந்துவிட்டதன் மூலம் இராணுவம் ஏற்கனவே பாராட்டத்தக்க காரியத்தைச் செய்திருக்கிறது. இவ்வாறு நடக்குமென்று எவரும் கற்பனை செய்து பார்த்திருக்கமாட்டார்கள். இத்தகைய செயன்முறைகள் இப்போது அரைவாசியில், இடைநடுவில் நின்றுவிடக்கூடாது. ■

# நவதாராளவாதத்தின் இரண்டாவது அலை



உள்நாட்டு அரசியல்

## காபெட் வீதிகளினால் பூசிமெழுக முடியாத ஏற்றத்தாழ்வும் உடைமை இழப்பும்

இலங்கையில் இராணுவமய மாக்கம் மற்றும் பொறுப்புச் சொல்லுதல், நழுவிச் செல்லும் அரசியல் தீர்வு பற்றிய விவாதங்களின் மத்தியில் பொருளாதார நிலைமாற்றம் பற்றிய கலந்துரையாடல்கள் அரிதாகவே உள்ளன.

கொழும்பு நகரத்தில் காணப்படுகின்ற உயர்ந்த கட்டிடங்களின், நியோன் ஒளியூட்டப்பட்ட பெயர்கள் யாவும் வங்கிகளினதும் சுற்றுலா விடுதிகளினதுமாகவே அமைகின்றன. இவை கொழும்பின் மாய அழகுபடுத்தலுக்கு சாட்சியாக அமைகின்றன. இதுபோன்றதோர் நிலையே நாட்டின் பிறபாகங்களிலும் பரவி வருகின்றது. உதாரணமாக ஒருவர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ-9 வீதி வழியாகப் பயணிக்கும் போது இதனை தெளிவாகக் கண்டுகொள்வார். அதாவது யுத்தம் உக்கிரமாக நடைபெற்ற அவ்வீதியின் இரு மருங்கிலும் கவர்ச்சிகரமான சுற்றுலா விடுதிகளையும் வணிக நிலையங்களையும் வங்கிகளையுமே கண்டுகொள்ள முடிகின்றது. ஆனால், ஏ-9 வீதியில் இருந்து சில நூற்றுக்கணக்கான மீற்றர் உட்செல்லும் ஒருவர் அங்குள்ள குக்கிராமங்களில் போரினால் ஏற்பட்ட சமூக அழிவுகளையும் வறுமையினையும் இராணுவமயமாக்கப்பட்ட பாதுகாப்பற்ற சூழலையும் கண்டுகொள்வார்.



அகிலன் கதிர்காமர்

இது போன்றதாகவே நாட்டின் ஏனைய பகுதிகளின் காப்பெட் சாலைகளுக்கு அருகே காணப்படும் நிர்மாணங்கள, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் உடைமை இழப்புகளையும் மறைக்கின்றன. இந்த நாட்டின் யுத்தத்தின் மரபுரிமையாக அமையும் எதேச்சாதிகாரமும் இராணுவமயப்படுத்தலும் இப்பொருளாதார கட்டமைப்பு நிலைமாற்றத்திற்கு முக்கியமாக அமைகின்றன. அதேசமயம், இதுபோன்ற அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டமும் எழுச்சியும் மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்தே தோற்றம் பெறும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலமான 1970களின் தசாப்த முடிவிலேயே நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை கொண்டுவரப்பட்டதுடன், அக்காலப்பகுதியிலேயே அரசுக்கும் தமிழ் ஆயுத அமைப்புகளுக்குமிடையிலான

போராட்டமும் ஆரம்பமானது. காலத்திற்குக் காலம் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டபோதும் நவதாராளவாதக் கொள்கைகளான வர்த்தக தாராளமயமாக்கம், வெளிநாட்டு முதலீட்டு அதிகரிப்பு, தனியார் மயப்படுத்தல், தொழிலாளர் உரிமை மறுக்கப்படுதல் போன்றன தொடர்ந்திருந்தன. எனினும் நவதாராளக் கொள்கைகளை அக்காலப்பகுதியில் யுத்தத்தின் மீதான கவனத்தின் காரணமாக வேகமாக முன்னெடுக்க முடியவில்லை.

நாட்டில் போர் முற்றுப்படுத்தப்பட்ட காலப்பகுதியுடன் பலதரப்பட்ட சக்திகளும் தோற்றம் பெற்றதுடன், மாற்றங்களும் ஏற்பட்டன. இதனுடன் நவதாராளவாதம் மிக வேகமாக வளர்ச்சிபெற சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அதாவது ஆயுதங்களின் மௌனத்துடன் வந்த பாதுகாப்பு மற்றும் நாட்டின் ஸ்திரம், மற்றும் 2008இல் ஆரம்பித்த சர்வதேச பொருளாதார நெருக்கடியின் விளைவாக சர்வதேசத்தின் ''புதிய சந்தைகளுக்கு'' பெருவாரியான முதலீடுகள் வந்துசேர்ந்தன. இவ்வாறாக ஏற்பட்ட அசைவுகளை அரசாங்கம் தனக்குச் சாதகமான முறையில் வசப்படுத்திக் கொண்டதுடன், நாட்டில் உள்ள சகல பிரச்சினைகளுக்கும் அபிவிருத்தியே தீர்வு என்ற சுலோகத்துடனும் இயங்க ஆரம்பித்தது. ஏதேச்சாதிகார நோக்குடன் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 18 ஆவது திருத்தமும் ஜனாதிபதி ஒரு பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தில் நிலை மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான அதிகாரத்தினைக் கொடுத்தது. அதேசமயம், இந்த அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்ததாக ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் கைமாறல்கள் இவ் ஆட்சியை வலுப்படுத்த உதவின.

யுத்தத்தின் பின் ஏற்பட்ட இரண்டாவது நவதாராளவாத அலை பின்வரும் சர்வதேச முதலீட்டு உட்பாய்ச்சல்களைக் கொண்டமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) உடன்படிக்கையின் பிரகாரம் செய்துகொள்ளப்பட்ட 2.6 பில்லியன் டொலர் ஒப்பந்தம் மற்றும் பலதரப்பு, இருதரப்பு அபிவிருத்தி உதவிகளான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நிதி மூலங்களிலிருந்து பெறப்பட்ட பில்லியன் டொலர் கணக்கான உதவிகள் இறைமை உண்டியல்கள்; (sovereign bonds) 4 பில்லியனின் டொலர் மற்றும் பல பில்லியன் டொலர் நிதிப்பாய்ச்சல் பங்குச் சந்தைக்கும் உள்நாட்டு வங்கிகளுக்கும் நிலம் மற்றும் கட்டிடங்களுக்குமான சொத்துகளினுள் (real estate) உள்நுழைந்தன. பல தேசிய பொருளாதாரக் கொள்கைகளுள் அடங்கும் நிதி மற்றும் வங்கிகளின் ஒழுங்குகளைத் தளர்த்துவதுடன், சர்ச்சைக்குரிய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளும் இச் சர்வதேச நிதி மூலத்தின் பாய்ச்சலை ஊக்குவிக்கின்றன.

சர்வதேச மூலதனம் வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளாலும் நிலம் மற்றும் கட்டிடங்களுக்கான சொத்துகள், உல்லாசப் பயண விடுதிகளை அமைத்தல் போன்றவற்றினாலும் உறிஞ்சப்படுகின்றன. கொழும்பு மற்றும் கரையோர நகரங்களில் நிதிமயமாக்கல் நகர மயமாக்கலுடன் இணைந்ததாகவுள்ளது. நிதி முதலீடுகள் நிலம் மற்றும் காணி சொத்துகளில் உறிஞ்சப்பட்டு அவை ஆரோக்கியமற்ற சுற்றுலாத்துறையிலேயே மீள முதலிடப்படுகின்றது.

நாட்டின் தேசிய நிதிகள் குறுங்கால சர்வதேசக் கடன்களில் தங்கியுள்ளதனால், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுடனேயே இசைந்துபோகின்றது. மேலும் தேசிய நிதிகள் மற்றும் தனியார் நிதிகள் பங்குச்சந்தைகளுக்குள் நுழைவதனால் ஆட்சிக்கு நெருக்கமான நிதி வழங்குனர்கள் அதிக இலாபமடைகின்றனர். 2011 மற்றும் 2012 இல் பங்குச் சந்தைக்கான நிதி வழங்குனர்களின் அழுத்தத்தின் காரணமாக பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர்கள் இருவர் தமது பதவிகளையே இராஜிநாமா செய்து கொண்டனர். மேலும், அண்மையில் திவிநெகும என்ற ஒரு கிராமப்புற அபிவிருத்திச் சட்டமூலம் மீது தெரிவித்த எதிர்ப்பின் காரணமாகவே பிரதம நீதியரசர் மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் அதனைத் தொடர்ந்து பதவி நீக்கமும் கொண்டுவரப்பட்டிருந்தது. திவிநெகும சட்ட மூலம் கிராமிய வங்கிகள், மற்றும் நுண்பாக நிதியியலை ஊக்குவிப்பதற்கு அப்பால் மத்தியில் இருந்து கிராமம் வரையான சலுகைகளைக் கைமாறுவதற்கு வழிவகுக்கக் கூடும். அதற்கு அப்பால் நகர அபிவிருத்தி அதிகாரமானது பாதுகாப்பு அமைச்சின் கீழ் நகரமயமாக்கலைத் துரிதமயப்படுத்துவதற்காகவும் அதற்குள் உள்ளடங்கும் சேரிகளை இல்லாதொழிப்பதற்காகவும் கொண்டுவரப்பட்டது. இவை எல்லாம் நவதாராளவாதத்தினைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளே ஆகும்.

இலங்கையின் சரிசமனற்ற அபிவிருத்தியின் காரணமாக நாட்டின்

**நாட்டின் தேசிய நிதிகள் குறுகியகால சர்வதேச கடன்களில் தங்கியுள்ளதனால் அரசு சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுடனேயே இசைந்துபோகிறது**

**சர்வதேச மூலதனம் வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளாலும் நிலம் மற்றும் கட்டிட சொத்துகள், உல்லாசப் பயண விடுதிகள் அமைத்தல் போன்றவற்றினாலும் உறிஞ்சப்படுகின்றன**

மொத்த தேசிய உற்பத்தியில் 50 வீதம் கொழும்பு மற்றும் மேல்மாகாணங்களுக்கு உரியதாகவுள்ளது. நகரமயப்படுத்தலுடன் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தி மேலும் மோசமடையலாம். தற்போதைய அரசாங்கத்திடம் சமூக நலன்புரித்திட்டங்கள் இல்லை. எங்களுடைய சமூகத்தின் இரண்டு தூண்களாக அமையும் கல்வி மற்றும் சுகாதாரத்துறைகள் கூட வியாபாரத்திற்கான சுற்றுலா வணிகம் போல கையாளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் பல்கலைக்கழகங்கள் மற்றும் வைத்திய சாலைகள் கூட சுற்றுலா விடுதிகளைப் போன்று வடிவமைக்கப்படும் நிலையுள்ளது. நகர மற்றும் கிராமத்தில் இருக்கும் மக்கள் கடன் கலாசாரத்தின் காரணமாக இயலாத நுகர்வாளர்களாக ஊக்குவிக்கப்படுகின்றனர். இங்கு வங்கிக் கடன்கள், லீசிங், தங்க நகை அடைவு ஊடாகக் கிடைக்கப்பெறும் இலாபங்கள் உயரடுக்கு நிதிவழங்குனர்களிடமேயே சென்றடைகின்றது. வடமாகாணம் பல தசாப்தங்களாக யுத்த சூழ்நிலைகளால் சந்தையில் இருந்து தொடர்புற்று இருந்தது. எனினும் தற்போது பாரிய நுகர்வுடன் சந்தையுடன் வடக்கும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மக்கள் அதிக கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வகையில் தான் இந்த இரண்டாவது நவதாராளவாதம் பொருளாதார நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதுடன், கடுமையான ஏற்றத்தாழ்வுகளையும் உடைமையிழப்பினையும் ஏற்படுத்துகின்றது. இவைகளை காப்பட் வீதிகளால் பூசி மெழுக முடியாது.

## எழுச்சியும் நெருக்கடியும்

கடந்த இரண்டு வருடங்களாக ஏதாவதொரு தொழிற்சங்கமானது வேலை நிறுத்தப் போராட்டத்தில் வாராவாரம் குதிக்கின்றது அல்லது முறுகல் நிலைக்குச் செல்கின்றது. 2011 இன் நடுப்பகுதியில் தனியார் துறை ஊழியர்களுக்கான சட்டமூலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான எதிர்ப்புப் போராட்டத்தில், சுதந்திர வர்த்தக மையப்பகுதியின் தொழிலாளி ஒருவர் படுகொலைசெய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2012 ஜனவரி மாத காலப்பகுதியில் தனியார் பல்கலைக்கழகங்களை நாட்டில் அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்திற்கு மாணவர் சங்கங்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டமையினால் பின்னர் அச்சட்டமூலமே கைவிடப்பட்டது. மேலும், எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக 2012 பெப்ரவரியில் கடற்தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது கரையோரப் பகுதிகள் மூடப்பட்டதுடன், அதிலும் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். இவற்றுக்கு அடுத்த படியாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டமையின் காரணமாக மூன்று மாதங்களுக்கு மேலாக பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்பட்டிருந்தன. இப்போராட்டம் நாட்டின் வரலாற்றில் இடம்பெற்ற நீடித்த வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஒன்றாகும். தற்போது மின்சார விலை அதிகரிப்பிற்கு எதிராக பல தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. எனினும் போராட்டங்களின் மூலம் ஒரு சரியான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாயின் இதற்குச் சந்தர்ப்பமாக விவசாயிகளே சூழ்நிலைகளை முன்னின்று ஏற்படுத்த வேண்டும். இதற்காக கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகள் விலை அதிகரிப்பு மற்றும் கடன் கலாசாரம் என்பவற்றை மையப்படுத்தி ஒரு தேர்தல் ரீதியான தொகுதிமாற்றத்தினை ஏற்படுத்துவார்களா என்பதுவே இலங்கை அரசியலின் முக்கிய கேள்வியாகவுள்ளது.

அடுத்துவரும் இரண்டு மூன்று வருடங்களில் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பது யதார்த்தமாகும். ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியானது மிகப் பலவீனமான நிலையிலேயே காணப்படுகின்றது. மேலும் ராஜபக்ஷ ஆட்சி ஐக்கிய தேசியக் கட்சியினுடைய நவதாராளவாத பொருளாதார நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதனால் எதிர்க்கட்சியின் பொருளாதார விமர்சனத்தினையும் மாற்றுக்கான சந்தர்ப்பத்தினையும் அது தடுத்துவிட்டது. தாராளவாதிகள், சர்வதேச செயற்பாட்டுத் தரப்புகள் இலங்கை சம்பந்தமான நடவடிக்கைகள் முழுவதும் சிறுபான்மை மக்களுடைய பிரச்சினைகள் மற்றும் தாராளவாத ஆட்சி பற்றியும் சர்வதேசத்தின் தலையீடுகள் சாத்தியமா என்ற விடயப் பரப்பிலுமே அவர்களது நடவடிக்கைகள் உள்ளன. ஆனால், இவ்வாறான நடவடிக்கைகள் முக்கிய பொருளாதார விடயங்களைக் கையாள்வது இல்லை. மற்றும் இனவாதச் சக்திகளையே பலப்படுத்தி இந்த ஆட்சியின் தேசிய தளத்தினை வளர்க்க உதவுகின்றன. மேலதிகமாக இந்த ஆட்சி சிங்கள-பௌத்த இனவாதச் சக்திகளுக்கு பின்துணையாக இருந்து முஸ்லிம்களுக்கு எதிரான ஓர் வெறுப்பு பிரசாரத்தினை கடந்த மாதங்களாக தொடர்ந்து தூண்டியுள்ளது. இவ்வாறான தேசியவாத அணிதிரட்டல் சிங்கள மக்களை பொருளாதாரப் பிரச்சினைகளின் கவனத்தில் இருந்து திசை திருப்புவதற்காகவே பாவிக்கப்படும்.

இந்தச் சூழலில் ஒரு பொருளாதார நெருக்கடி, அரசியல் மாற்றத்தின் ஊடாக இந்தப் பொருளாதாரச் சரிவையும் இனத்துவ வேற்றுமைகளையும் மீட்டுத் தருமா? அல்லது இப்பொருளாதார நெருக்கடிக்கு முஸ்லிம்களை பலிக்கடாக்களாகவும் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அடக்கு முறைகளுக்குள் இட்டுச் செல்வதாகவுமே அமையுமா? அல்லது அதற்கும் அப்பால் ஒரு பாசிச திசையில் உள்நாட்டு அரசியலைப் பயணிக்க வைக்குமா? மாறாக ஜனநாயக அரசியலை அது தோற்றுவிக்குமா? அது சமூகச் சக்திகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் பொருளாதார ஜனநாயகத் தளத்தினை வளர்ப்பதில் தான் தங்கியிருக்கின்றது. ■



கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்

அவுஸ்திரேலியாவின் அகதிக்கொள்கைகள் கடல்வழி அகதி படகுகளுக்கு ஆதரவாக இல்லை என்பதே உண்மை. இத்தனையையும் மீறி உயிரைப் பணயம் வைக்கும் கடல் வழி அகதிகள் வந்துகொண்டேயிருக்கின்றனர். இனி வரும் காலங்களில் அகதி அந்தஸ்து என்பது தீவிரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஒரு அம்சமாக மாறக்கூடிய அபாயம் எழலாம்

# அவுஸ்திரேலியாவில் தொடரும் அகதிகள் துயரம்

இந்த மாதம் அவுஸ்திரேலியாவில் உலக அகதி வாரம் கொண்டாடப்படும் மாதமாகும். அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் அகதிகள் குறித்து பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது. அவுஸ்திரேலியா அகதிக் கொள்கைகள் இறுக்கமடைந்து வரும் வேளையில், அகதிகள் குறித்து சரியான மதிப்பீடு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்த 2012 -2013க்கான அகதி வருகை 5400 என மதிப்பீடு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அகதி வருகை தாறுமாறாக எகிறியதைத் தொடர்ந்து இந்த மதிப்பீடு மறுபரிசீலனை செய்யப்பட்டு 12,000 என பெப்ரவரி 2012 இல் மீளறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த நம்பிக்கையைத் தகர்ப்பதாக ஜூன் மாத அகதி வருகை 22,500ஐ எட்டியது. தொடர்ந்து 2013-2014 க்கான மதிப்பீடு 13,200 எனக் கணக்கிடப்பட்டது. 2012 ஆகஸ்ட் 13 இன் சலுகை மறுப்புக் கொள்கையின் பின் அதாவது அகதி நிர்ணயம் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே என்று தீர்மானிக்கப்பட்ட பின், 19,760 அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மதிப்பீடு செய்யப்பட்டதை விட அதிகமாகும். இந்த எண்கள் அவுஸ்திரேலியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. மேற்படி புள்ளிவிபரங்களைத் தந்த குடிவரவுத் துறை செயலர் மார்ட்டின் பவல்ஸ் இந்த ஆண்டு ஜூன் 30க்குள் 25000 அகதிகள் வருவார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.



மனிதாபிமான விவகாரம்

இதுவரை அரசு 3.2 பில்லியன் டொலர்கள் செலவழித்துள்ளது என்பது பின்புலத் தகவல்.

அவுஸ்திரேலியாவின் அகதிக் கொள்கைகள் அரசியல், கட்சி மாற்றங்கள் நிகழும் போது மாறி வந்திருக்கின்றன. ஜூலியாவின் அரசும் ஹார்வர்டின் அரசும் ஆட்சியில் உள்ள கட்சியின் அகதிக் கொள்கைகளை மாறிமாறி விமர்சனம் செய்தாலும் கூட இரண்டு கட்சிகளுக்கும் அடிப்படை அணுகுமுறை ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது என்பதே உண்மை.எந்த அரசும் அகதிக் காப்பகமாக அவுஸ்திரேலியா இருப்பதை விட மனித உரிமைக் காவலனாக உலக அளவில் இனம் கண்டு கொள்ளப்படுவதையும், அகதி மாநாட்டின் கையொப்பதாரியாக தன் கடமையைச் செய்யத் தவறவில்லை

என்ற நிரூபணம் தவிர வேறு எந்த வித நோக்கத்தையும் கொண்டிருந்ததா என இனம் கண்டுகொள்ள முடியுமா எனத் தெரியவில்லை. பழைய கள்ளை புதிய மொந்தையில் தருவதைப் போலவே ஒரே அகதிப் பொதியை வேறு வேறு கட்டமைப்புக்குள் அடக்கி அகதிகளைக் கவனித்தன இந்தக் கட்சிகள். பல அகதி நலக் குழுக்களும், அமைப்புகளும் கொடுத்து வரும் குரல்கள் பலனற்றுப் போயின. அகதிப் பிரச்சினை பூதாகரமாக அவுஸ்திரேலியாவில் உருவாகிக் கொண்டுள்ளது என்பது கண்கூடாகும்.

அகதிகள் அவதரிக்கும் நாடுகளாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ள ஆஃப்கான், சூடான், இலங்கை மக்களுக்கு கிட்டும் வருகை விசாக்கள் கூட அகதி அச்சத்தால் நியாயமான காரணங்களுக்கு அப்பாற்பட்டு நிராகரிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக பதூர், பரகத் என்ற இரு ஆஃப்கானிய இளைஞர்கள் பற்றிய செய்தியைப் பார்ப்போம். பதூர்,(29 வயது) துணிச்சலான புகைப்படப் பத்திரிகையாளர். காபூல் அமெரிக்கத் தூதரகத்தில் மக்கள் தொடர்புப் பிரிவில் வேலை பார்த்தவர். வாஷிங்டன் போஸ்ட்டில் இவரது விமர்சனத்துக்குரிய புகைப்படங்கள் வெளியாகின. தனது புகைப்படங்களை கண்காட்சியாக்கும் முயற்சியில் அவுஸ்திரேலியா விசா மறுத்ததினால் வர முடியாமல் போனவர். தொடர்ந்து இவரது பணியில் ஒரு பத்திரிகையாளராக விமர்சனங்களை வெளிப்படுத்தியபோது அச்சுறுத்தல்களே பரிசாக அமைந்தன. தொடர்ந்து வந்த இடர்கள் காரணமாக பதூர் புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்து கோர வேண்டிய சூழல் உருவானது. முடிவு ஆள்கடத்தும் கும்பலிடம் பணம் கொடுத்தே புலம்பெயர வேண்டியதாயிற்று. செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி, ஜாவாவில் இருந்து தனது அவுஸ்திரேலியப் பயணத்தை தொடர்ந்தார்.படகு கவிழ்ந்து ஜகார்த்தா குடிவரவுத் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் இருந்து தப்பிவிட்டார். ஐக்கிய நாடுகள் சபையின் அகதி முகாமில் இடம் கிடைத்தது.

பரகத் அலி ஆஃப்கானில் ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரிந்தார். இதுவே அவருக்கு எதிரானது. அவரைத் தலிபான் குறிவைக்கக் காரணமானது.இதனால் அவர் ஜகார்த்தாவுக்கு வந்து படகுப் பயணத்தின் போது பிடிபட்டார். அவருக்கு மனைவி, மக்கள், வயோதிபத் தாய் ஆகியோர் பாகிஸ்தானில் இருக்கின்றனர். அலி தனது நான்காண்டுகளின் சேமிப்பான சுமார் 11,000 டொலர்களைக் கொட்டி, பாங்கொக், டுபாய், மலேசியா வழியாக இந்தோனேசியாவுக்கு ஆட் கடத்திகள் கொண்டுவந்தனர்.மேலும் எட்டாயிரம் டொலர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு வர படகுச் செலவு தர மேலும் ஆறாயிரம் டொலர்கள் கரைக்கு வந்தவுடன்.

இருவரும் ஒரே படகுப் பயணத்தை ஜகார்த்தாவில் மேற்கொண்டவர்கள். துரதிர்ஷ்டவசமாக படகுப் பயணத்தை கிறிஸ்மஸ் தீவு வரை மேற்கொள்ள முடியாமல் இந்தோனேசியாவுக்குள் அடர்ந்த காட்டுக்குள் கரை தட்டியவர்கள், முடிவில் இந்தோனேசிய அதிகாரிகளிடம் சிக்கியவர்கள், ஐ. நா வின் அகதி ஒப்பந்தத்தில் கையெழுத்துதாரியாக இல்லாத இந்தோனேசியா இவர்களின் உடைமைகளைப் பறித்துக் கொண்டது.

பின்னர் பதூர் அவரது பின்புலம் காரணமாக அகதியாக அவுஸ்திரேலியாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவருடன் படகில் பயணித்த மற்ற அகதிகளின் நிலை என்ன என்று தெரியவில்லை.

பதூர் இங்கு வந்த பின் தனது கடல் பயணத்தின் பயங்கரத்தை விவரித்தார்.அதன் பயங்கரங்களும் அவுஸ்திரேலியாவின் அகதிக் கொள்கைளும் கடல் வழி அகதிப் படகுகளுக்கு ஆதரவாக இல்லை என்பதே உண்மை. இத்தனையையும் மீறி உயிரைப் பணயம் வைக்கும் கடல் வழி அகதிகள் வந்து கொண்டிருக்கின்றனர் என்பதே இக்கட்டுரை எழுதப்படும் தருணம் வரை உண்மையாகும். கடந்த ஆண்டு வெளியான அகதிகள் தொடர்பான மத்திய அமைச்சின் நிபுணர் அறிக்கையின் படி, சுமார் 22 பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. முன்னாள் வான் படைத் தலைவர் அங்குஸ் ஹூஸ்டன் அவுஸ்திரேலியாவின் அகதிகள் தொடர்பான கொள்கைத் திட்டத்தினை வெளியிட்டார். இந்தத் திட்ட அறிக்கையை அவுஸ்திரேலியாவின் பிரதமர் ஜூலியா கில்லார்ட் அங்கீகரித்துள்ளார்.

இந்த அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்கள் :

- உடனடியாக நாரு மற்றும் பாப்புவா நியூகினி போன்ற புற நாடுகளில் அகதி நிர்ணய தொழிற்பாடு நடக்க ஏற்பாடு செய்யப்படும்.
- மலேசியாவுடன் அகதிகள் பற்றி பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கி, அங்கு ஏற்கனவே உள்ள அகதிகள் நிலை பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்
- இந்தோனேசியாவுடன் இணைந்து கூட்டுப் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு கண்காணிப்பு, கூட்டு தேடுதல் மற்றும் கூட்டு மீட்புப் பணிகளைத் தொடங்குதல்
- அவுஸ்திரேலியாவின் அகதி ஏற்பு எண்ணிக்கையை 13,000 இல் இருந்து 20,000 ஆக ஆண்டுக்கு அதிகரிப்பதுடன், வரும் ஐந்தாண்டுக்குள் 27, 000 ஆகக்கூட்டுதல்
- படகு வழி வருபவர்கள் தங்கள் குடும்பத்தை வரவழைக்கும் வசதி அகற்றப்படும்
- சட்டபூர்வமான முறையில், பாதுகாப்பாக , நடைமுறைச் சாத்தியமாகக் கூடிய முறையில் படகுகளைத் திருப்பி அனுப்புதல்
- எதிர்காலத் திட்டமிடலின் போது, மனித நேயத்தினை மட்டும் கருத்தில் கொள்ளாது நேர்மையையும் கருத்தில் கொள்ளுதல்

ஆகிய பரிந்துரைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்ட அறிக்கையை பல கட்சிகள் மிகக் குரூரமானது என எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தவிர அவுஸ்திரேலியாவில் உள்ள அகதிகள் பலர்,

ஆதரவாளர்கள், மற்றும் அகதி உதவி நிலையங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஆனால், இந்தோனேசியா இந்த அறிக்கையை வரவேற்றுள்ளது. இரு தரப்பும் பாதுகாப்பு, மீட்புப்பணி, கடல், வான் வழிச் சோதனைகளை முடுக்கி விட பரஸ்பர ஒத்துழைப்பை வழங்கவும், இணைந்து செயற்படவும் ஒத்துக் கொண்டுள்ளன.

இவ்வறிக்கை வெளிவந்த கையோடு குடிவரவுச் சட்டங்களில் உடனடியாக மாற்றம் கொண்டுவரும் சூழ்நிலை நிலவுகிறது. அதைத் தொடர்ந்தே சலுகை மறுப்பு கொள்கை சட்டமாக்கப்பட்டது.அதாவது செப்டம்பர் மாதத்தின் பின் வந்த, வருகின்ற அகதிகள் தங்கள் குடும்பங்களைக் கொண்டு வர முடியாது.ஹார்வர்ட் அரசின் தற்காலிக அகதி அந்தஸ்தும் இதையே தான் செய்தது. இதனால் தான் படகுகள் பெரியவர்களை மட்டும் அல்லாது குழந்தைகளையும் சுமக்கும் சூழ்நிலையை உருவாக்கி உள்ளது. அவுஸ்திரேலியா ஐக்கிய நாடுகளின் இன்னொரு ஒப்பந்தத்திலும் இணைந்து உள்ளது. அது சிறுவர் பாதுகாப்புக்கானது. "In the best interest of the children" என்பது அவுஸ்திரேலியாவின் தாரக மந்திரமாகும்.


அவுஸ்திரேலியா கையெழுத்திட்டு, பாதுகாப்பு தரக் கடமை பெற்றுள்ள சர்வதேச ஒப்பந்தங்களில் பின்வருவன முக்கியமானவை.

- சிறுவர் உரிமை பாதுகாப்பு ஒப்பந்தம்
- குடியுரிமை, அரசியல் உரிமையைப் பாதுகாக்கும் ஒப்பந்தம்
- பொருளாதார,சமூக, கலாசார உரிமை பாதுகாக்கும் ஒப்பந்தம்
- பெண்களுக்கெதிரான அனைத்து வித துஷ்பிரயோகத்தை அகற்றும் ஒப்பந்தம்
- தண்டனை, சித்திரவதை, குரூரமான, மனிதத்தன்மையற்ற செயல்பாடுகளைத் தடுக்கும் ஒப்பந்தம்
- அனைத்து விதமான இனத்துவேஷங்களையும் அகற்றும் ஒப்பந்தம்

இவை தவிர அவுஸ்திரேலியா, ஐ. நா. சபையின் பாதுகாப்புக் கவுன்சிலுடன் நெருங்கிய தொடர்பும், செயல்பாடும் கொண்டது. பாதுகாப்புக் கவுன்சில் சுமார் இருபது துணைக் கமிட்டிகளைக் கொண்டது. அவற்றின் செயல்பாடுகளில் அவுஸ்திரேலியாவின் பங்களிப்பு கணிசமானது. இத்தனை கடமைகள் இருந்தும் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே நிலையங்களிடம் புற அகதி நிர்ணயப் பணியை ஒப்படைத்து பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்ப்பது உலக அளவில் விவாதங்களை உருவாக்கி உள்ளது . அகதி விரட்டும் பணிக்காக அவுஸ்திரேலியா 2.3 பில்லியன் டொலர்களை இதுவரை செலவிட்டு, மேலும் 3.7 பில்லியன்களை செலவிடவும் தயாராக இருப்பது உலக அரங்கில் விமர்சனத்தை உருவாக்கி உள்ளது.

இனிவரும் காலங்களில் அகதி அந்தஸ்து என்பது தீவிரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஓர் அம்சமாக மாறக் கூடிய அபாயமும் கூட எழலாம். ■

***கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்***
***வழக்கறிஞர் உச்ச நீதிமன்றம்***
***(அவுஸ்திரேலியா)***



என்.சத்தியமூர்த்தி

உள்நாட்டு அரசியல்



# திருத்தம், திருத்தத்திற்கு திருத்தம்... அப்புறம்?

இன்று முதலுக்கே மோசம் என்ற நிலைமை தோன்றிய பின்னரே 13ஆவது திருத்தத்தின் நன்மைகள் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு உறைப்பது போன்ற உணர்வு தோன்றுகிறது

"வாலூ போச்சு, கத்தி வந்தது டும்டும்டும்..." என்ற கதையாக, சுற்றிச் சுற்றி இலங்கை அரசியல் இனப்பிரச்சினையையும் அதற்கான தீர்வை யுமே சுற்றி வந்துள்ளது. முக்கியமாக, ஜெனீவா முதலிய வெளிநாட்டுத் தலங்களில் நிலைகொண்டிருந்த பிரச்சினையின் பல்வேறு பரிணாமங்கள் ஒன்றாக மீண்டும் உருவெடுத்து பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் குறித்த புதிய தேசிய சர்ச்சையாக வலுப்பெற்றுள்ளது. என்றாலும், கட நந்த காலங்களை வைத்துப்பார்க்கும் போது, தற்போதைய நிகழ்வுகள் உப்புச்சப்பு இல்லாத விடயமாக மாறிவிட்டதை தமிழ்ச் சமூகமும், புலம்பெயர்ந்தோரும், அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே, ஒருவித அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே உண்மை.

காரண-காரணிகள் எதுவாயினும், எதிர்பார்த்தது போலவே, ஜெனீவா முன்னெடுப்புகள் இனப்பிரச்சினைக்கான தீர்வைவிட, ''போர்க் குற்றங்கள்'' குறித்தே அதிக கவனம் செலுத்தியது எனலாம். இன்னும் சொல்லப்போனால், இலங்கை அரசும் சரி, நாட்டில் உள்ள பல்வேறு சிங்களக் கட்சிகளும் சரி, எங்கே ''போர்க் குற்றம்'' தங்களது இராணுவத்தினரை மையப்படுத்தி நாட்டிற்கு குந்தகம் விளைவித்து விடுமோ என்ற எண்ணத்திலேயே செயல்பட்டார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது.

அந்த விதத்தில், சர்வதேச சமூகத்தின் வாயை அடைப்பதற்காக அரசால் நியமிக்கப்பட்டதாகக் கூறப்படும் சமரச ஆணைக்குழுவின் அறிக்கை மீதான உலகளாவிய எதிர்பார்ப்பும் கருத்துப் பரிமாறல்களும் கூட எதிர்பார்த்த எந்தவொரு பயனையும் அளித்துவிடவில்லை. இன்னும் சொல்லப்போனால், இனப்பிரச்சினையை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சென்றதன் மூலம் அந்தப் பிரச்சினையும் இலங்கைவாழ் தமிழ் மக்களும் அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுவிட்டனர் என்றே கூற வேண்டும். ஜெனீவா மனித உரிமை கவுன்சிலின் சட்ட-திட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அது அரசைத் தண்டிக்குமே தவிர, தமிழ் மக்களுக்கு எதனையும் உருப்படியாக சாதித்துவிட முடியாது. குறிப்பாக, தமிழ் மக்களின் தேவைகளை அவர்களுக்குத் தேவையான சமயத்தில் இது போன்ற முயற்சிகளால் பெற்றுத்தர முடியாது என்பதையே இவை அனைத்தும் நிரூபித்துள்ளன.

## புதிய அரசியல் சட்டம்?

இந்தப் பின்னணியில், பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் சட்டத்தில் இருந்தே விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஹெல உருமயவின் வாதம் எதிர்பார்த்த அளவிற்கு எடுபடவில்லை என்றே கூற வேண்டும். என்றாலும், இது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் காய்நகர்த்தலின் ஒரு அங்கமே என்று கருதி செயல்பட்டோர், அதனை விரக்தியுடனும், விசனத்துடனும் நோக்கினார்கள் என்பதே உண்மை.

இந்தப் பின்னணியில், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தற்போ

தைய அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், தடலடியாக அதற்கு ஒரு வரிவடிவத்தை முன்வைத்ததும் எதிர்பார்த்திராக ஒன்று எனலாம். அரசியல் ரீதியாக, விலைவாசி உயர்வு, மின் கட்டண அதிகரிப்பு மற்றும் நாடெங்கிலும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் பறிப்பு போன்ற பல்வேறு அண்மைக் கால நிகழ்வுகளை அல்லது குற்றச்சாட்டுகளை பின்தள்ளிவிட்டு இனப் பிரச்சினை உட்பட்ட அரசியல் சட்ட பிரச்சினைகளை மீண்டும் தூக்கி முன்னிறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியல் சட்டம் குறித்து பேசுவதற்கு முன்னரே, ஹெல உருமயவின் கோரிக்கை, பாராளுமன்ற செயலகத்தில் தனிநபர் தீர்மானமாக முன்வைக்கப்பட்டது. அதன் சாராம்சம், மாகாணங்களுக்கு காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களை வழங்கும் பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை முழுவதுமாக திரும்பப்பெறுவதாக இருந்தாலும், கட்சித் தலைவர்கள் என்னவோ, இந்த இரண்டு முக்கிய அதிகாரங்களை மட்டுமே குறிவைப்பதாகத் தோன்றியது. அது போன்றே, ஐக்கிய தேசியக் கட்சியின் சட்ட முன்மாதிரி குறித்து கருத்துத் தெரிவித்த ''சிங்களத் தேசியவாத'' இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி, மாகாண சபைகளே தேவையில்லை என்ற தங்களது முந்தைய முடிவை மட்டுமே வலியுறுத்தியது.

இந்தப் பின்னணியில் தான், அரசு தரப்பும் பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தில் உடனடியாக இரண்டு மாற்றங்களைக் கொண்டுவர இருப்பதாக அறிவித்தது. ஆனால், முந்தைய பத்திரிகைச் செய்திகளும் அரசியல் கிசுகிசுக்களும் கூறியது போல் அல்லாமல், அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் குறித்தன அல்ல. மாறாக, இரண்டுமே மாகாண சபைகளின் சட்ட நிறைவேற்றல் அதிகாரங்கள் குறித்தவையே. என்றாலும், இனப்பிரச்சினையை

# ஐ.தே.க.வின் யோசனைகளில் தீர்வுகளைவிட பிரச்சினைகளே அதிகம்

கூர்ந்து நோக்காவிட்டால், ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள அரசியல்சட்ட மாற்றங்கள் குறித்த கருத்துகளில் உள்ள பிரச்சினைகள் சரியாக கண்ணிற்குத் தெரியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவர் வகிக்கும் ''நிறைவேற்று ஜனாதிபதி'' பதவியையும் மட்டுமே மனதில் நிறுத்தி வரையப்பட்டுள்ள இந்த மாற்றங்களில் தற்போதைய நிலைமைக்கான தீர்வுகளை விட மேலும் பிரச்சினையான விடயங்களே அதிகமாக உள்ளன.

சாம்பிளுக்கு இதோ ஒன்று. நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதாக நினைத்துக் கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளுக்கு நேரடி தேர்தல் நடைபெற வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளது. இப்போதுள்ள முறைப்படி, நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதாலேயே ஜனாதிபதிக்கு அதீத அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்ற வாதம் ஒரு காலத்தில் முன்வைக்கப்பட்டது.



அதுவே எதேச்சாதிகாரமாக மாறிவிட்டது என்ற கருத்து கடந்த சில தசாப்தங்களாகவே நிலவி வருகிறது. இந்தப் பின்னணியில், நேரடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதியும் பிரதமரும் இரண்டு வேறு கட்சிகளையோ, கூட்டணியையோ சார்ந்திருந்தால் அதுவே புதிய குழப்பங்களுக்கு வித்திடும். நேரடித் தேர்தல் இல்லாமலே ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையேயான பனிப்போர் பிரசித்தமானது. அதிலும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இரண்டு கட்சிகளைச் சேர்ந்திருந்து, பாராளுமன்ற மெஜாரிட்டி பெற்ற அந்த இருவரில் ஒருவர் மற்றவரை உதாசீனப்படுத்துவது தவிர்க்க முடியாத அரசியல் நிலைமையாகும். அதுவே, பாராளுமன்றத்தில் மூன்றாவது அணியொன்று உருவாகுமேயானால், வேறு எந்தப் பிரச்சினையும் தேவையில்லை!

ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்துகள் தற்போதைய தேசிய அரசியல் நிலையை முன்வைத்து மட்டுமே எடுக்கப்பட்டதாக எண்ண இடமிருக்கிறது. உதாரணத்திற்கு, ஜனாதிபதி மஹிந்தவை தேர்தலில் தோற்கடிக்கவும் வேண்டும், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதாகவும் காட்டவேண்டும். தற்போது கூறப்பட்டுள்ள முறைப்படி, மஹிந்தவை எதிர்ப்பதற்காக இரண்டு முக்கிய எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டணி அமைத்து, வெற்றி பெற்றால் தங்களுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்தும் கொள்ளலாம். இரண்டு அதிகார மையங்களை உருவாக்கி கூடுதல் குழப்பத்தை உருவாக்கலாம்.

மாகாண அரசியல் மற்றும் அரசு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, ஒற்றையாட்சி முறையின் கீழ் ''அர்த்தமுள்ள'' வகையில் அதிகாரப்பரவல் செய்யப்படும் என்று கூறியுள்ளது. கேட்பதற்கு இது நன்றாக இருந்தாலும், 'அர்த்தமுள்ள' என்ற அந்த பதத்திற்கு உண்மையில் என்ன பொருள் என்பதை அந்தக் கட்சி குறிப்பாக தமிழ்ச் சமூகத்திற்கும் கூட்டணிக் கட்சி என்று கூறிக்கொள்ளும் கூட்டமைப்பிடமும் பகிரங்கமாகத் தெரியப்படுத்த வேண்டும். இல்லையென்றால், கடந்த காலமே தொடர் கதையாக மாறிவிடும். எது எப்படியோ, இப்போது இருக்கும் பிரச்சினைகளுக்கு புதிய பிரச்சினைகள் முடிவல்ல.

முன்னிறுத்திப் பார்க்கும் போது, தமிழ் மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் முக்கியமானவையாகவே அவற்றைக் கருத வேண்டும்.

இதன்படி, மொத்தமுள்ள இரண்டு அல்லது அதிகப்படியான மாகாணங்களை இணைத்து புதிய மாகாணமாக உருவாக்குவதற்கு ஜனாதிபதிக்கு தற்போதுள்ள அதிகாரத்தை இரத்துச் செய்யக்கோரி, அரசு தரப்பு பாராளுமன்றத்தை அணுக இருந்தது. பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தில் இப்படியோர் திருத்தத்தை முன்வைப்பதற்கு அவசியமே இல்லை. எப்போது, 2006-ஆம் ஆண்டின் உச்சநீதிமன்ற தீர்ப்பை காரணம்காட்டி, ஒன்றுபட்ட வடகிழக்கு மாகாணத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களாக ராஜபக்ஷ அரசு மீண்டும் பிரித்து விட்டதோ, அதன் பிறகு வேறு எந்த இரண்டு மாகாணங்களையும் இணைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றாகிவிட்டது.

ஒப்புக்காயினும், இனப்பிரச்சினைக்கான முடிந்த முடிவாக மீண்டும் வட-கிழக்கு இணைப்பு ஏற்றுக்கொள்ளப்படுமேயானால், தற்போதைய சட்டதிருத்தத்தை திருத்தியாவது அந்த இணைப்பு செயல்படுத்தப்படும் என்பதே உண்மை. அதன்படி, ''சந்திரிகா தீர்வின்'' அடிப்படையில் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு வடக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களோடு இணைக்கப்படலாம். என்றாலும், தற்போது இத்தகைய சட்டமாற்றத்திற்கு அவசியமே இல்லை.

ஆனால், அரசு முன்வைத்துள்ள இரண்டாவது சட்டத்திருத்தம் சிறிது பிரச்சினையானது எனலாம். இது அரசு முன்பே பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றியுள்ள ''திவிநெகும'' சட்டத்தின் முழு வீச்சையும் உறுதி செய்வதற்காகவே முன்வைக்கப்படுகிறது எனலாம். பதின்மூன்றாம் திருத்தத்தின் அடிப்படையில், மாகாணங்களைப் பாதிக்கும் எந்த ஒரு சட்ட முன்வடிவும் நாட்டிலுள்ள ஒன்பது மாகாண சபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே, அதனைப் பாராளுமன்றத்தின்முன் வைக்க முடியும். ''திவிநெகும சட்டம்'' தொடர்பான வழக்கில் பாராளுமன்றத்தால் பதவி பறிக்கப்பட்ட தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா தலைமையிலான உச்சநீதிமன்றம் இதனை உறுதி செய்தது.

தற்போது அரசு முன்வைத்துள்ள கருத்தின்படி, இது போன்ற சமயங்களில் அனைத்து மாகாண சபைகளின் அனுமதிக்குப் பதிலாக பெருவாரியானவற்றின் ஆதரவு பெற்றாலே, மாகாணங்களின் அதிகாரங்களைப் பாதிக்கும் சட்டமுன்மாதிரி பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்படலாம். தற்போது நிலவும் அரசியல் சூழலிலும் எப்போதுமே நிலவும் இனப்பிரிவுகளின் அடிப்படையிலும் தமிழ் பேசும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டுமே எந்தவொரு காலகட்டத்திலும் இதுபோன்ற சட்டங்களுக்கு எதிர்ப்புத் தோன்றும்.

இன்னும் சொல்லப்போனால், பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தின் இந்த உட்பிரிவே, மாகாணங்களுக்கு, அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களின் மீதான ''வீட்டோ'' அதிகாரத்தை வழங்கி இருந்தது. ஆனால், அதனை தமிழ்ச் சமூகம் உணரவும் இல்லை, தமிழ் அரசியல் தலைமைகள் ஆதரிக்கவும் இல்லை. இன்று முதலுக்கே மோசம் என்ற நிலைமை தோன்றிய பின்னரே, பதின்மூன்றாம் சட்டத்திருத்தத்தின் நன்மைகள் அவர்களுக்கு உறைப்பது போன்ற ஒரு உணர்வு தோன்றுகிறது.

அரசின் இந்த புதிய முஸ்தீபை, அமைச்சரவைக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவாநந்தா மற்றும் இடதுசாரித் தலைவர்கள் எதிர்த்ததாக செய்திகள் கூறுகின்றன. இவர்களில் ஹக்கீம், புதிய சட்டமுன்வடிவை ஆராய்ந்து படிப்பதற்கு தனது கட்சிக்கு கால அவகாசம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டதை அடுத்து, பிரச்சினை இரண்டு வார காலத்திற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், ஆட்சிக்கு வெளியே இருக்கும் கூட்டமைப்போ, வழக்கம் போலவே, அரசின் முயற்சியைக் கண்டித்து அறிக்கை மட்டுமே விட முடிந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால், அரசு தரப்பில் உள்ள சுமார் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதின்மூன்றாவது திருத்தத்தில் எந்தவொரு திருத்தத்தையும் அனுமதிப்பதில்லை என்று சில மாதங்களுக்கு முன்னரே கூடி முடிவெடுத்த காரணத்தினால் மட்டுமே அது போன்ற மாற்றங்கள் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது. மற்றப்படி, இந்த அரசோ, இலங்கையில் உள்ள எந்த அரசோ, தமிழ்ப் போராட்டங்களுக்கு செவி சாய்த்ததும் இல்லை, சர்வதேச சமூகத்தைப்பற்றி அளவுக்கதிகமாக கவலைப்பட்டதும் இல்லை!

என்றாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வை பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் முடிவு செய்வதில் அரசு மீண்டும் ஆர்வம் காட்டுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அது எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவாக இருக்கலாம். அல்லது, அதனையும் தாண்டி அந்த அமைப்பின் தலைமை இலங்கையிடம் இருக்கும் போது இது போன்ற பிரச்சினைகளில் அரசு இன்னும் சிக்கித்தவிக்கிறது என்பதற்குப் பதிலாக அதற்கு தீர்வு காண்பதில் முனைப்புக் காட்டுகிறது என்று காட்டிக்கொள்வதற்காகவும் இருக்கலாம். அல்லது, இவை எதுவுமே இல்லாமல் உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசு ஆர்வமாகவே இருந்திருக்கலாம்.

எது எப்படி இருந்தாலும், பாராளுமன்ற தெரிவுக்குழு குறித்துப் பேசும் அரசு, அவசர அவசரமாக பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தைத் திருத்துவதற்கு அவசியமே இல்லை என்றே தோன்றுகிறது. இந்தப் பிரச்சினைகளும் சரி, அல்லது ஐக்கிய

*(47ஆம் பக்கம் பார்க்க...)*

சர்வதேச விவகாரம்



எட்வேர்ட் சிநோடன்

# அமெரிக்காவின் இணையத்தள வேவுவேலை

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு தருணமும் எதேச்சாதிகாரத்தையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் சகித்துக் கொள்ள முடியாத சொற்ப எண்ணிக்கையான தனிநபர்களுக்கு ஏற்படுகின்ற அதி விசேடமான தைரியத்தின் விளைவாகவே தலைப்புச் செய்திகளாகின்றன

இணையத்தள நிறுவனங்களில் இருந்தும் (யாஹூ, அப்பிள், ஃபேஸ்புக், ருவிட்டர், மைக்ரோ சொப்ட் போன்றவை) வேறுபலவழிகளிலும் உலகளாவிய அளவில் தனி நபர்களினாலும் அரசுகளினாலும் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்களையும் கருத்துப்பரிமாற்றங்களையும் அமெரிக்காவின் தேசியபாதுகாப்பு நிறுவனம் (US National Security Agency) அவர்களுக்குத் தெரியாமல் பதிவு செய்திருக்கிறது என்ற இரகசியத்தை பிரிட்டனில் இருந்து வெளியாகும் த கார்டியன் பத்திரிகை வெளியிட்டிருப்பதையடுத்து சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சை மூண்டிருக்கிறது.

கார்டியனுக்கு இத்தகவல் எப்படிக் கிடைத்தது என்ற கேள்வி எழுந்தபோது அதைத் தங்களுக்கு அளித்தது அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.யில் மூன்றே மாதங்கள் பணியாற்றிய 29 வயதான எட்வேர்ட் சிநோடன் என்று அப்பத்திரிகை சொல்லிவிட்டது. இதற்கு ஆதாரமாக அவரின் வீடியோ நேர்காணலும் வெளியிடப்பட்டது.

அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு நிறுவனம் இரகசிய முறையில் தகவல்களைச் சேகரிப்பதற்கு பயன்படுத்தும் அணுகுமுறைகளில் தனக்கு உடன்பாடு இல்லை என்பதால் தான் அவை தொடர்பான இரகசியங்களை அம்பலப்படுத்தத் தீர்மானித்ததாக சிநோடன் அப்பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

'ஆட்சிமுறையில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி பராக் ஒபாமா தவறி விட்டார். ஆட்சியில் நடைபெறும் இரகசியச் செயல்களை மக்களிடம் தெரிவிக்க வேண்டுமென்ற மனச்சாட்சியின் உந்துதலின் படியே நான் செயற்பட்டிருக்கிறேன். உலகில் உயிர்வாழவும் எனக்கு விருப்பமில்லை. என்மீது எந்தவகையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று எனக்குத் தெரியும்' என்று சிநோடன் கூறியிருக்கிறார்.

அவர் தற்போது ஹொங்கொங்கில் இருக்கிறார். தன்னை ஹொங்கொங்கில் இருந்து நாடு கடத்தமாட்டார்கள் என்று நம்பிக்கையும் வேறு வெளியிட்டிருக்கிறார். இணையத்

தளங்களில் பரிமாறப்படும் தகவல்களை இரகசியமான முறையில் அமெரிக்காவினால் பதிவுசெய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபையை சீனா கேட்டிருக்கும் நிலையில், சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங் சிநோடன் விவகாரத்தில் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை உலகம் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஒபாமா நிருவாகத்தைப் பொறுத்தவரை சிநோடனை அமெரிக்காவுக்குக் கொண்டுவந்து விசாரிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கும் என்பதிற் சந்தேகமில்லை. அமெரிக்கப் புலனாய்வு நிறுவனத்தின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக சிநோடன் மீது கடுமையாகக் குற்றஞ்சுமத்தியிருக்கும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் இந்த ‘தேசத்துரோகச் செயலுக்காக’ அவரைக் கைது செய்து தண்டிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இரகசிய நடவடிக்கைகள் அம்பலமானமை தொடர்பில் அமெரிக்க நீதித்துறை விசாரணையை ஏற்கனவே ஆரம்பித்தும் விட்டது. சிநோடனுக்கு எந்த நாடும் அடைக்கலம் கொடுக்கக் கூடாது என்றும் வாஷிங்டன் கேட்டிருக்கிறது.

PRISM என்று அழைக்கப்படுகின்ற செயற்திட்டத்தின் ஊடாகவே அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு நிறுவனம் தனிநபர்களினாலும் அரசுகளினாலும் பரிமாறப்படும் தகவல்களை இரகசியமான முறையில் பதிவு செய்துவந்திருக்கிறது. அமெரிக்கா அனைவரையும் உளவு பார்க்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. தங்களின் தொலைபேசி உரையாடல்க ளும் இரகசியமாகப் பதிவு செய்யப்படுகின்றன என்ற செய்தி அமெரிக்கர்களிடையே பெரும் எதிர்ப்பைத் தோற்றுவித்திருக்கிறது. பயங்கரவாத அச்சுறுத்தலை அமெரிக்கா எதிர்கொண்டுள்ளதால் தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்வது தவிர்க்க முடியாதது என்று ஒபாமா நிருவாகத்தின் தரப்பில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது.










**சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங் சிநோடன் விவகாரத்தில் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை உலகம் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது**

‘அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு நிறுவனம் வெளிநாட்டவர்களைத் தான் உளவு பார்த்ததே தவிர, எந்தவொரு அமெரிக்காவின் தனிமனித சுதந்திரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தவும் இல்லை. சட்டதிட்டங்களை மீறவும் இல்லை. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பையும் நாட்டுநலனையும் கருதிச் செய்யப்பட்டதுதான் இந்த இணையத்தள கருத்துப் பரிமாற்றங்களைக் கண்காணித்த செயல்’ என்று ஒபாமா விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இப்போது தெரியவந்திருக்கும் மிகப்பெரிய உண்மை அமெரிக்கர்களாக இருந்தாலென்ன, அமெரிக்கர்கள் அல்லாதவர்களாக இருந்தாலென்ன சகலரினதும் இலத்திரனியல் தொடர்பாடல்கள் இரகசியமான முறையில் ஒபாமா நிருவாகத்தில் பதிவு செய்யப்படுகின்றன என்பதுதான்.

அமெரிக்காவின் இலட்சக்கணக்கான இராஜதந்திர கேபிள்களையும் அந்தரங்க பாதுகாப்பு ஆவணங்களையும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய அமெரிக்கரான பிராட்லி மானிங் மீதான வழக்கு விசாரணை ஆரம்பமாகியிருக்கும் நிலையில், அதுவும் அவரை அமெரிக்க அதிகாரிகள் நடத்தியமுறை குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கடுமையான கண்டன விமர்சனங்களைச் செய்துவரும் நிலையில், சிநோடன் விவகாரத்தைக் கையாளுவதற்கு அமெரிக்க நிருவாகம் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறைகள் மேலும் சர்ச்சைகளைத் தோற்றுவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

தனிமனித சுதந்திரத்தில் தலையிடும் செயலாக இருந்ததால் அமெரிக்காவின் இந்த இணையத்தள வேவு வேலையை அம்பலப்படுத்தியதாக உலகிற்குப் பிரகடனம் செய்திருக்கும் சிநோடன் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர். தேசப்பற்று என்ற பெயரில் அமெரிக்க நிருவாகத்தின் சகல விதமான அடாவடித்தனங்களையும் நியாயப்படுத்துவதில் எந்தவித அசௌகரியத்தையும் எதிர்நோக்காதவர்களுக்கு அவர் ஒரு தேசத்துரோகியே.

ஆனால், ஒரு மகத்தான உண்மையை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்; ‘சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு தருணமும் எதேச்சாதிகாரத்தையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் சகித்துக் கொள்ள முடியாத சொற்ப எண்ணிக்கையான தனிநபர்களுக்கு ஏற்படுகிற அதிவிசேடமான தைரியத்தின் விளைவாகவே தலைப்புச் செய்திகளாகின்றன.’ ■

- ராகுல்ஜி

# ராஜ்ய சபா தேர்தல் முதல்வர் ஜெயலலிதா அடித்த 'லாஸ்ட் மினிட் கோல்'

**4 ஆசனங்கள் அண்ணா தி.மு.க.விற்கு. ஐந்தாவது ஆசனம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு. ஆறாவது ஆசனத்திற்கு தி.மு.க.வும் விஜயகாந்த் கட்சியும் மல்லுக்கட்ட வேண்டிய நிலை**

திரும்பிப் பார் என்ற வார்த்தை தமிழகக் கூட்டணி அரசியலுக்கு முற்றிலும் பொருந்தும். அப்படியொரு நிலைதான் இப்போது நடைபெறுகின்ற தமிழகத்தில் ராஜ்ய சபை உறுப்பினர் தேர்தலில் ஏற்பட்டிருக்கிறது. ஜூன் 27ஆம் திகதி நடக்கவிருக்கும் ஆறு ராஜ்ய சபை பதவிகளுக்கான தேர்தலில் முக்கிய கட்சிகள் எல்லாம் முஷ்டியை உயர்த்திக்கொண்டு நிற்கின்றன. 'யாருக்கு வெற்றி கிடைக்கும்' என்ற கேள்விக்கு பதில் தேடும் படலமும் 'சிந்துபாத்' தொடர் போல் நீடிக்கிறது. அ.தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்தால் காலியாகின்ற ஆறு ராஜ்ய சபைப் பதவிகளில் ஐந்து பதவிகளை சுலபமாகப் பிடித்து விட முடியும். ஆறாவது இடத்தில் தே.மு.தி.க.வோ, தி.மு.க.வோ போட்டி போட்டுக் கொள்ள முடியும். ஆனால், அ.தி.மு.க. ஐந்து ராஜ்யசபைப் பதவிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்தது திகில் திருப்பமானது. இது தி.மு.க.வை மட்டுமன்றி, அ.தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளான சி.பி.ஐ மற்றும் சி.பி.எம் போன்ற கட்சிகளையும் மிரட்டி விட்டது. வேட்பாளர்களாக ஆறு பேர் மட்டுமே நின்றால் தேர்தல் வராது. போட்டியின்றி தேர்வு செய்யப்படுவதாக அறிவிக்கப்படுவார்கள். ஆனால், அதற்கு மேல் ஒருவர் களத்தில் குதித்து விட்டால் தேர்தல் தவிர வேறு வழியில்லை. அவர்களில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதைப் பார்ப்பதே கண்கொள்ளாக் காட்சி என்று மக்கள் காத்திருக்கின்றனர்.

காலியாகும் ஆறு பதவிகளில், கனிமொழி, திருச்சி சிவா (தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்), இளவரசன், டாக்டர் மைத்ரேயன் (அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். காங்கிரஸ் தரப்பில் ஞானதேசிகனும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டி.ராஜாவும் இருக்கிறார்கள். ஆனால், இந்தக் கட்சிகளில் அ.தி.மு.க. தவிர மற்றக் கட்சிகள் அனைத்துமே எப்படி தங்கள் கட்சி வேட்பாளர்களை ஜெயிக்க வைப்பது என்ற பீதியில் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இரு எம்.பி.க்களை இழக்கும் தி.மு.க. ஒரு ராஜ்ய சபை எம்.பி.யையாவது தக்க வைக்கப் போராடுகிறது. ஒரு எம்.பி.



அண்ணா தி.மு.க. வேட்பாளர்களுடன் ஜெயலலிதா

வேட்பு மனு தாக்கல் செய்த பின்னர் ஸ்டாலின் சகிதம் கனிமொழி

சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

பதவியை இழக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதையாவது மீட்க கச்சை கட்டி நிற்கிறது. காங்கிரஸ் கட்சியோ 'கப் சிப்' என்று இருந்ததையும் இழந்து விட்டு நிற்கிறது!

இப்போது வருகின்ற 27ஆம் திகதி தேர்தல் நடக்கும் ராஜ்ய சபைத் தொகுதிகள் மொத்தம் ஆறு. அவற்றிற்கு முதலில் அ.தி.மு.க.தான் தன் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது. அ.தி.மு.க. தனது கட்சியின் சார்பில் டாக்டர் மைத்ரேயன், கே. ஆர்.அர்ஜுனன், கு.தங்கமுத்து, டாக்டர் இலக்குமணன், ரத்னவேல் ஆகிய



ஐந்து வேட்பாளர்களை அறிவித்து, அவர்கள் வேட்பு மனுவும் தாக்கல் செய்தாகி விட்டது. இதில் கு.தங்க முத்துதான் அதிர்ஷ்டசாலி. ஏனென்றால் இவரது பெயர் முதல் பட்டியலில் இல்லை. முதலில் அறிவிக்கப்பட்ட அ.தி.மு.க. மாணவரணிச் செயலாளர் சரவணபெருமாள் கஸ்டம்ஸ் துறை தொடர்ந்த வழக்கு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார் என்ற தகவல் 'லீக்' ஆனது. அதனால் அவரை அதிரடியாக நீக்கி விட்டு, தங்கமுத்துவை புதிய ராஜ்ய சபை வேட்பாளராக அறிவித்தார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா. அ.தி.மு.க. வேட்பாளர்கள் ஐவரில் முக்குலத்தோர், வன்னியர், பிராமணர், 24 மனை தெலுங்கு செட்டியார், படுகர் ஆகிய சமுதாயங்களைச் சார்ந்தவர்களை இந்த முறை நிறுத்தியிருப்பது வித்தியாசமான முயற்சி. சிறுபான்மை சமுதாயத்தினர் யாரும் இடம்பெறவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதே மாதிரி டாக்டர் மைத்ரேயனுக்கு மூன்றாவது முறையாக ராஜ்ய சபை எம்.பி. பதவி யோகம் தேடி வந்திருக்கிறது. அ.தி. மு.க.வில் மூன்றுமுறை ராஜ்ய சபை எம்.பி. பெற்ற முதல் நபர் என்ற பெயரைத் தட்டிச் சென்றுள்ளார் டாக்டர் மைத்ரேயன். டாக்டர் ராமதாஸ் கைது, அ.தி.மு.க. அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் நீக்கம் போன்ற



அதிருப்தியை நீக்க, அதே வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த டாக்டர் லட்சுமணனுக்கு ராஜ்ய சபை எம்.பி. பதவி வழங்கியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

அ.தி.மு.க. சார்பில் 'ஐவர்' நியமிக்கப்பட்டுவிட்டதால் படு டென்ஷனானது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான். அக்கட்சியின் சார்பில் டி.ராஜா பதவிக் காலம் முடிவதால், அந்த இடத்தை அ.தி.மு.க.வின் தயவுடன் திரும்பப் பெற்று விட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ) முயற்சித்தது. தேசிய செயலாளர் டி.ராஜாவுக்கு மீண்டும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பது சி.பி.ஐ. டெல்லி தலைமையின் எண்ணம். ஆனால், மாநிலச் செயலாளராக இருக்கும் தா. பாண்டியனோ, 'எனக்கு வயதாகி விட்டது. இந்த முறை நான் ராஜ்ய சபைக்குப் போகிறேன். லோக் சபாவில் ராஜா நிற்கட்டும்' என்று பிரேக் போட்டார். தா.பாண்டியன் முதல்வருக்கு வேண்டியவர். ஆனால், ராஜாவோ டில்லியில் இருப்பவர். ஆகவே, இந்த இருவரில் அக்கட்சி மேலிடம் தா.பாண்டியனை நிறுத்தினால் ஐந்தாவது சீட்டை அக்கட்சிக்கு கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தில் முதலில் முதல்வர் இருந்தாராம். தங்களுக்கு ஐந்தாவது சீட்டை வாங்கி விட வேண்டும் என்பதற்காக சி.பி.ஐ. தலைவர்கள் ஏ.பி. பரதன், சுதாகர் ரெட்டி ஆகியோர் சென்னையில் முகாமிட்டார்கள். ஆனால், அப்பாயின்மென்ட் கிடைக்கவில்லை. பிறகு டில்லி சென்று காத்திருந்தார்கள். அங்கே திட்டக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த முதல்வர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைச் சந்தித்தார். ஆனால், அதற்கு முன்பே சி.பி.ஐ போட்டியிட விரும்பிய ஐந்தாவது சீட்டிற்கும் சேர்த்து அ.தி.மு.க வேட்பாளர்களை அறிவித்து விட்டார். அது மட்டுமன்றி, தன்னைச் சந்தித்த சி.பி.ஐ. தலைவர்களிடம், 'நான் ஐந்து எம்.பி. பதவிகளுக்கு வேட்பாளரை அறிவித்து விட்டதால், உங்கள் வேட்பாளருக்கு

கொடுக்க என்னிடம் உபரி வாக்குகள் இல்லை' என்றும் கைவிரித்தார்.

இந்தச் சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ள தி.மு.க. பெரு முயற்சி எடுத்தது. சி.பி.ஐ.யுடன் தோழமையாக இருக்கும் மார்க் ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்) வசம் 10 எம்.எல்.ஏ.க்கள் உண்டு. அவர்களின் ஆதரவைப் பெற்றுவிட் டால், தி.மு.க. தன் வசமுள்ள 23 எம்.எல்.ஏ.க்களுடன் சேர்த்து ஆறா வது சீட்டைக் கைப்பற்றி விடலாம் என்பது கணக்கு. அடுத்த கூட்ட ணிக்கு அச்சாரம் போடலாம் என் பதும் தி.மு.க. போட்ட உபரி கண க்கு! அதற்காக முதலில் சி.பி.எம். மாநிலத் தலைமையை நாடியது. ஆனால், அவர்களோ, 'கறுப்பாக இருந்தாலும் நாங்கள் அத்தை மக ளைத்தானே கட்டிக்கொள்ள வேண் டும்' என்று கூறி சி.பி.ஐ.யுடன்தான் எங்கள் கூட்டணி என்று எஸ்கேப் ஆகிவிட்டார்கள். பிறகு சி.பி.எம். மின் டில்லி தலைமையை நாடியது தி.மு.க.. அக்கட்சியின் எம்.பி. டி. ஆர்.பாலு பிரகாஷ் காரத்தைச் சந்தித் தார். தி.மு.க. வேட்பாளர் கனிமொ ழிக்கு ஆதரவு கேட்டார். 'நாங்களும் சி.பி.ஐ.யும் ஒன்றாக இருக்கிறோம். ராஜாவிற்கு ஆதரவு கொடுக்க வில்லை என்றால் அவர் ரொம்பவும் வருத்தப்படுவார் போலிருக்கிறது' என்று கூறிவிட்டது.

ஏனென்றால், சி.பி.எம். கட்சியைப் பொறுத்தவரை 'நாம் இணைந்து இருப்போம்' என்று இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் மேலிடம் எடுத்த முடிவை மாற்றிக்கொள்ள முடியா மல் தவித்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஐந்தாவது சீட்டை அ.தி.மு.க. கொடுக்காத நிலையில் கூட தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. கமிட்டிக் கூட்டங்க ளைப் போட்டுப் பேசினார்கள். இந் நிலையில் ஆறாவது சீட்டில் போட்டி யிடுவதற்கு வேட்புமனுவை வாங்கி விட்டார்கள். அதன் பிறகும் கூட்டம். இறுதியில் 'இந்திய கம்யூனிஸ்ட் கட் சியின் சார்பில் டி.ராஜா ராஜ்ய சபைத் தேர்தலில் நிறுத்தப்படுவார்' என்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது அக் கட்சி. அதன்படி திங்கட்கிழமை ராஜா வேட்பு மனுத்தாக்கல் செய்தார். ஆனால், எளிதில் வெற்றி பெறும் ஐந் தாவது சீட்டைக் கொடுக்காத அ.தி. மு.க. மீது வருத்தத்தில் இருக்கிறார் கள். ராஜாவை வேட்பாளராக அறி வித்ததும், 'இன்னும் தமிழகத்தில் மின்வெட்டு தொடருகிறது' என்று தா. பாண்டியன் பேசினார். 'மூன்றா வது அணி அமைப்பது ராஜ்ய சபைத் தேர்தலுக்குப் பிறகு தெரியும்' என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி அறிவித்துவிட்டார். தங்கள் கட்சி வேட்பாளர் ராஜா வெற்றி பெறவில்லை என்றால் எங் கள் பாதை வேறாக இருக்கும் என் பதை அறிவிப்பது போல் தா. பாண்டி யன் மற்றும் சுதாகர் ரெட்டி ஆகியோ ரின் கருத்துகள் எதிரொலித்தன.

இதற்குப் பிறகும் கம்யூனிஸ்ட் தோழர்களை நம்பியிருக்கத் தயாராக இல்லாத தி.மு.க., உடனடியாக விஜ யகாந்துடன் தொடர்பை ஏற்படுத்தி யது. அதற்கான 'திரைமறைவு' சந்திப் புகள் நிகழ்ந்தன. ஒருபுறம் விஜய காந்தை அணுகும் அதேவேளையில், இன்னொருபுறம் அவருக்கு ஆலோச கராக இருக்கும் மூத்த அரசியல் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரனை யும் தி.மு.க. தரப்பு டச் பண்ணியது. 'நீங்களும் தி.மு.க.வை ஆதரிக்கு மாறு சொல்லுங்கள்' என்று அவ ருக்கு கோரிக்கை வைத்தது. அதற்கு தி.மு.க. தரப்பில் வைத்த ஒரு கருத்து இதுதான். ''சி.பி.ஐ.க்கு ஐந்தாவது சீட்டை அ.தி.மு.க. கொடுக்க வில்லை. எங்களிடம் எக்ஸ்டிரா வாக்கு இல்லை என்றும் அ.தி.மு.க. கூறிவிட்டது. ஏன் சி.பி.ஐ, சி.பி.எம். மிடம் எங்களை ஆதரியுங்கள் என்று கூட கேட்கவில்லை. அ.தி.மு.க. ஆனாலும் அ.தி.மு.க.வைப் பற்றி ஒரு வார்த்தை கூட நெகட்டிவாக பேச தோழர்கள் மறுக்கிறார்கள். ஆகவே இரு கம்யூனிஸ்ட் கட்சிக

### இந்திய ராஜ்ய சபா தேர்தல்

## சில முக்கிய அம்சங்கள்

- ராஜ்ய சபை எம்.பி.யின் பதவிக்காலம் 6 வருடம். பாராளுமன்றம் கலைக் கப்பட்டாலும் இவர்களின் பதவிக்காலம் இருக்கும்.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ராஜ்ய சபை எம்.பி. தேர்தலில் வாக்களிக்க முடியும். நியமன உறுப்பினர்க ளுக்கு வாக்கு இல்லை.
- இன்னாருக்கு வாக்களியுங்கள் என்று எம்.எல்.ஏ.க்களுக்கு கட்சித் தலைமை கொறடா உத்தரவு (விப்) பிறப்பிக்க முடியாது.
- வாக்களிக்கும் எம்.எல்.ஏ. அங்குள்ள அவர் கட்சி வேட்பாளரின் பூத் ஏஜெண்டிடம் யாருக்கு வாக்களித்தார் என்ற வாக்குச் சீட்டைக் காண்பித்து விட்டு பிறகுதான் வாக்குப் பெட்டிக்குள் போட வேண்டும். அப்படிக் காட்ட மறுத்தால் அந்த வாக்குச் சீட்டை ரத்துச் செய்யும் அதிகாரம் தேர் தல் அதிகாரிக்கு உண்டு.
- கட்சி மாறி வாக்களித்தாலும் அந்த வாக்கு செல்லும். அதற்காக கட்சித் தாவல் சட்டப்படி நடவடிக்கை எடுத்து அந்த எம்.எல்.ஏ.விற்கு 'தகுதியின்மை' கொடுக்க முடியாது. வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட கட்சி அந்த எம்.எல்.ஏ.வை கட்சியை விட்டு வெளியேற்றலாம். அதனால், தகுதியின்மை ஆகாது.
- ஒரு ராஜ்ய சபை எம்.பி.க்கு அந்த சட்டமன்றத்தின் எம்.எல்.ஏ.க்கள் எண் ணிக்கையை வைத்து, வெற்றி பெற இவ்வளவு வாக்குகள் தேவை என்று 'கோட்டா' நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வாக்குகளைப் பெற்றால் அவர் வெற்றி பெறுவார். அப்படியில்லையென்றால், 'செகன்ட் பிரபெரன்ஸ்' வாக்குகள் அடிப்படையில் அவர் வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைக்கும்.

ளும் அ.தி.மு.க.வின் 'பி டீம்'. அதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விஜயகாந்த் மனதையும், பண்ருட்டி ராமச்சந்திரன் மனதையும் தி.மு.க. தரப்பு மெல்ல, மெல்ல கரைத்தது. விஜயகாந்த் மைத்துனர் சுதிஷின் மாமியார் இறந்து போக, அதற்கு போய் விசாரித்து விட்டே வந்து விட்டார் தி.மு.க. அமைப்புச் செயலாளரும், வட சென்னை பாராளுமன்ற தொகுதி உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன். அப்போது ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ராஜ்ய சபைத் தேர்தல் நிலைவரம் குறித்தும் இருவரும் பேசியதாக தகவல். விஜயகாந்த் தன் முடிவை அறிவிக்க தாமதம் செய்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் தி.மு.க. திடீரென்று அவசரப்பட்டு ஜூன் 15ஆம் திகதியன்று கனிமொழியை நாமினேஷன் பண்ண வைத்தது. அவரும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்து விட்டு, 'நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்' என்று பேட்டியும் கொடுத்தார். இது விஜயகாந்திற்கு சற்று வருத்தம். 'என்னுடன் பேசிக் கொண்டே எப்படி நீங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யலாம்' என்று கேள்வி எழுப்பினார். அத்துடன் நில்லாமல் தன் கட்சியின் அரசு கொறடா சந்திரகுமாரை அனுப்பி தே.மு.தி.க.வின் சார்பில் ஒரு வேட்புமனுவையும் வாங்கி வர வைத்துவிட்டார். இது தி.மு.க.-தே.மு.தி.க. அன்டர்ஸ்டாண்டிங்கில் ஒரு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியது. அதை சமாதானம் செய்யும் விதத்தில், 'இந்த முறை தி.மு.க.விற்கு வேண்டும் என்பதால் நாமினேஷன் செய்து விட்டோம். மார்ச் மாதம் நடக்கும் ராஜ்ய சபைத் தேர்தலில் உங்கள் வேட்பாளரை எங்கள் தலைவரே (கலைஞர் கருணாநிதி) முன்மொழிந்து கையெழுத்துப் போடுவார்' என்ற உறுதிமொழியை விஜயகாந்திடம் தி.மு.க. தரப்பில் கொடுத்துள்ளார்கள். ஆனாலும் உடனடியாக ஜூன் 16 அன்று தன் கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தைப் போட்டார் விஜயகாந்த். அக்கூட்ட இறுதியில் ஏதும் முடிவு எடுக்கப்படவில்லை என்றாலும், கலந்து கொண்ட எம்.எல்.ஏ.க்களில் பெரும்பாலானோர் 'நாம் ராஜ்ய சபைத் தேர்தலில் போட்டியிட வேண்டும்' என்ற கருத்தை தங்கள் கட்சித் தலைவரிடம் வலியுறுத்தினார்கள். இதனால் சமரச களத்தில் இருந்து விலகி ஆறாவது சீட்டிற்கு விஜயகாந்தும் தன் கட்சி சார்பில் வேட்பாளரை நிறுத்தினார். அக்கட்சியின் பொருளாளர் இளங்கோவன் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

இப்படி நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டிருக்கும் ராஜ்ய சபைத் தேர்தல் சூழ்நிலையில் இப்போது ஆறு சீட்டுகளில் நான்கு சீட்டுகளை அ.தி.மு.க. எளிதில் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. மீதியுள்ள ஐந்தாவது சீட்டில் அந்தக் கட்சி போராடி வெற்றி பெற வேண்டும் என்ற நிலைமை. அதே சமயத்தில் ஆறாவது சீட்டிற்கோ இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க., தே.மு.தி.க. ஆகிய மூன்று கட்சிகளும் களத்தில்

## காட்சிகள் பலவிதம்

தமிழக சட்டமன்றத்தில் 234 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். ஆறு ராஜ்ய சபை எம்.பி. தேர்வு செய்யப்படுவதால், ஒரு எம்.பி.க்கு 34 எம்.எல்.ஏ.க்களின் வாக்கு கிடைக்க வேண்டும்.

**காட்சி-1**

அ.தி.மு.க.விற்கு 151 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். நான்கு எம்.பி. பதவிகளில் வெற்றி பெற 136 வாக்குகள் போதும். மீதியுள்ள 15 வாக்குகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் டி.ராஜாவிற்கு கொடுக்கும்.

**காட்சி-2**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிடமும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிடமும் இருக்கும் வாக்குகள் 18. அ.தி.மு.க.வின் வாக்குகள் 15ம், அகில இந்திய பார்வார்ட் பிளாக்கின் வாக்கு ஒன்றும் சேர்த்து இக்கட்சியின் வேட்பாளர் ராஜாவுக்கு 34 வாக்குகள் கிடைக்கும். அவரும் வெற்றி பெறுவார்.

**காட்சி-3**

தி.மு.க. வசம் இருப்பது 23 எம்.எல்.ஏ.க்கள். கனிமொழி வெற்றி பெற இன்னும் 11 வாக்குகள் தேவை. அதற்கு பாட்டாளி மக்கள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் ஆகிய மூன்று கட்சிகளிடமும் சேர்த்து 7 வாக்குகள் உள்ளன. காங்கிரஸிடம் 5 வாக்குகள் உள்ளன. இவற்றை சேர்த்தால் தி.மு.க. வேட்பாளர் கனிமொழிக்கு மொத்தம் 35 வாக்குகள் கிடைத்து விடும்.

**காட்சி-4:**

தே.மு.தி.க. போட்டியிடுவதால் அக்கட்சியிடம் இருப்பது 29 எம்.எல்.ஏ.க்கள். இவர்களில் ஏழு பேர் ஏற்கனவே அ.தி.மு.க. ஆதரவு எம்.எல்.ஏ.க்களாக இருக்கிறார்கள். மீதியிருக்கும் 22 பேரில் ஆறு பேர் சட்டமன்றத்திலிருந்து 6 மாதம் சஸ்பென்ட் செய்யப்பட்டுள்ளார்கள். அந்த சஸ்பென்ஷன் சென்னை உயர்நீதிமன்றத்தால் உறுதியும் செய்யப்பட்டு விட்டது. ராஜ்ய சபைத் தேர்தல் வாக்குப் பதிவு சட்டமன்றத்தில் நடக்கும். ஆகவே சஸ்பென்ட் செய்யப்பட்ட இந்த ஆறு எம்.எல்.ஏ.க்களையும் அவைக்குள் நுழைவதற்கு 'சட்டமன்ற அலுவல் குழு' அனுமதி கொடுக்க வேண்டும். அப்போதுதான் இவர்கள் வாக்குப்போட முடியும். அதன்படி பார்த்தால் தே.மு.தி.க. வசம் உறுதியாக இருக்கும் வாக்குகள் 16 மட்டுமே. ஆகவே வெற்றி பெறத் தேவையான 18 வாக்குகளை காங்கிரஸ் மூலம் திரட்ட வேண்டும். அப்போது கூட 5 வாக்குகள்தான் கிடைக்கும். அத்துடன், அக்கட்சியிலிருந்து ஒதுங்கி அதிருப்தியாக இருக்கும் ஏழு எம்.எல்.ஏ.க்கள் தே.மு.தி.க. வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் தே.மு.தி.க. வேட்பாளர் இளங்கோவன் தி.மு.க. வேட்பாளரை தோற்கடித்து வெற்றி பெற முடியும்.

குதித்து விட்டன. இதனால் தமிழக ராஜ்ய சபைத் தேர்தலை ரணகள மாகும் என்ற நிலைமை. ஏனென்றால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வசம் இரு ப்பது 18 எம்.எல்.ஏ.க்கள். தே.மு.தி. க.வுடன் இருப்பது 22 எம்.எல்.ஏ. க்கள். தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் 23 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, தி.மு.க ஆகிய கட்சிகள் ஓரணியில் வந்தால், 'ஆறாவது சீட்டிற்கு அதிக வாக்குகள் வாங்கிய வேட்பாளராக தி.மு.க. வேட்பாளர் கனிமொழி மாறு வார். இப்படி கூட்டிக் கழித்துப் பார்த் தால், இன்றைய சூழ்நிலையில் தேர் தல் வந்தாலும் சரி, போட்டியில்லாமல் தேர்வு செய்யப்பட்டாலும் சரி, அ.தி. மு.க.விற்கு ஐந்து ராஜ்ய சபை எம்.பி, தி.மு.க.விற்கு ஒரு ராஜ்ய சபை எம்.பி. என்ற வரைபடம் ஏறக் குறைய உருவாகியிருந்தது.

ஆறாவது சீட்டிற்கு மூன்று கட்சி கள் போட்டியிடுவது வித்தியாசமான தேர்தல் கூட்டணிக்கு வித்திடுமா என்ற கேள்வியை எழுப்பியது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய ஜூன் 17-கடைசி திகதி என்றால், போட்டியிடுவோரின் இறுதி வேட் பாளர் பட்டியல் ஜூன் 20ஆம் திகதி முடிவு செய்யப்படும். இந்நிலையில் திடீரென்று அ.தி.மு.க. பொதுச் செய லாளர் ஜெயலலிதாவைச் சந்தித்தார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பா ளர் டி.ராஜா. அவர் கேட்டுக்கொண்ட தன் பேரில் ஐந்தாவது சீட்டிற்கு நிறுத் திய தன் கட்சி வேட்பாளர் தங்க முத்து வாபஸ் பெற்றுவிட்டார். இடையில் வந்த தங்கமுத்து இடையி லேயே விலகி விட்டார். இதனால் இப்போது முதல் நான்கு ராஜ்ய சபை பதவிகளை அ.தி.மு.க. கைப்பற்றும். ஐந்தாவது ராஜ்ய சபை சீட்டை இந் திய கம்யூனிஸ்ட் கட்சி பிடித்து விடும். ஆறாவது சீட்டிற்கு மட்டும் தி.மு.க.விற்கும், தே.மு.தி.க.விற்கும் போட்டி என்ற நிலை திடீரென்று உரு வாகியிருக்கிறது. திங்கட்கிழமை 17 ஆம் திகதி மதியம் ஏற்பட்ட இந்தத் திடீர் திருப்பம் அரசியல் கட்சிகளை வியக்க வைத்துள்ளது. இதன்படி பார்த்தால் அ.தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளான இந்திய கம் யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சி, அகில இந்திய பார் வார்டு பிளாக் எல்லாம் சேர்ந்து 170 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கி றார்கள். ஆகவே ஐந்து எம்.பி.க்களை வெற்றி பெறத் தேவையான வாக்கு கள் இருக்கின்றன.

தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் அதன் கைவசம் 23 வாக்குகள் இருக் கின்றன. பாட்டாளி மக்கள் கட்சியி டம் மூன்று வாக்குகள் உள்ளன. இது தவிர மனித நேய மக்கள் கட்சியும், புதிய தமிழகம் கட்சியும் தலா இரு வாக்குகள் வைத்துள்ளன. இந்த கணக்குப்படி தி.மு.க.விடம் இப் போது 30 வாக்குகள் இருக்கின்றன. இவர்களோடு காங்கிரஸும் சேர்ந்து ஆதரித்தால் 35 வாக்குகள் தி.மு.க. அணிக்கு கிடைத்துவிடும். 34 வாக்கு களே வெற்றி பெறத் தேவை. ஆனால், தி.மு.க.வை எதிர்த்துப் போட்டியிடும் தே.மு.தி.க.விற்கு 22 வாக்குகள் தான் இருக்கின்றன. அவர் களை ஒரு வேளை காங்கிரஸ் ஆத ரித்தால் கூட 27 வாக்குகள்தான் வரும். அப்படியொரு சூழ்நிலை வந் தால் தே.மு.தி.க வின் அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் ஏழு பேர் (ஏற்க னவே அ.தி.மு.க. ஆதரவு நிலைப் பாட்டில் இருப்பவர்கள்) தே.மு.தி.க. வேட்பாளரை ஆதரித்தால் மட்டுமே 34 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற முடியும். ஆனால், இதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

ஆகவே, ஜூன் 27ஆம் திகதி ராஜ்ய சபைத் தேர்தல் நடைபெற்றால் அன்றைய தினம் ஆறாவது சீட்டிற்கு தி.மு.க.விற்கும், தே.மு.தி.க.விற்கும் தான் போட்டி என்ற நிலையை அ.தி. மு.க. தலைமை உருவாக்கிவிட்டது. கடைசி நிமிடத்தில் அ.தி.மு.க. தனது ஐந்தாவது சீட்டை இந்திய கம்யூ னிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடுத் ததை இரு வகையில் பார்க்கலாம். ஒன்று விஜயகாந்திடம் தி.மு.க. ரொம்பவும் ஓவராக கெஞ்ச வேண் டிய நிலை இல்லாமல், அவருடைய 'பார்கைனிங் பவரை' நசுக்கும் வல் லமை பெற்றது. இன்னொன்று, எதிர் காலத்தில் பாராளுமன்றத் தேர்தலில் இரு கட்சிகளும் (தி.மு.க., தே.மு. தி.க.) கூட்டணி அமைக்கக்கூடாது என்பதற்கு வைத்த 'செக்'! ஆகவே தே.மு.தி.க.விற்கும், காங்கிரஸுக்கும் அடுத்து முக்கியமானது எது? பாரா ளுமன்றத் தேர்தலா அல்லது இப் போது நடக்கும் ராஜ்ய சபைத் தேர் தலா என்பதே அந்த கேள்வி. ராஜ்ய சபைத் தேர்தல் என்று தே.மு.தி.க. முடிவு செய்தால், கடைசி வரை போட்டியிலிருந்து விலகாமல் தி.மு.க.விற்கு டென்ஷன் கொடுக் கும். அதேபோல் பாராளுமன்றத் தேர்தல்தான் முக்கியம் என்று காங்கி ரஸ் கட்சி கருதுமானால், தனது ஐந்து எம்.எல்.ஏ.க்களை தி.மு.க.விற்கு வாக்களிக்க வைத்து இந்தமுறை அக் கட்சியின் வேட்பாளர் கனிமொ ழியை காங்கிரஸ் ஜெயிக்க வைக்கும். அ.தி.மு.க.வின் இறுதிக் கட்ட மூவ் தி.மு.க.விற்கும், தே.மு.தி.க.விற்கும் இடையே எம்.எல்.ஏ.க்களை இழுப்ப தில் 'குதிரை பந்தயத்திற்கு' வித்திட் டுள்ளது. அதேசமயம், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அடித்த 'லாஸ்ட் மினிட் கோல்' ராஜ்ய சபைத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் இடையில் சுமுகமான முறையில் ஐந்து ராஜ்ய சபை எம்.பி.க்களை வெற்றி பெறும் வாய்ப்பை ஏற்படுத் திக் கொடுத்திருக்கிறது.

## காதல் திருமணம் கரை சேருமா?

**-ஜூலை முதல் வாரத்தில் வரும் பரபரப்பான வழக்கு!**

வருகின்ற ஜூலை 1ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்றத்தில் பர பரப்பான 'காதல் வழக்கு' விசார ணைக்கு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள தர்மபுரி மாவட்டம், நாயக்கன் கொட்டாய் அருகில் உள்ள நத்தம் காலனியில்தான் இந்தக் 'காதல் கல வரம்' முதலில் முளைத்தது. இங் குள்ள காதலன் இளவரசன் அருகில் உள்ள இன்னொரு கிராமமான செல் லன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்த





இளம்பெண் திவ்யாவை காதலித்து திருமணம் செய்தார். இருவரும் வெவ்வேறு ஜாதியை (காதலன் தலித் சமுதாயம். காதலி வன்னியர் சமுதாயம்) சேர்ந்தவர்கள் என்பதால் பிரச்சினை பூதாகரமானது. அவர்களின் காதலுக்கு முதலில் மறுத்த பெற்றோர் பிறகு சம்மதித்தாலும், ஊர் சம்மதிக்கவில்லை. காதலியின் சமுதாயம் சம்மதிக்கவில்லை. இந்த துக்கமும், தொல்லையும் தொண்டையை அடைக்க, அதற்கு மேலும் வலி தாங்க முடியாமல் திவ்யாவின் தந்தை நாகராஜன் தற்கொலை செய்து கொண்டார்.

அவ்வளவுதான் அந்தப் பகுதியே தீப்பிடித்து எரிந்தது. காதலன் குடியிருக்கும் காலனி வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன. மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். அத்தனை அரசியல் கட்சிகளும் அந்த காலனிகளுக்கு படையெடுத்தன. இறுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவனும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸும் மாபெரும் போர் நடத்தினார்கள். ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ராமதாஸ் தரப்பு இதை 'காதல் நாடக திருமணம்' என்று பேசினர். திருமாவளவனோ, 'இல்லை. இல்லை. டாக்டர் ராமதாஸ் சாதி வெறியைத் தூண்டுகிறார்' என்று போட்டிப் பிரசாரத்தில் இறங்கினார். அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்து தன் தரப்பை விளக்கினார். இதன் உச்சகட்டமாக பா.ம.க.வின் சித்திரை திருவிழா சென்னை அருகில் உள்ள மாமல்லபுரத்தில் நடைபெற்றது. இதனையொட்டி 'மரக்காணம்' கலவரம் வெடித்தது. அதைக் கண்டித்து டாக்டர் ராமதாஸ் போராட்டம் நடத்த, அவர் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறைக்குச் சென்ற டாக்டர் ராமதாஸ் 12 நாட்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டாலும், அவருக்கு அப்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு, பிறகு இருதய ஆப்பரேஷனில் முடிந்து இப்போது ஓய்வு எடுத்து வருகிறார்.

அதேபோல் எதிர்முனை போராட்டங்களை நடத்திய திருமாவளவன் அ.தி.மு.க. அணிக்கு போகப் போகிறார் என்றெல்லாம் பேச்சு அடிபட்டு இறுதியில் மீண்டும் தி.மு.க. தலைவரின் 90 ஆவது பிறந்த நாளில் வந்து வாழ்த்தி, 'எங்களைப்பிரிக்க முடியாது' என்று சபதம் மேற்கொண்டிருக்கிறார். இரு தலைவர்களும் ஏற்படுத்திய 'தாக்கம்' குறைந்து, அமைதியாகியிருக்கின்ற நேரத்தில் காதலித்துச் சென்ற திவ்யாவின் தாயார் தேன்மொழி ஏற்கனவே தொடுத்த 'ஆள் கொணர்வு மனு' சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.


இதே காலகட்டத்தில் காதலன் வீட்டில் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த காதலி உடல்நிலை சரியில்லாத தன் தாயார் தேன்மொழியைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றவர் திரும்பி வரவில்லை. அதற்காக 'ஆள் கடத்தல்' புகாரை காதலன் தரப்பு காவல் நிலையத்தில் கொடுத்திருந்தது. இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் எம்.ஜெயச்சந்திரன், எம்.எம். சுந்தரேஷ் ஆகியோர் காதலன் இளவரசன், காதலி திவ்யா, பெண்ணின் தாய் தேன்மொழி ஆகிய அனைவரையும் அழைத்து விசாரித்தார்கள். குறிப்பாக காதலி திவ்யாவை தனியாக விசாரித்ததில், 'என்னை யாரும் கடத்தவில்லை. என் தாயாருக்கு உடல்நலம் சரியில்லை. ஆகவே அவரை நான் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் மனக்குழப்பத்தில் இருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்.

இதனடிப்படையில் இப்போது திவ்யா தன் தாயாருடன் இருக்கிறார். அந்த மனுதான் வருகின்ற ஜூலை 1-ஆம் திகதி மீண்டும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்பு விசாரணைக்கு வருகிறது. 'திவ்யாவிற்கு திருமணம் ஆகும் போது 21 வயது ஆகவில்லை. எனவே அது திருமணமாகாது' என்பதுதான் திவ்யாவின் பெற்றோர் வாதம். அன்றைய தினம் கோர்ட்டிற்கு வந்திருந்த தன் காதல் கணவன் இளவரசனுடன் பேசக்கூட திவ்யா விரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் வரும் போது திவ்யா என்ன சொல்லப் போகிறார் என்பதை வைத்தே இந்த காதல் திருமணம் கரை சேருமா அல்லது கலைந்து போகுமா என்பது தெரியவரும். இதற்கிடையில் திவ்யா, இளவரசன் ஆகிய இருவருக்குமே பொலிஸ் பாதுகாப்பு கொடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

# மோடியும் அத்வானியும் குருவை விஞ்சிய சீடன்


**மோடிக்கு இருக்கக்கூடிய ஆதரவையும் அவரைப் பற்றி கட்சித் தொண்டர்கள் மத்தியில் காணப்படக் கூடிய உணர்வுகளையும் அத்வானி சரியாக மதிப்பிடவில்லை**





இந்தியா அண்மைக்காலமாக தீவிரமாகப் பரவிவருகிற ஒரு அரசியல் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை அரசியல் தலைவர்களும் அரசியல் அறிஞர்களும் நமோனியா (Namonia) அல்லது நமோனிரிஸ் (Namonitis) என்று பெயரிட்டிருக்கிறார்கள். நமோ (Namo) என்பது தற்போது பாரதிய ஜனதாக் கட்சியின் மிகவும் செல்வாக்குமிக்க தலைவராக மாறியிருக்கும் நரேந்திரமோடியைக் குறித்து நிற்கிறது. சொல்லப் போனால், இந்தியாவின் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களிலும் பார்க்க, ஏன் காங்கிரஸ் தலைவர்களான சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரையும்விட செல்வாக்குமிக்கவராக நரேந்திரமோடி விளங்குகிறார்போல் தெரிகிறது. அடுத்தவருட முற்பகுதியில் பொதுத்தேர்தலைச் சந்திக்கவிருக்கும் நாட்டில் விரைவாக மாறிவருகிற அரசியல் நிலக்கட்சி இதுதான்.

கடந்த வருட பிற்பகுதியில் நடைபெற்ற குஜராத் சட்டசபைத்தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலமாக அந்த மாநிலத்தின் முதலமைச்சராக நான்கா






எம்.பி.வித்தியாதரன்

வது தடவையாக பதவியேற்ற நரேந்திரமோடி தேசிய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. குஜராத் அரசியலில் சிறந்த செயல்வீரர் என்றும் துரிதமாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர் என்றும் பெயரெடுத்த மோடியை இந்தியாவின் பிரதான அரசியற்கட்சிகள் சகலவற்றினதும் தலைவர்களும் கூடப்பாராட்டியிருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது. அடுத்த பொதுத் தேர்தலில் இந்தியாவில் வாக்களிக்கத் தகுதியுடையவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் படித்த இளைஞர்கள், யுவதிகள் என்று கணிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்தலின் முடிவுகளைத் தீர்மானிப்பதில் இவர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களையும் பாரதிய ஜனதா தொண்டர்களையும் மோடி பெரிதும் கவர்ந்து வருகிறார் என்பதிற் சந்தேகமில்லை. இதனால் பாரதிய ஜனதாவின் அடுத்த பிரதமர் வேட்பாளராக மோடியை முன்னிலைப்படுத்துமாறு கட்சியின் தலைமைத்துவத்துக்கு கடுமையான நெருக்குதல்கள். 2002 குஜராத் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தைக் கட்டுப்படுத்த மோடி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதால் நாடுபூராவும் முஸ்லிம்கள் மத்தியில் அவர் மீது கடுமையான வெறுப்பு இருக்கிறது என்பதை பாரதிய ஜனதாவின் தலைமைத்துவம் தெரிந்திருந்தும் கூட, அவரையே முன்னிலைப்படுத்த வேண்டிய நிலை. பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கத்துவக்கட்சிகளுக்கு கிடைக்கக்கூடிய முஸ்லிம் வாக்குகளை பெருமளவுக்கு பாதிக்கக்கூடிய ஒருவராக மோடி விளங்குகிறார் என்பது உண்மையே.

ஆனால், அண்மையில் குஜராத்தில் நடைபெற்ற 6 இடைத்தேர்தல்களிலும் பாரதிய ஜனதாக் கட்சியே பெருவெற்றிபெற்றது. அதையடுத்து நாடு பூராவுமிருந்து கட்சித் தொண்டர்களிடமிருந்து அதிகரித்த நெருக்குதல்கள் காரணமாக பாரதிய ஜனதாத் தலைவர் ராஜ்நாத் சிங்கும் ஏனைய தலைவர்களும் அண்மையில் கோவாவில் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் வைத்து மோடியை கட்சியின் தேசிய பிரசாரக் குழுவின் தலைவராக நியமிக்க வேண்டியேற்பட்டது. அவரைப் பிரதமர் வேட்பாளராக்குவதை நோக்கிய முதல் நடவடிக்கையாக இதைப் பலரும் பார்க்கிறார்கள்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இந்த நடவடிக்கை கட்சிக்குள் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது, ஏனைய அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஒரு வெருட்சி ஏற்பட்டிருக்கிறது. பிரதானமாக எல்.கே.அத்வானியிடமிருந்தே எதிர்ப்பு வெளிப்பட்டது. 1990களில் தேசம் தழுவிய தனது ரதயாத்திரையையடுத்து பாரதிய ஜனதாவை தேசிய மட்டத்தில் அதிகாரத்துக்குக்கொண்டு வந்த பெருமைக்குரிய சிரேஷ்ட தலைவர் அத்வானி.



கோவாவில் நடைபெற்ற பாரதிய ஜனதாவின் தேசிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தை அத்வானி பகிஷ்கரித்தார். தனக்கு வயிற்றில் சுகவீனமென்று இதற்கு அவர் காரணம் கூறினார். அவர் தனது வாழ்நாளில் பகிஷ்கரித்த முதலாவது தேசிய நிறைவேற்றுக்குழுக்கூட்டம் இதுவேயாகும். எவ்வாறெனினும் மோடி மீதான அத்வானியின் வெறுப்பு ஊடகங்களுக்கு நன்கு தெரிந்ததே. கட்சியின் ஏனைய தலைவர்கள் மோடிக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியதையடுத்து அத்வானி நிறைவேற்றுக்குழுக்கூட்டத்தில் கலந்துகொள்வது சாத்தியமில்லை என்று ஊடகங்கள் சரியாகவே எதிர்வு கூறியிருந்தன. லோக்சபாவில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திருமதி சுஸ்மா சுவராஜ் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் குமார் போன்ற தனது முகாமைச் சேர்ந்த தலைவர்கள் மோடி முன்னிலைப்படுத்தப்படுவதை கடுமையாக எதிர்ப்பார்கள் என்று அத்வானி நம்பினார்.

ஆனால், இத்தலைவர்களில் எவருமே எதிர்க்கமுடியாத அளவுக்கு கட்சித் தொண்டர்கள் மத்தியில் மோடியின் கவர்ச்சி வலுவானதாக

> **சுஸ்மா சுவராஜ், ஆனந்த் குமார் போன்ற தனது முகாமைச்சேர்ந்த தலைவர்கள் மோடியை முன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சிகளில் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று அத்வானி நம்பினார். ஆனால் அது நடக்கவில்லை**

இருந்தது. கட்சியின் தேசிய பிரசாரக் குழுவின் தலைவராக மோடியை ராஜ்நாத்சிங் 'திருநிலைப்படுத்திய போது' அத்வானி தனது முகாமைச் சேர்ந்தவர்கள் என்று நம்பிய அந்தத் தலைவர்களும் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இது உண்மையில் அத்வானிக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது. கட்சியை கட்டியெழுப்புவதற்குப் பாரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றபோதிலும் கூட, தான் தனிமைப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதாக அவர் உணர்ந்தார்.

கோவா தேசிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்திற்கு மறுநாள் அத்வானி கட்சியின் தலைவருக்கு கட்சியில் தான் வகித்துவந்த சகல பதவிகளில் இருந்தும் இராஜினாமா செய்வதாக அறிவித்து கடிதத்தை அனுப்பினார். ஆனால், அவர், பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைமைப்பதவியில் இருந்து இராஜினாமா செய்யவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

கட்சியைக் கட்டியெழுப்பிய சிரேஷ்ட தலைவர் ஒருவர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பாரதிய ஜனதா தலைமைத்துவத்தைப் பெரும் குழப்பநிலைக்குள்ளாக்கியது. இராஜிநாமாக் கடிதத்தை தலைமைத்துவம் நிராகரித்தது. கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் சகலரும் வேண்டுகோள்விடுத்த போதிலும், அத்வானி தனது நிலைப்பாட்டில் இருந்து விலக மறுத்துவிட்டார். அவரின் மனதை மாற்றுவதற்கு கட்சித் தலைமைத்துவம் தவறியபோது ராஷ்டிரிய சுயம்ஷேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்) நடவடிக்கையில் இறங்கியது. இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்பட்ட அத்வானியுடன் ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பக்வத் ஒருதடவை தொலைபேசியில் பேசியது தான் தாமதம், அந்த இரும்பு மனிதர் உருகிப்போய் இராஜிநாமாக் கடிதத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார். இராஜிநாமாக் கடிதத்தை கட்சித் தலைமைத்துவத்திற்கு அனுப்பிவைப்பதற்கு அத்வானியை நிர்ப்பந்த தீர்மானத்தை மீளாய்வு செய்வதாக எந்த உறுதிமொழியுமே அளிக்கப்படவில்லை.

> இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்பட்ட அத்வானி ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பக்வத் ஒரு தடவை தொலைபேசியில் பேசியதுதான் தாமதம், உருகிப்போய் இராஜிநாமாக் கடிதத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார். தனது இந்த நடவடிக்கையால் இந்த மூத்த தலைவர் சாதித்ததுதான் என்ன?

தனது இந்த நடவடிக்கையின் மூலமாக 85 வயதான தலைவர் அத்வானி சாதித்தது என்ன? அவர் கூர்மதியுடைய ஒரு அரசியல்வாதியாக இருந்தபோதிலும், இதில் அவரால் சுய இலக்கு ஒன்றை மாத்திரமே அடையக்கூடியதாக இருந்தது. மோடிக்கு இருக்கக்கூடிய ஆதரவையும் அவரைப்பற்றி கட்சித் தொண்டர்கள் மத்தியில் காணப்படக்கூடிய உணர்வுகளையும் அத்வானி சரியாக மதிப்பிடவில்லை. இதனால் அத்வானியை கட்சித் தொண்டர்கள் பரிகாசம் செய்யும் நிலையே இறுதியில் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு சிரேஷ்ட அரசியல்வாதிக்கு இதுதேவையா? வயது முதிர்ந்துவிட்டாலும் கூட, அடுத்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட வேண்டுமென்ற ஆசையை இன்னமும் அத்வானி கொண்டிருக்கிறார் என்று கட்சியின் பல தலைவர்களும் தொண்டர்களும் நினைக்கிறார்கள். மன்மோகன்சிங்கைத் தோற்கடிக்கக்கூடிய நல்லவாய்ப்பு இருந்தபோதிலும், கடந்த பொதுத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை வெற்றிக்கு வழி நடத்திச் செல்ல அத்வானி தவறினார். அப்படியிருந்தும் கூட, இன்னமும் மீண்டும் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடவேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்.

## தகர்ந்துபோகிறது தேசிய ஜனநாயகக் கூட்டணி

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் கடந்த 17 வருடகாலமாக அங்கம் வகித்த ஐக்கிய ஜனதா தளம் அக்கூட்டணியில் இருந்து இப்போது விலகியிருக்கிறது. ஐக்கிய ஜனதா தளத்தின் பிரதான தலைவரும் பீஹார் மாநில முதலமைச்சருமான நிதிஷ்குமார் நரேந்திரமோடியை கடுமையாக வெறுப்பவர். பீஹார் மாநிலத்தில் தனக்கு ஆதரவாக இருக்கின்ற முஸ்லிம்கள் மத்தியில் மோடி மீது கடுமையான வெறுப்பு இருக்கிறது என்பதை நிதிஷ்குமார் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். ஆனால், மோடி மீதான நிதிஷ்குமாரின் வெறுப்பு தன்னகம்பாவத்துடன் சம்பந்தப்பட்டது என்று அவரின் கட்சியையும் பாரதிய ஜனதாவையும் சேர்ந்த தலைவர்கள் கருதுகிறார்கள். நிதிஷ் குமாரும் கூட பிரதமராக வரவேண்டுமென்ற ஆசையை வளர்த்திருப்பவர்தான். உண்மையில் எந்த அரசியல்வாதிக்கு ஆசையில்லை?

லல்லு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதாத் தளம் கட்சியை ஆட்சியிலிருந்து விரட்டிய பிறகு பீஹாரில் பாரதிய ஜனதாவும் ஐக்கிய ஜனதா தளமும் மிகவும் வெற்றிகரமாக கூட்டணி அரசாங்கத்தை நடத்திவந்திருக்கின்றன. என்றாலும், தான் முதலமைச்சராக வந்த பிற்பாடு நிதிஷ்குமார் அந்த மாநிலத்தில் பிரசாரங்களுக்கு மோடியை அனுமதித்ததில்லை. முன்னதாக பாரதீய ஜனதாவும் கூட, நிதிஷ் குமாரின் இந்தவிருப்பத்துக்கு இணங்கவே செய்தது. பீஹார் பாரதிய ஜனதாத் தலைவரும் பிரதி முதலமைச்சருமான சுசில் மோடி தங்களுக்கு நரேந்




திரமோடியின் சேவைகள் தேவை யில்லை என்று கூறியிருந்தார். குஜ ராத் முதலமைச்சரால் வழங்கப்பட்ட உதவிகளையும் கூட நிதிஷ் குமார் திருப்பியனுப்பினார். ஆனால், இப் போது நிலைமை மாறிவிட்டது.


நரேந்திரமோடியை முன்னிலைப் படுத்தவேண்டுமென்ற தூண்டுதலி னால் கவரப்பட்டவர்களாக பீஹார் பாரதிய ஜனதாத் தொண்டர்கள் காணப்படுகிறார்கள். மாநிலத்தில் ஆட்சியில் பங்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று பாரதிய ஜனதா வின் பீஹார் பிரிவு தீர்மான மொன்றை எடுத்தது. அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் அமைச்சு அலு வலகங்களுக்குச் செல்வதற்கு மறுத்த னர். பிரதி முதலமைச்சர் சுசில் மோடி ஊழலற்ற முறையில் சிறப்பாக நிர் வாகத்தை நடத்துபவர் என்று பெய ரெடுத்தவர். அவரும் தேசிய ஜனநா யகக் கூட்டணியின் தலைவர் நந்த கிஷோர் யாதவும் முதலமைச்சர் நிதிஷ் குமாரைச் சந்திக்க மறுத்தனர். இத்தகைய சூழ்நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து ஐக் கிய ஜனதாதளம் வெளியேறுவதைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடிய தாக இருக்கவில்லை. மோடியை பிர தமர் வேட்பாளராக்கப்போவதில்லை என்று பிரகடனம் செய்யுமாறுகூட நிதிஷ் குமார் பாரதிய ஜனதாவிடம் கேட்டமை தான் நிலைவரங்களை மேலும் சிக்கலாக்கியது.

### சமஷ்டி முன்னணி

இது இவ்வாறிருக்க, இன்னொரு புதிய அரசியல் நிகழ்வுப் போக் கொன்றையும் அவதானிக்கக்கூடிய தாக இருக்கிறது. திரிநாமுல் காங்கி ரஸ் தலைவியான மேற்குவங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி காங் கிரஸோ, பாரதிய ஜனதாவோ அல் லது இடதுசாரிக்கட்சிகளோ இல்லாத அரசியல் கூட்டமைப்பொன்றை உரு வாக்கும் முயற்சிகளில் இறங்கியிருக் கிறார். மத்திய அரசாங்கத்தின் கொள் கைகள் காரணமாக தங்களது மாநில அரசாங்கங்களை நடத்துவதில் ஒரே மாதிரியான பிரச்சினைகளை எதிர்







நோக்குகிற கட்சிகளை உள்ளடக்கிய சமஷ்டி முன்னணி (Federal Front) ஒன்றை அமைப்பதே மம்தா பானர் ஜியின் நோக்கமாக இருக்கிறது. சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் (உத்தரப்பிர தேசம்), நிதிஷ்குமார் (பீஹார்), பிஜு

**தங்களது மாநில அரசாங் கங்களை நடத்துவதில் ஒரே மாதிரியான பிரச்சி னைகளை எதிர்நோக்கு கின்ற கட்சிகளை உள்ளடக்கிய சமஷ்டி முன்னணி ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் மேற்கு வங்காள முதல மைச்சர் மம்தா பானர்ஜி இறங்கியிருக்கிறார்.**

ஜனதா தளம் கட்சியின் தலைவர் நவின் பட்நாய்க் (ஒரிசா) ஆகியோரு டன் ஏற்கனவே மம்தா பேசியிருக்கி றார். ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள தெலுங்கு தேசம் கட்சி, தெலுங்கானா ராஷ்டிரிய சமித்தி ஆகியனவும் இதில் இணையக்கூடும். இவர்களி னால் கணிசமான எண்ணிக்கை ஆச னங்களைப் பெறக்கூடியதாக இருக் குமென்றால், திராவிடமுன்னேற்றக் கழகம், அண்ணா தி.மு.க.மற்றும் தேசிய காங்கிரஸ் போன்ற ஏனைய கட்சிகளும் இணையக்கூடும். பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தோன் றக்கூடிய நிலைவரத்தையும் காங்கி ரஸ் தலைமையிலான ஐக்கிய முற் போக்குக் கூட்டணியின் செயற்பாட் டையும் பொறுத்தே இது அமையும்.

இத்தகையதொரு சூழ்நிலையில் சகலரின் கவனமும் நரேந்திரமோடி மீதே இருக்கிறது. குஜராத்தில் செய்த

தைப் போன்று தேசிய ரீதியிலும் அவரால் சாதித்துக்காட்டக்கூடியதாக இருக்குமா? விளைவு என்னவாகவும் இருக்கக்கூடுமென்றாலும், மோடி உண்மையில் ஒரு சவால் என்பதை சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் பகிரங்கமாக ஒத்துக்கொண்ட அதேவேளை, வேறு தனிப்பட்ட முறையில் இதைக் கூறியிருக்கிறார்கள். மோடியைத் தாக்குவதற்கு மேற்கொள்ளப்படுகிற சகல முயற்சிகளுமே அவர்களைத் திருப்பித் தாக்குகின்றன. செயற்திறனைப் பொறுத்தவரை மோடிக்கு ஒப்பீடு இல்லை என்றே தோன்றுகிறது. எதிரான அரசியல் பார்வை இருந்தாலும் கூட, தேசிய காங்கிரஸ் தலைவர் பாரூக் அப்துல்லா, காங்கிரஸ் அரசாங்கத்தின் அமைச்சர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப்பல தரப்பினரும் மோடியைப் பாராட்டியிருக்கிறார்கள்.

எடுத்தகாரியத்தை நிறைவேற்றுவதில் மோடி எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார். நுட்பமான விபரங்களைக் கூட மிகவும் விரிவாக ஆராய்ந்த பிறகே அவர் தீர்மானத்தை எடுப்பார். குஜராத்தில் அனேகமாக சகல திட்டங்களிலுமே மோடியின் இந்தச் செயற்திறன் முத்திரையைக் காணக்கூடியதாக இருக்கிறது. பாரதிய ஜனதாவின் தேசிய பிரசாரக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு அவர் தேசிய மட்டத்தில் மீண்டும் கட்சியை அதிகாரத்துக்கு கொண்டுவருவது எவ்வாறு என்று திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது. 80 எம்.பி.க்களை லோக்சபாவிற்கு அனுப்பும் உத்தரப்பிரதேசத்தினூடாகவே இதைச் செய்ய முடியுமென்பதை மோடி அறிவார். அதனால், தனது நம்பிக்கைக்குரிய அமித் ஷாவை உத்தரப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச்செயலாளராக அவர் நியமித்திருக்கிறார். எதிர்வரும் ஆகஸ்டில் உத்தரப்பிரதேசத்துக்கான தனது பயணத்துடன் நாடுபூராவுமான சுற்றுலாவை மோடி ஆரம்பிக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தி பெருநிலப்பகுதியிலேயே, பிரதானமாக உத்தரப்பிரதேசத்திலும் பீஹாரிலுமே அவர் தனது கவனத்தைக் கூடுதலாகச் செலுத்தக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் சதிஷ்கார் போன்ற ஏனைய மாநிலங்களில் பாரதிய ஜனதா நல்ல செல்வாக்கான நிலையில் இருக்கிறது.

கடந்த சில வருடங்களாக தனக்கு பல முட்டுக்கட்டைகளை தோற்றுவித்த அத்வானியையும் இணைத்துக்கொண்டுதான் மோடி தனது செயற்பாடுகளை முன்னெடுப்பாரா? இது முக்கியமான ஒரு கேள்வி. உத்தரப்பிரதேசத்தின் ஊடாக அத்வானி ரதயாத்திரை சென்றவேளையில், அவரின் தேரோட்டி மோடி என்பது குறிப்பிடத்தக்கது. 2002 குஜராத் கலவரங்களைத் தொடர்ந்து முதலமைச்சர் பதவியில் இருந்து மோடியை அகற்றுவதற்கு முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நினைத்தபோது அதைத் தடுத்தவர் அத்வானி என்றும் கூறப்பட்டது. அது கூட, கோவாவில் இடம்பெற்ற தேசிய நிறைவேற்றுக்குழுவின் கூட்டத்திலேயே நடந்தது. ஆனால், இவையெல்லாம் சரித்திரமாகிவிட்ட சம்பவங்கள், இப்போது மோடியின் நேரம். எனவே, அத்வானி மீண்டும் எதிர்த்துநின்றால், அதனால் ஏற்படக்கூடிய தாக்கம் என்ன? நடந்துமுடிந்த தேர்தல்களின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது அத்வானியின் செல்வாக்கு காரணி கருத்திலெடுக்கப்படக்கூடியதாக இருக்கவில்லை. இளைஞர், யுவதிகளும் படித்தவர்களும் ஒரு மாற்றத்தையும் உறுதியான தலைமைத்துவமொன்றையுமே விரும்புகிறார்கள். பல்வேறு நிறுவனங்களினாலும் பத்திரிகைகளினாலும் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புகளில் 30 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்று நல்லதொரு ஆரம்பத்தில் மோடி நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ராகுல் காந்தி, சோனியா காந்தி உட்பட ஏனைய சகல தலைவர்களும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். இந்த நிலைமை கட்சித்தொண்டர்களை உஷார்படுத்தியிருக்கிறது. ■




*(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இத்தகைய சூழ்நிலையில் ஊடகங்களுக்கான ஒழுக்கக் கோவை பற்றி அரசியல்வாதிகள் பேசுவது விபசாரிகள் கற்புடைமை பற்றிப் பேசுவதற்கு ஒப்பானதாகும். பழிபாவத்துக்கு அஞ்சாமல் செயற்படுகின்ற அரசியல்வாதிகள் முதலில் தங்களுக்கென ஒரு ஒழுக்கக் கோவையை வகுப்பதே மிகவும் பொருத்தமான காரியம் என்று ஊடகத்துறையினர் பேசிக்கொள்கிறார்கள். ■

அ.மார்க்ஸ்



# தகவல் அறியும் உரிமையா?


உபகண்ட அரசியல்

## இந்திய அரசியல் கட்சிகள் ஆத்திரம்

**கட்சியே எல்லாவற்றையும் விட உயர்ந்தது. மக்கள் வெறும் மந்தைகள். வெறுமனே வென்றெடுக்கப்பட வேண்டியவர்கள் என்ற மனோபாவத்தின் விளைவுதான் இன்று இடதுசாரிக் கட்சிகள் மத்தியிலும் மலிந்து கிடக்கும் ஊழல்**

குடிமக்கள் அரசு நிறுவனங்களிடமிருந்து தேவையான தகவல்களைக் கோரினால் ஒரு மாதத்திற்குள் அந்தத் தகவல்களை அரசு தந்தாக வேண்டும் என்கிற தகவல் உரிமைச் சட்டம் (Right to Information Act) கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் செயல்பட்டுவருகிறது. குறைபாடுகள் இருந்தபோதும் ஜனநாயக ஆளுகையில் இது ஒரு வரவேற்கத்தக்க புரட்சிகரமான மாற்றம் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடில்லை. இரண்டு நாட்களுக்கு முன் இந்தியாவின் முக்கிய அரசியல் கட்சிகளும் கூட தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை பற்றி வாய்கிழியப் பேசும் அரசியல் கட்சிகள் உடனடியாக இதை ஒத்த குரலில் எதிர்க்கத் தொடங்கியுள்ளன.

காங்கிரஸ், பா.ஜ.க, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்), இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ), தேசியவாத காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவற்றை தகவல் அறியும் சட்ட எல்லைக்குள் கொண்டு வரும் முயற்சி, அரசியல் கட்சிகளிடமிருந்து கடும் எதிர்வினைகளைத் தோற்றுவித்துள்ளது. காங்கிரஸ், சி.பி.எம், ஐக்கிய ஜனதா தளம் முதலியன இதைக் கடுமையாக எதிர்த்துள்ளன. பா.ஜ.க.வின் பேச்சாளர் பிரேம் மிட்டலின், வெளிப்படைத் தன்மையை வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் இதன் நோக்கம் மற்றும் இந்தத் தகவல் உரிமையின் விளைவாக எந்த அளவிற்குத் தகவல்களைக் கட்சிகள் கொடுக்க நேரிடும் என்பது தெளிவாக்கப்பட வேண்டும் என இழுத்துள்ளார். இடதுசாரிக் கட்சிகள் இதில் பிளவுபட்டுள்ளன. சி.பி.ஐ.யின் குருதாஸ் குப்தா இதை வரவேற்றுள்ளதோடு, இந்த ஆணையை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் செல்லமாட்டோம் என்றும் கூறியுள்ளார். அரசியல் கட்சிகள் இந்த நாட்டின் அரசியலமைப்பின் ஓரங்க



மாக உள்ளபோது அவற்றை தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ்கொண்டு வரத்தான் வேண்டும் என்றும் கூறியுள்ளார். நக்சல்பாரி அமைப்புகளில் ஒன்றான சி.பி.ஐ. எம்.எல் கட்சியும் இதை வரவேற்றுள்ளது. ஆனால், சி.பி.எம். கட்சி இந்த ஆணையை கடுமையாக எதிர்த்துள்ளது.

நாங்கள் வருமான வரித்துறைக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் ஏற்கனவே கணக்குக் காட்டிக் கொண்டு தான் இருக்கிறோம். அரசியல் கட்சிகளைப் பொது நிறுவனங்கள் (Public Authority) எனத் தகவல் ஆணையம் கூறுவதை ஏற்க இயலாது. அவை தன் உறுப்பினர்களுக்கு மட்டுமே பொறுப்பாக இருந்தால் போதுமானது. உட்கட்சி விவாதங்கள், அமைப்பு முடிவுகள், எந்த அடிப்படையில் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர் முதலானவற்றை எல்லாம் எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என சி.பி.எம். கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

மத்திய தகவல் ஆணையத்தின் இந்த ஆணை குறித்து, தகவல் உரிமைச் சட்டம் குறித்த வினோதமான விளக்கம் இது. சொல்லப்படும் காரணங்கள் மதிக்கத்தக்கன அல்ல என ப.சிதம்பரம் சீறியுள்ளார். மனிஷ் திவாரி, ஜனார்தன் திரிவேதி என பிற காங்கிரஸ் தலைவர்களும் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

ஊழலில் உலக சாதனை புரிந்துள்ள காங்கிரஸ் கட்சி இந்த ஆணையை எதிர்ப்பதில் வியப்பில்லை. சி.பி.எம். ஏன் இவ்வளவு பதற்றம் அடைகிறது?

பெரிய அளவில் அரசிடமிருந்து நிதி உதவிகளையும், மானியங்களையும் அரசியல் கட்சிகள் பெறுகின்றன. தேர்தல் நேரங்களில் அரசு ஊடகங்களின் மூலம் அவை பிரசாரம் செய்யவும் அனுமதிக்கப்படுகின்றன. அரசின் அங்கங்கள் பலவற்றையும் கட்டுப்படுத்தும் இடங்களில் உள்ள அரசியல் கட்சிகள் அரசின் இந்த அங்கங்கள் மட்டும் வெளிப்படைத் தன்மையுடன் இயங்க வேண்டும், தாங்கள் அப்படி இருக்க இயலாது எனச் சொல்வது என்ன நியாயம்? என மத்திய தகவல் ஆணையம் கேட்டுள்ளதற்கு இந்த ஆணையை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் எதுவும் பதிலளிக்கவில்லை.

காங்கிரஸ், பா.ஜ.க. இரண்டு கட்சிகளுக்கு மாத்திரம் 255 கோடி ரூபா அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. அரசு கட்டிடங்கள் வழங்கப்படுகின்றன. பல மாநிலங்களில் சட்டபூர்வமற்ற முறைகளில் அரசு கட்டிடங்களை கட்சிகள் ஆக்கிரமித்துள்ளன.

பெரிய அளவில் கார்பொரேட்களிடமிருந்து இவை நிதி பெறுகின்றன. இதில் கறுப்பு மற்றும் ஊழல் பணங்களும் அடக்கம். இந்த ஊழல் பணத்தில் தொலைக்காட்சிகள் தொடங்கி நடத்தப்படுகிற கதையெல்லாம் நமக்குத் தெரியும். கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தொலைக் காட்சிகள் உள்ளன.

கார்பொரேட்களிடம் நேரடியாக நிதி உதவி பெறாதவர்களும் கூட தமது சொகுசான கட்சி அலுவலகங்கள் கட்டுவது, அவற்றை நவீன மயமாக்குவது முதலானவற்றிற்குப் பெரு நிறுவனங்களின் உதவிகளைப் பெறுகின்றனர்.

கார்பொரேட்கள் தவிர வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மூலமாகவும் அரசியல் கட்சிகளுக்குப் பெரிய அளவில் நிதி வருகின்றது. அவ்வாறு நிதி பெறும் கட்சிகளில் முன்னணியில் இருப்பது பா.ஜ.க. குஜராத் பூகம்ப நிவாரணத்திற்கென அமெரிக்காவிலிருந்து வசூலித்து அனுப்பப்பட்ட நிதி, 2002ஆம் ஆண்டுக் கலவரத்தில் முஸ்லிம்களை கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது என்கிற குற்றச்சாட்டை அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் ஆதாரங்களுடன் முன் வைத்ததை மறந்துவிட இயலாது.

சமீபத்தில் தேர்தல் ஆணையத்திற்கு அரசியல் கட்சிகள் சமர்ப்பித்துள்ள கணக்குகளின்படி கடந்த நான்காண்டுகளில் (2007-08 முதல் 2011-12 வரை) காங்கிரஸ் சேர்த்துள்ள சொத்து 1662 கோடி ரூபா. பகுஜன் சமாஜ் 1226 கோடி ரூபா. பா.ஜ.க 852 கோடி ரூபா. சி.பி.எம் எவ்வளவு தெரியுமா 355 கோடி ரூபா. கார்பொரேட்டுகளுக்கு மிக நெருக்கமாக உள்ள சமாஜ்வாதி, தேசியவாத காங்கிரஸ் எல்லாம் சொத்துச் சேகரிப்பில் சி.பி.எம்.முக்குக் கீழே உள்ளன.

இவ்வாறு சொத்து சேகரிப்புக் கணக்கைத்தான் கட்சிகள் காட்டியுள்ளனவே ஒழிய இது எவ்வாறு சேர்ந்தது என்பது குறித்த முழு விவரங்களையும் சி.பி.எம். உட்பட யாரும் சொல்லவில்லை.

நாங்கள்தான் தேர்தல் ஆணையத்துக்கும், வருமானவரித் துறைக்கும் கணக்குக் கொடுத்து விட்டோமே என்றால் மக்கள் கேட்கும்போதும் அதைச் சொல்லிவிட்டால் என்ன குறைந்துவிடப் போகிறது? நாங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமே பொறுப்பானவர்கள் (மக்களுக்கல்ல) எனத் திமிராகச் சி.பி.எம். சொல்கிறதே அதைத்தான் ஸ்டாலினிய மனோபாவம் என்கிறோம். அதாவது கட்சியே எல்லாவற்றையும் விட உயர்ந்தது. மக்கள் வெறும் மந்தைகள். வெறுமனே வென்றெடுக்கப்பட வேண்டியவர்கள்.

இப்படிப்பட்ட மனோபாவத்தின் விளைவுதான் இடதுசாரிக் கட்சிகளிலும் இன்று ஊழல்கள் மலிவது. கேரளத்தில் சி.பி.எம் தலைவர் பினரவி விஜயன் மீது ஊழல் குற்றச்சாட்டு. தமிழ்நாட்டில் திருப்பூர் எம்.எல்.ஏ. கோவிந்தசாமி முதலாளிகளிடமிருந்து லஞ்சப் பணம் குவித்து சொத்து சேர்த்தபின் சி.பி.எம் கட்சி அவரை நீக்கியது. உடனே அவர் இதைவிட மகா பயங்கரமான ஊழல்களை எல்லாம் புரிந்து ஏப்பம் விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் தி.மு.க.வில் ஒட்டிக் கொண்டார். மேற்குவங்கத்தில் தரம்பூரில் அனுஜ் பாண்டே என்கிற சி.பி.எம். தலைவரின் சொகுசு பங்களாவை மக்களே உடைத்தெறிந்தனர். உடனடியாக மாநிலச் செயலாளர் பீமன் போஸ், அது அவரது மூதாதையரின் சொத்து என அறிக்கை விட்டார். அப்படி எந்

தச் சொத்தையும் அவரது மூதாதையர் அவருக்கு விட்டுச் செல்லவில்லை என்பதை அவரது உறவினர்கள் அம்பலப்படுத்தினர்.

வேட்பாளர் தேர்வுக்கான காரணங்களை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க இயலுமா என்கிறது சி.பி.எம் கட்சி. உண்மைதான், தொழிலாளிகளுக்குத் துரோகம் செய்து சொத்து சேர்த்த திருப்பூர் கோவிந்தசாமி, கொலைக்குற்றம் சாட்டப்பட்டு கோர்ட் வாசல்களில் தவம் கிடக்கும் தளி ராமச்சந்திரன் போன்றோர் எல்லாம் எவ்வாறு தேர்வு செய்யப்பட்டனர் என்று எப்படிச் சொல்லிக் கொண்டிருக்க முடியும்?

பெரிய கட்சிகளின் பகாசுர ஊழல்களை இங்கே பட்டியல் இடாததற்குக் காரணம் அவற்றைச் சொல்லிமாளாது என்பதுதான். அவற்றோடு ஒப்பிடும்போது இடதுசாரிகளின் ஊழல்கள் எல்லாம் சும்மா பிங்கி, பிங்கி என்பது உண்மைதான். ஜனநாயகத்தின் மிக முக்கியமான அம்சங்களான மக்களுக்குப் பொறுப்பாதல், வெளிப்படைத்தன்மை முதலியவற்றை இவர்களும் எதிர்க்கிறார்களே என்பதால்தான் இதை எல்லாம் சொல்ல வேண்டி வந்துவிட்டது. ஒன்றும் மகா புரட்சிகரமான நிகழ்ச்சிநிரல் எதையும் கையில் வைத்துக் கொண்டு இவர்கள் செயல்படவில்லை. ஒரு ராஜ்ய சபா உறுப்பினர் பதவிக்காக தங்களுக்குள்ளேயே மோதிக்கொண்டு, அம்மா.. தாயே எனத் தவம் கிடப்பவர்கள்தான் இவர்கள், மக்கள் கேட்பதைச் சொல்லிவிட்டால் செய்யப் போகிற புரட்சிக்கு என்ன ஆகிவிடப் போகிறது?

ஒருவேளை கொள்கை முரண்கள், அமைப்பு இரகசியங்கள் ஆகியவற்றைச் சொல்வது சிக்கல் என்றால் அவற்றை விலக்கிவிட்டு மற்றவற்றைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்குள் கொண்டு வந்தால் என்ன? எதிர்க் கட்சிகள் வீண் வம்பு செய்வதற்கு இது ஒரு வாய்ப்பாகப் போய் விடுமே என்றால் ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளை எதிர்கொண்டு தானே ஆக வேண்டும்? வேண்டுமானால் நடைமுறை அனுபவங்களைக் கொண்டு சில ஆண்டுகளுக்குப் பின் மறுபரிசீலனை செய்து பார்க்கலாமே.

■(கேலிச்சித்திரம் - நன்றி: இந்து)

---

*(31ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

தேசியக் கட்சி முன்வைத்துள்ள அரசியல்சட்டம் குறித்த கருத்துகளும் சரி, பாராளுமன்றக் குழுவின் முன் வைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கலாம். இடைப்பட்ட காலத்தில் அரசின் தற்போதைய முனைவு, ஹெல உருமயவின் முயற்சிக்கு உதவி செய்ததாக கருதுவதற்கு இடமிருந்தாலும், அதனை நீர்த்துப் போகச்செய்யும் ஒரு தந்திரோபாயம் என்றே கருதப்பட வேண்டும். வேறொன்றுமில்லை என்றா லும், பொதுநலவாய உச்சிமாநாட்டிற்கு முன், பதின்மூன்றாவது சட்டதிருத்தம் குறித்து இந்தியாவுடன் கருத்து மோதலுக்கு அரசு தயாராயிருக்காது என்றே எண்ண வேண்டும்.

தமிழர்களைப் பொறுத்தவரையில், தற்போதைய சூழ்நிலையில் தேவைப்படுவதெல்லாம், வடக்கு மாகாணசபைத் தேர்தலும் அதில் கூட்டமைப்பின் வெற்றியுமே. சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியாது. அது போன்றே ஆட்சிப் பொறுப்பு இல்லாமல், கூட்டமைப்பும் அரசியல் செய்ய முடியாது. என்ன, ஆட்சிப்பொறுப்புடன் அரசியலில் பொறுப்பாக நடந்து கொள்ளவேண்டும் என்ற கட்டாயமும் சித்தாந்தமாக கூட்டமைப்பின் பல்வேறு கட்சிகளிடமும் தலைவர்களின் மனதிலும் பதிய வேண்டும். அவ்வாறானால் மட்டுமே சட்டியில் இருக்கும் அதிகாரம் அகப்பையில் வந்து அனுபவத்திலும் வரும். வெறும் வாயால் அவலை அரைக்கலாமே தவிர அரிசியை ஆக்கி, சமையல் செய்துவிட முடியாது!

இல்லை என்றால், பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களையே கூட்டமைப்பு அமைச்சர்கள் தங்களில் ஒருவர் மாற்றி ஒருவரை அரசியல் ரீதியாக பழிவாங்குவதற்கான ஆயுதமாகவே மாறிவிடும். மாறாக, தற்போது இருக்கும் வகையில் ஆட்சி, அதிக அதிகாரங்கள் பாராளுமன்றக் குழுவின் மூலம் பெற்றுக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்று கூட்டமைப்பு முடிவு செய்து செயல்படுமாயின், இடைப்பட்ட காலத்தில் பெறப்படும் அரசு அனுபவம் மூலம் தங்களது அரசியல் கோரிக்கைகளுக்கு தெளிவான செயல்வடிவத்தை அவர்களால் கொடுக்க முடியும். அப்போது மட்டுமே, தமிழ்ச் சமூகம் கோரும் அதிகாரப் பரவலாக்கம் உண்மையிலேயே அந்த மக்களுக்கு பயனுள்ளதாக அமைவதற்கான வாய்ப்பு ஏற்படும். ■

---

*(59ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அதிகாரசபையொன்றை அமைத்து, ஏற்பாட்டியலைத் திட்டமிடுவதற்காக ஹெல்ப்ஏஜ் போன்ற தாபனமொன்றின் சேவைகளை தெரிவுசெய்ய வேண்டும். இதனால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஒரு சிறு கொடுப்பனவிலான 'வார்ட்'டுகளையும், முதியோர்களுக்கான பெரும் எண்ணிக்கையிலான சுகவீனங்களை அறிந்து வைத்திருக்கும் வைத்தியர்களினால் நிரு வகிக்கப்படும் மருந்தகங்களையும் மட்டுமே அரசாங்க வைத்தியசாலைகள் கொண்டிருக்கும். முதியவர்களுக்கு உதவுவதற்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக தனியார்துறை நிறுவனங்களின் உதவி பெறப்பட முடியும். உண்மையில், களியாட்ட மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும் அனுசரணைகளை ஒருவர் பார்க்கும் போது, இரு சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும், வேறு சமூக சேமநலன் தாபனங்களுடனும் இணைந்து முதியோர் நிதியமொ ன்றை அமைப்பதற்காக சிறிதளவு பணத்தை விடுவிப்பதற்கு கூட்டாண்மை சமூக செயல்நோக்கத்தின் உதவி தூண்டப்பட முடியும். ■

மானெல் அபேரத்ன
ஓய்வுபெற்ற தகவல்
திணைக்களப் பணிப்பாளர்

தென்னாடன்

# சூடு பிடிக்கும் கச்சதீவு சர்ச்சை

தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக, மக்களின் ஓட்டுகளை எளிதாகப் பெற உதவும் மந்திரச் சொல்லாக பாவிக்கப்பட்டு வருவது இலங்கைத் தமிழர் விவகாரமும், தனி ஈழமும்தான். இப்போது இலங்கைத் தமிழர் விவகாரத்துடன் தமிழ்நாட்டு மீனவர்களின் நலனும் சேர்ந்து கொள்ள, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் கதையாக, தமிழக கட்சிகள் எடுத்திருக்கும் கல் கச்சதீவு. இந்தத் தீவை இலங்கையிடமிருந்து பிடுங்கி விட்டால், இல ங்கை வாழ் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் உரிய பாதுகாப்பை இந்திய அரசாங்கம் எளிதாக வழங்க முடியும் என்கிற வாதம் தமிழக மக்களிடையே அரசியல் கட்சியினரால் பலமாக பரப்புரை செய்யப்பட்டு வருகிறது.

**இந்தியாவின் ஒரு பகுதியை அந்நிய நாட்டுக்கு கொடுக்கும் போது அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும். கச்சதீவு கொடு க்கப்பட்ட போது அப்படி செய்யவில்லை. ஆகவே இந்த ஒப்பந்தம் செல்லாது என்பதுதான் ஜெயலலிதாவின் வாதம். அரசியல் சாசனத்தை திருத்த வேண்டும் என்ற வாதம் கச்சதீவு விவகாரத்தில் பொருந்துமா?**






கச்சதீவை இலங்கை அரசாங்கம் இந்தியாவிற்கு திரும்பக் கொடுக்கும் சாத்தியம் இருக்கிறதா? 542 எம்.பி.க்களைக் கொண்ட இந்திய ஜனநாயக நாட்டில், 40 எம்.பி.க்களைக் கொண்ட தமிழகத்தில் உள்ள கட்சியினர் மட்டும் போராடி மீட்க முடியுமா? அதற்கு இந்திய மத்திய அரசாங்கம் செவிகொடுக்குமா? கச்சதீவு உண்மையில் யாருக்குச் சொந்தமானது? என்பதை அறியும் முன்னர், இந்தியாவால் இலங்கைக்கு சன்மானமாக கொடுக்கப்பட்ட கச்சதீவு பற்றி அறிந்துகொண்டால்தான் அதற்கான முக்கியத்துவம் புரியும்.

இலங்கையின் நெடுந்தீவிலிருந்து பத்தரை மைல் தெற்கே பாக். நீரிணைப்பு பகுதியில் அமைந்துள்ளது கச்சதீவு. தமிழகத்தின் ராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவில் அமைந்துள்ள இந்தத் தீவின் பரப்பளவு 285 ஏக்கர்.

1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்களை அடுத்து, கச்சதீவை இந்தியா, இலங்கை வசம் ஒப்படைத்தது. (ஆனால், 1920 ஆம் வருட வாக்கிலிருந்து தொடங்கி கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற சர்ச்சை இரு நாடுகளிடையே இருந்து வந்தது என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும்).

இங்குள்ள புனித அந்தோனியார் தேவாலயம் என்ற கத்தோலிக்க தேவாலயத்தினை 20ஆம் நூற்றாண்டில் ராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சீனிக்குப்பன் படையாச்சி என்பவர் நிர்மாணித்தார். இந்த தேவாலயத்தில் ஆண்டுதோறும் திருவிழா நடைபெற்று வருகிறது. இத் திருவிழாவில், இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொள்கிறார்கள். ஆனால், 1983 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடங்கியதை அடுத்து, இந்த திருவிழா கொண்டாடப்படுவது நிறுத்தப்பட்டு, கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை

யில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, 2010ஆம் ஆண்டி லிருந்து மீண்டும் திருவிழா நடை பெற்று வருகிறது. நான்காவது ஆண் டாக, இந்த ஆண்டும் திருவிழா நடைபெற்றது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படையால் தொடர்ந்து தாக்கப்படுவ தற்கு காரணம், கச்சதீவை இலங்கை க்கு தாரை வார்த்ததே என்ற கருத்து தமிழக அரசியல் கட்சிகளால் தொட ர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகி றது. இந்நிலையில், கச்சதீவு விவ காரம் தொடர்பாக இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் கையெ ழுத்தான ஒப்பந்தங்கள் குறித்த விவ ரங்களைப் பார்ப்போம்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை, கச்சதீவு ராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. இதற்கு வரலாற்று ஆவணங்கள் பல உள்ளன. இந் நிலையில், 1947 ஆம் ஆண்டு இந் தியா சுதந்திரமடைந்த பின்னர், ஜமீன் முறை ஒழிக்கப்பட்டு, ராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த கச்சதீவு இந் தியாவுடன் இணைக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு, இந்தியா இலங் கைக்கு இடையில் உள்ள பாக். ஜல சந்தி கடல் பகுதியில் எல்லை வகுப்ப தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கையெ ழுத்தானது. இதனடிப்படையில், கச்ச தீவு இலங்கை வசம் சென்றது.

அதற்கு முன்புவரை, இந்திய இலங்கை மீனவர்கள், பாக். ஜலசந்தி பகுதியில் ஒன்றாக இணைந்தே மீன் பிடித்து வந்தனர். கச்சதீவுப்பகுதியை தமிழக மீனவர்கள் வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக்கவும் பயன் படுத்தியுள்ளனர். 1974ஆம் ஆண்டு இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில், கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர் கள் வலைகளை உலர்த்தவும் ஓய்வெ டுக்கவும் பயன்படுத்தலாம் என்று உரிமைகள் வழங்கப்பட்டன.

மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடா ஆகிய இரு கடல் பகுதிகளிலும் கடல் எல்லையை வகுக்க 1976ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இடையே மீண்டும் ஒரு ஒப்பந்தம் கையெழுத் தானது. இந்த ஒப்பந்தத்தில், தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக் குள் சென்று மீன்பிடிக்கத் தடை விதிக் கப்பட்டது. 1976ஆம் ஆண்டு ஏற் பட்ட இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு, தமிழக மீனவர்கள் எல்லை மீறிய தாகக்கூறி, 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13ஆம் திகதி முதல் முறை யாக தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

அதன் பின் தொடர்ச்சியாக, தற் போது வரை 350-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசுக் குறிப்பு தெரிவிக்கிறது. மேலும், 500 -க்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகா யம் அடைந்துள்ளதாகவும், இந்த விவகாரத்தில் தமிழக மீனவர்களின் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பி லான சொத்துகள் சேதமடைந்துள்ள தாகவும் தமிழக அரசால் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட் டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படை யால் தாக்கப்பட்டுள்ளனர் என்கிற செய்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமி ழகத்தில் பல்வேறு போராட்டங்கள் பல்வேறு கட்சியினரால் அவ்வப் போது நடைபெற்ற வண்ணமிருக்கி ன்றன. தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படாமல் இருக்க கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை இப் போது தமிழக அரசியல் கட்சிகளால் அடிக்கடி சொல்லப்படும் வார்த்தை யாகி விட்டது. இதில் மற்ற கட்சிக ளைக் காட்டிலும் அசுர வேகத்தில் செயல்பட்டு வருபவர் முதல்வர் ஜெயலலிதா மட்டுமே. ஏனென்றால், தாம் எதிர்க்கட்சியாக இருக்கும் போதே, அதாவது 2008ஆம் ஆண் டிலேயே தற்போதைய தமிழக முதல் வர் ஜெயலலிதா, ''கச்சதீவை இலங் கைக்கு இந்தியா அளித்தது செல் லாது'' என இந்திய உச்ச நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கை இப்போது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கோருகிறார். அவர் தொடுத்துள்ள வழக்கின் சாராம்சங்களைப் பார்ப்போம்.

''இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை, அந்நிய நாட்டிற்கு கொடுப்பது தொடர்பான உடன் பாட்டை நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் 'பெருபாரி' வழக்கில் தீர்ப் பளித்து உள்ளது. இந்தத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணான வகையில் நாடாளுமன்றத்தின் இரு அவைக ளின் ஒப்புதல் இல்லாமல், கச்சதீவை தாரை வார்க்கும் ஒப்பந்தம் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற் படுத்தப்பட்டது செல்லத்தக்கதல்ல.'' இதுதான் தமிழக முதல்வருடைய மனுவின் மையக் கரு.

அதாவது இந்தியாவின் ஒரு பகு தியை அந்நிய நாட்டிற்குக் கொடுக் கும்போது அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும். கச்சதீவை வழங் கும்போது அப்படிச் செய்யவில்லை. ஆகவே இந்த ஒப்பந்தம் செல்லாது என்பதுதான் தமிழக முதல்வரின் வாதம். இந்தியாவின் ஒரு பகுதியை இன்னொரு நாட்டிற்கு வழங்கும் போது அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டும். அப்போதுதான் அது செல்லும். ஆனால், கச்சதீவு விவகா ரத்தில் இது பொருந்துமா?

1974ஆம் ஆண்டில் கச்சதீவை இலங்கைக்கு அளிப்பதென முடிவு செய்யப்பட்ட பிறகு, இது குறித்து விவாதம் நடந்தது. அப்போதைய வெளியுறவுத் துறைச்செயலர் கேவல் சிங்கும் பிரதமரின் செயல் அதிகாரி பி.என். தாரும் இது குறித்து விவாதித் தனர். கச்சதீவை இலங்கைக்கு வழங் குவதாகக் கூறினால், அரசியல் சாச னத்தைத் திருத்த வேண்டியிருக்கும்.

***(52ஆம் பக்கம் பார்க்க...)***

சர்வதேச விவகாரம்



# ரஷ்ய அரசியலில் ஒரு தடையைத் தகர்த்த விவாகரத்து

தன்னைவிடவும் அரை மடங்கு வயது குறைந்த உடற்பயிற்சி வல்லுனரான அலினா கபாயேவாவை திருமணம் செய்வதற்கு புட்டின் தயாராகிறார் என்ற ஊகங்கள் தீவிரமடைந்திருக்கின்றன

ரஷ்ய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியோ, தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றியோ அனேகமாக பகிரங்கத்தில் பேசுவதில்லை. அவை தொடக்கூடாத விடயங்கள் போன்றே கருதப்பட்டு வந்தன. ஆனால், 30 வருடகால மனைவிக்கும் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் இடையேயான விவாகரத்து இந்தத் தடையைத் தகர்த்தெறிந்திருக்கிறது.

தனது விவாகரத்துச் செய்தியை வெளிப்படுத்துவதற்கு ரஷ்ய ஜனாதிபதி வழமைக்குமாறான ஒரு வழியைத் தெரிந்தெடுத்தார். ஜூன் 6ஆம் திகதி இரவு அரசாங்கத் தொலைக்காட்சிக்கு வழங்கிய ஒரு பேட்டியில் புட்டினும் மனைவி லியுட்மிலா புட்டினாவும் தாங்கள் பார்த்த பாலே நடன நிகழ்ச்சி பற்றி சுவாரஸ்யமாகப் பேசினார்கள். இச் சம்பாசணையின் போது இடையில் தங்களுக்கிடையிலான மணவாழ்க்கையின் முறிவைப் பற்றிய செய்தியை வெளியிட்டார்கள். அண்மைக்காலமாக தாங்கள் ஒன்றாக வாழவில்லை என்றும் விவாகரத்துப் பெறுவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

ரஷ்யாவில் விவாகரத்து என்பது அடிக்கடி நிகழுகிற ஒன்று என்ற போதிலும், தங்களது திருமணங்களைத் தள்ளுபடி செய்வது உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளைப் பொறுத்தவரை ஏதோ தடுக்கப்பட்ட ஒன்று போன்றே இன்னமும் இருந்து வருகிறது. ரஷ்ய அரசியல்வாதிகள் தாங்கள் குற்றம் குறையில்லாத தனிப்பட்ட வாழ்வைக் கொண்டிருப்பவர்கள் போன்ற ஒரு இமேஜைக் காட்டிக்கொள்ள விரும்புபவர்கள். பல உயர்மட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தன்னினச் சேர்க்கையாளர்களாக இருக்கிறார்கள் என்றும் மனைவிமாரைக் கைவிட்டு விட்டார்கள் என்றும் வதந்திகள் பரவலாக உலவுகின்ற போதிலும் கூட, தங்கள் தனிப்பட்ட வாழ்க்கை மாசற்றது என்ற எண்ணத்தை பகிரங்கத்தில் ஏற்படுத்துவதில் இவர்கள் சமர்த்தர்கள்.

விவாகரத்துச் செய்துகொண்ட கடைசி ரஷ்யத் தலைவர் மகா பீட்டரேயாவார். அவர் 300 வருடங்களுக்கும் கூடுத

லான காலத்துக்கு முன்னர் தனது மனைவியை விவாகரத்துச் செய்தார். எதிர்காலத்தில் மன்னராக இருந்த 17 வயதான பீட்டரை அவரது தாயார் 1689ஆம் ஆண்டு யெவ்டோகியா லொபுகினா என்ற மங்கையைத் திருமணம் செய்யுமாறு நிர்ப்பந்தித்தார். தாயாரின் வலுக்கட்டாயத்தால் திருமணம் செய்து கொண்ட மகாபீட்டர் ஒன்பது வருடங்கள் கழித்து மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, அவளை ஒரு கன்னியர் மடத்திற்குள் அடைத்துவைத்தார். பிறகு அவர் 1711 ஆம் ஆண்டில் வேறு பெண்ணை மணந்துகொண்டார்.



சோவியத் சர்வாதிகாரி ஜோசப் ஸ்ராலினின் மனைவி நடேஷா அலிலுயேவர் 1932 இல் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். ஆனால், கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்த சோவியத் பத்திரிகைகள் வெறுமனே ஒரு சிறிய அறிவிப்பொன்றையே வெளியிட்டன. மரணத்துக்கான காரணம் குறித்து எதுவும் அதில் கூறப்படவில்லை.

மிக்கெயில் கொர்பச்சேவின் மனைவிதான் பகிரங்கத்தில் ஒரு பாத்திரத்தை வகித்த முதல் ரஷ்யத் தலைவர் ஒருவரின் வாழ்க்கைத்துணை. பல்கலைக்கழக விரிவுரையாளரான றெய்சா கொர்பச்சேவ் அரசுமுறை விஜயங்களின் போது கணவருடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவந்தார். சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். முன்னொருபோதுமில்லாத வகையிலான இந்த விளம்பரம் அவரை மிகவும் பிரபல்யமானவராக்கியது. ஆனால், றெய்சா கூடுதலான அளவுக்கு பகட்டுத்தனமாக நடந்து கொள்கிறார் என்று நினைத்த பல ரஷ்யர்கள் சினமடைந்தனர். ஆனால், சகல விதத்திலும் பார்க்கும்போது கொர்பச்சேவ் தம்பதியர் சந்தோசமான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்தனர் எனலாம். றெய்சா 1999 ஆம் ஆண்டு புற்றுநோய் காரணமாக மரணமடைந்தார்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு ரஷ்யாவின் முதல் ஜனாதிபதியாக வந்த போரிஸ் யெல்ட்சினின் மனைவி நெய்னா யெல்ட்சினா வெளியில் பெரிதாகக் காணப்படவில்லை. இது பல ரஷ்யர்களுக்கு திருப்தியைத் தந்தது. நெய்னா முதற் பெண்மணிக்குரிய கடமைகளை சுறுசுறுப்பாக நிறைவேற்றினார். ஆனால், பகிரங்கத்தில் பெரிய பாத்திரமெதையும் வகித்தார் என்று கூறுவதற்கில்லை. ரஷ்ய விளையாட்டு வீரர்களுக்கான தனது ஆதரவை வெளிக்காட்டுவதற்காக இன்னமும் கூட நெய்னா மாஸ்கோவில் டெனிஸ் சுற்றுப் போட்டிகளுக்கு வருகிறார். இந்தப் பாரம்பரியம் கணவரினாலேயே ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ரஷ்யாவில் விவாகரத்துச் சட்டங்கள் சிக்கல் ஏதுமற்றவை. கணவன், மனைவியர் விவாகரத்துப் பெற விரும்பினால், அதுவும் அவர்களுக்கு இளவயதுப் பிள்ளைகளும் (மைனர்) இல்லையென்றால் அவர்கள் நேரடியாக அரசாங்க பதிவுக் காரியாலயத்துக்குச் சென்று 400 ரூபிள்களை (12 அமெரிக்க டொலர்கள்) கட்டணமாகச் செலுத்த வேண்டியதுதான் பாக்கி. ஒரு மாதம் காத்திருக்க விவாகரத்துக்கிடைத்துவிடும்.

கணவனோ, மனைவியோ விவாகரத்துக்குப் பிறகு சொத்துகளைப் பிரித்துக் கொள்வதில் நீதிமன்றத்தை நாடாதபட்சத்தில், அல்லது வேறுவிதமாக இணக்கத்துக்கு வராதபட்சத்தில், இருவரும் சொத்துகளைச் சமமாகப் பிரித்துக் கொள்ளலாம். முறைப்படியான பிரிவுக்காலம் ஒன்று இல்லை இறுதியில் விவாகரத்து கிடைப்பதற்கு முன்னதாக தம்பதியர் தனித்தனியாக வாழவேண்டுமென்ற தேவை எதுவுமில்லை.

ரஷ்ய திருச்சபை (Russian Orthodox church) விவாகரத்துகளை ஊக்கப்படுத்துவதில்லை என்றபோதிலும், தேவாலயங்களில் திருமணஞ் செய்த தம்பதியருக்கு அவர்கள் விரும்பும்போது அது விவாகரத்தை தயக்கமின்றி வழங்கி விடுகிறது இரக்க உணர்ச்சி காரணமாக.

புட்டின் நீண்ட காலமாகவே குடும்பப் பண்புகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்தி வந்திருக்கிறார். கூடுதல் பிள்ளைகளைப் பெறவேண்டுமென்று ரஷ்யர்களை அவர் உற்சாகப்படுத்தி வந்திருக்கிறார். பெரிய குடும்பங்களைக் கொண்ட பெற்றோருக்கு நிதியுதவிகளையும் பரிசுகளையும் வழங்கியிருக்கிறார். 2012ஆம் ஆண்டு தனது மூன்றாவது (ஜனாதிபதிப்) பதவிக் காலத்துக்காக தேர்தலில் போட்டியிட்ட போது அவர் தனது முன்னுரிமைக்குரிய விவகாரங்களில் ஒன்றாக 'குடும்பத்தின் மீதான அர்ப்பணிப்பை' பேணுவதை வலியுறுத்தினார்.

மேற்குலக வாழ்க்கை முறை மீது நாட்டம் கொண்ட, படித்த நகர்ப்புற

ரஷ்யர்கள் புட்டின் மீது அதிருப்தியை வெளிக்காட்டி வந்திருக்கிறார்கள். ஆனாலும் புட்டின் வைதீக கிறிஸ்தவ பாரம்பரியங்களை மதிக்கின்ற கிராமப்புற பழமைவாத வாக்காளர்களைத் தனது பக்கம் கவர்ந்து ஆதரவுத் தளத்தை பலப்படுத்தப் பாடுபட்டார்.

தன்னைவிடவும் அரை மடங்கு வயது குறைந்த உடற்பயிற்சி வல்லுனரான பெண்மணி அலினா கபாயேவாவை திருமணம் செய்வதற்கு புட்டின் தயாராகிறார் என்ற ஊகங்களை விவாகரத்து செய்தி தீவிரப்படுத்தியிருக்கிறது. அவர்கள் இருவருக்கும் இடையே பல வருடங்களாக தொடர்பு இருந்துவருகிறது என்று வதந்திகள் உலவின. அந்த வதந்திகள் புட்டினின் கட்டிறுக்கமான உடல் வாகை மையமாகக் கொண்டு கட்டிவிடப் படுபவை என்று பலர் கருதுகிறார்கள். புட்டினின் வாழ்வில் வேறு ஒரு பெண்மணி இல்லை என்று அவரின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறியிருக்கிறார்.

2000ஆம் ஆண்டு முதற்தடவையாக ஜனாதிபதியாக வந்தது முதலிருந்து புட்டின் தனது குடும்பத்தை பலர் அறியச் செய்ததில்லை. 20-30 இடைப்பட்ட வயதில் இருக்கும் இரு மகள்மாரும் கடந்த 13 வருடங்களாக பகிரங்கத்தில் காணப்படவில்லை.

மரியா, யெகரெறீனா என்ற அந்த மகள்மார் ரஷ்யாவில் நலமே இருக்கிறார்கள் என்று தொலைக்காட்சிப் பேட்டியில் புட்டின் கூறினார். அவர்கள் இருவரும் திருமணஞ்செய்து கொண்டு வெளிநாடுகளில் வாழப் போய்விட்டார்கள் என்ற ஊகங்களை மறுதலிப்பதற்காகவே அவர் இதைச் சொல்ல வேண்டியிருந்தது. தனது குடும்பம் விளம்பரத்தை விரும்புவதில்லை. அதனால்தான் மக்களால் அவர்களைப் பார்க்க முடிவதில்லை என்றும் புட்டின் குறிப்பிட்டார்.

புட்டினின் பிள்ளைகளைத் தான் பகிரங்கத்தில் காணமுடியாது. ஆனால், தனது நாய்களையும் ஏனைய செல்லப் பிராணிகளையும் வெளியில் காட்டுவதில் அவருக்கு ஒரு பெரிய விருப்பம். அவர் ஒரு மிருகநேயர். 2008 அக்டோபரில் ஒரு இரவு விசேட அறிவித்தல் மூலமாக புட்டின் ஊடகவியலாளர்களை தனது வாசஸ்தலத்துக்கு அழைத்தார். ஏன் தெரியுமா? மூன்று நாட்களுக்கு முதல் தனக்கு பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த புலிக்குட்டியொன்றைக் காண்பிப்பதற்குத்தான்! ■

*ரைம்ஸ் ஒப் ஃஇந்தியா*

***(49ஆம் பக்கத் தொடர்ச்சி...)***

பதிலாக, கச்சதீவு சர்ச்சைக்குரிய பகுதி. பாக் நீரிணைப்பு பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் எல்லையை வகுக்கும்போது, கச்சதீவு இலங்கையின் பக்கம் வருகிறது. ஆகவே, இந்தியாவின் எந்தப் பகுதியையும் இலங்கைக்கு கொடுக்கவில்லை. அதனால், அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டியதில்லை என முடிவெடுக்கப்பட்டது.

தற்போது ஜெயலலிதா தொடர்ந்திருக்கும் இந்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம், இந்திய மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பினால், மத்திய அரசின் பதில் இதுவாகத்தான் இருக்கும். அதாவது கச்சதீவு என்பது இலங்கைக்கு உட்பட்ட பகுதியே என்பதாகவே இருக்கும் என்கிறார்கள் சட்ட வல்லுநர்கள்.

ஜெயலலிதா தனது மனுவில் குறிப்பிட்டிருக்கும் மற்றொரு விடயம், 'பேருபாரி' விவகாரம்.

இந்த பேருபாரி மேற்கு வங்கத்தில் இருக்கிறது. இந்தப் பகுதியில், முஸ்லிம்கள் அதிகம் வசித்ததால், அதனை தங்கள் நாட்டுடன் இணைக்க வேண்டுமென பாகிஸ்தான் கோரி வந்தது. இந்திய - பாகிஸ்தான் உறவில் இந்த விவகாரம் பெரும் நெருடலாக நீடித்தது. இதனை ஒரு கட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தானுடன் இணைக்க முடிவெடுத்தார் பிரதமர் ஜவஹர்லால் நேரு. அப்போதைய மேற்கு வங்க முதல்வர் பி.சி. ராய் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கில்தான், இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை, அந்நிய நாட்டிற்கு கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், அதற்குப் பிறகு இந்த விவகாரத்தில் வேறு சில முன்னேற்றங்கள் நடந்தன. பாகிஸ்தானிலிருந்து வங்க தேசம் பிரிந்த பிறகு, 1974 மே 16ஆம் திகதி எல்லைப் பிரிவினை குறித்து ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. சர்ச்சைக்குரிய பகுதிகளில் இந்தியாவுக்கு 49.17 ச.கி.மீ பரப்பளவும் வங்க தேசத்திற்கு 100.44 ச.கி.பரப்பளவும் கிடைத்தன. பேருபாரி இந்தியாவுடன் இருந்தாலும், அதன் முக்கிய பகுதிகளான தஹக்ராம், அங்கர்பொடா பகுதிகள் வங்கதேசத்திற்கு அளிக்கப்பட்டன. தஹக்ராமை வங்க தேசத்துடன் இணைப்பதற்காக தீன்பிகா என்ற இடத்தில் ஒரு சிறிய நிலப்பரப்பையும் இந்தியா நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கியது. அதனால், 'பேருபாரி' விவகாரத்தை வைத்து கச்சதீவு விவகாரத்தை முடிவுசெய்ய முடியாது. அது வேறு, இது வேறு.

இருநாடுகளுக்கும் இடையேயான இந்தக் கடல் எல்லைப் பிரச்சினைக்கு எப்படிப்பட்ட முடிவு கிடைக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ■

# முதுமையையும் மரணத்தையும் தள்ளிப்போடும் அறிவியல் முயற்சிகள்



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

தொடரும் ஆய்வுகளால் சாகாவரம் கிட்டாவிடினும் சாகும்வரை உறுதியான உடலும் தெளிவான மனநிலையும் கிடைக்குமென்றால் அதைவிட பேறு என்ன வேண்டும் எமக்கு?

"காலம் கெட்டுப் போச்சு. ஐம்பது வயதிலேயே சீனி வருத்தத்தோடை யும் பிரசரோடையும் இண்டைக்கோ நாளைக்கோ என்று அல்லாடுறன். எங்கடை பாட்டா தொண்ணூறு வயசிலையும் மண்வெட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு பொழுது விடிய முன்னரே தோட்டத்திற்குப் போயிடுவார்'' என்றார் ஒரு பெண்மணி.

அவர் சொல்வது உண்மையா? உண்மையில் இன்று நோயாலும் பணிகளாலும் மனிதர்கள் விரைவாக இறந்து போகின்றார்களா? இல்லை, அது தவறான கருத்து என்றே கருதுகிறேன்.

மனிதனுடைய சராசரி வயது



முன்பு எவ்வாறிருந்தது? இன்று என்னவாக இருக்கிறது?




### மனிதர்களது ஆயுற்காலம்

மனிதர்களது சராசரி ஆயுட்காலம் முன்னைய காலங்களில் மிகக் குறைவாகவே இருந்தது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் மனிதர்களுக்கு 50 வயதைத் தாண்டுவது பெரும் சவாலாக இருந்தது. 1960 இலும் 60 வயதை எட்ட முடியவில்லை. இப்பொழுது அது 75 ஐத் தாண்டிவிட்டது. இருந்தபோதும் இன்னும் அதிக காலம் வாழவேண்டும் என்ற ஆசைக்கோ குறைவில்லை.

அப்படியாயின் மனிதனது ஆயுட்காலம் கால ஓட்டத்தில் அதிகரித்துக் கொண்டே வருகிறது எனலாமா?

ஆனால் இதிகாச பாத்திரமான திருதராஸ்டினன் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தான். கிருஷ்ணன் மரணமடையவே இல்லையாம். முது கிழமாகி காற்றிலோ கடலிலோ தானாகவே கலந்து மறைந்ததாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கும் நீண்ட வாழ்வு கிடைத்திருந்தது.

ஆனால் எமது அறிவுக்கு எட்டிய முன்னைய காலங்களில் சராசரி ஆயுள் பொதுவாகக் குறைவாக



வடகொரியாவின் மறைந்த தலைவர் கிம் யொங்-இல் இளம் கன்னிப்பெண்களின் இரத்தத்தை சிறிய அளவுகளில் ஊசி மூலம் தனக்குத் தானே ஏற்றிக்கொள்வாராம். இதன்மூலம் தனது இளமையை தக்க வைத்துக்கொள்ள முடியும் என்று நம்பிய அவர், ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ௭௦ வயதில் இறந்து போனார்

இருந்ததற்குக் காரணம் முதுமையில் ஏற்படும் சாதாரண இயற்கை மரணங்கள் அல்ல.

### மரணங்கள் எதனால் எவ்வாறு?

அப்பொழுது தொற்று நோய்கள் அதிகமாக இருந்தன. கொலரா, பிளேக், மலேரியா போன்றவை கொள்ளை நோய்களாகப் பரவி ஆயிரமாயிரம் மக்களை வயது வேறுபாடின்றி கொண்டு போயின. சாதாரண காய்ச்சல், வயிற்றோட்டம் போன்றவற்றைக் குணமாக்க அன்ரிபயோடிக் மருந்துகள் இருக்கவில்லை. அதனாலும் வகைதொகையின்றி மரணமாயினர்.

''என்னைப் பெத்துப் போட்ட கையோடு அம்மா செத்துப் போனா'' என அக்காலத்தில் சொல்பவர்கள் ஏராளம். ஆம், அன்று மகப்பேறானது பெண்களுக்கு மீள் பிறப்புப் போன்றிருந்தது. பலருக்கு மகப்பேற்றில் மீள்பிறப்புப் பாக்கியம் கிட்டுவதே இல்லை.

இன்று கூட பஞ்சமும் எயிட்ஸும் தாண்டவமாடும் சில ஆபிரிக்க நாடுகளில் இளவயது மரணங்கள் சர்வ சாதாரணம். இதனால் அவர்களது சராசரி ஆயுள் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருக்கிறது.

இதனால்தான் முன்னைய காலங்களில் சிலர் மிக நீண்டகாலம் வாழ்ந்த போதும் பலர் இள வயதுகளில் நோய்களால் இறந்துபோவதால் சராசரி வயது குறைந்திருந்தது. இன்று தொற்று நோய்களுக்கும் புற்றுநோய்களுக்கும் கூட நல்ல மருத்துவம் கிடைக்கிறது. இதனால் மனிதனால் நீண்டகாலம் வாழ முடிகிறது.

இன்றைய மரணங்கள் பெருமளவு முதுமையுடன் தொடர்புடையனவாக இருக்கின்றன.

''முதுமையில் வரக்கூடிய மாரடைப்பு, பக்கவாதம், புற்றுநோய் போன்றவற்றால் மரணங்கள் வருகின்றன.

''அவ்வாறன்றி வயதாகி செயலாட்டம் குறைந்து நடமாட்டம் கட்டுப்பட்டு, உணவு குறைந்து, உடலி யக்கம் தளர்ந்து பாயோடு பாயாகக் கிடந்து மரணிப்பவர்கள் பலர்.

அவ்வாறாயின் இன்றைய நிலையில் மனிதனின் ஆயுளைக் கூட்ட வேண்டுமாயின் அவன் முதுமை அடைவதைத் தடுக்க வேண்டும்.

வயதால் முதுமை அடைவதை அல்ல. உடல் நிலையால் முதுமை அடைவதைத் தள்ளிப் போட வேண்டும்.

### இது சாத்தியமா? முதுமையைத் தள்ளிப்போடல்

மனிதர்களில் இன்னமும் செய்து காட்டவில்லை. ஆனால் சுண்டெலிகளின் ஆயுட்காலத்தை இருபது சதவிகிதத்தால் அதாவது, 1/5 பங்கினால் விஞ்ஞானிகள் அதிகரித்துக் காட்டியுள்ளார்கள்.

அந்த வயது அதிகரிப்பானது முதுமையின் இயலாமைகளுடன் கூடியது அல்ல. வயது அதிகரித்த போதும் அந்தச் சுண்டெலிகளின் தசைகள் பலவீனம் அடையவில்லை. எலும்புகள் நொய்ந்து போகவில்லை. மாறாக முதுமையின் அறிகுறியான மறதி ஏற்படுவதைக் குறைக்க முடிந்தது. புதியவற்றைக் கற்கும் ஆற்றல் அதிகரித்தது.

இது இரணியன் தவமிருந்து பெற்ற சாகா வரம் அல்ல என்பது உண்மைதான்.

இருந்தபோதும் இந்த ஆய்வு முக்கியமானது. ஏனெனில், 'முதுமை என்பது தவிர்க்க முடியாததல்ல. அது உடல் உறுப்புகளினதும், திசுக்களினதும் இயல்பான செயற்திறன் குறைந்து செல்லும் நலிபாடு அல்ல. அதைக் கட்டுப்படுத்தவும், மேவவும் தள்ளிப்போடவும் மனிதனால் முடியும்' என்ற நம்பிக்கையைத் தந்திருக்கிறது. மரணத்தை மட்டுமன்றி முதுமையடைவதையும் புதிய ஆய்வு முயற்சிகளால் தள்ளிப்போட முடிந்திருக்கிறது.

இது வெறுமனே ஆயுட்காலத்தை

அதிகரிப்பதல்ல. புதிய சாளரங்கள் இதன் ஊடாகத் திறக்கும் என்பது நிச்சயம். முதுமையுடன் தொடர்புடைய நோய்களான நீரிழிவு, மாரடைப்பு, அல்சைமர் நோய் போன்றவை ஏற்படுவதைத் தள்ளிப்போடும் வழிவகைகள் கண்டறியப்படும். துல்லியமாக விடயங்கள் தெளிவாகும்போது அத்தகைய நோய்கள் வராமல் தடுப்பதற்கான மருந்துகளைத் தயாரிப்பது சாத்தியமாகும்.

### ஆய்வு என்ன கூறியது

மூளையின் உட்புறத்தில் சிறிய கொட்டை போன்ற ஒரு பகுதியுள்ளது. ஹைபோதலமஸ் என்பார்கள். அதைத் தூண்டுவதால் அல்லது செயற்பாட்டைக் குறைப்பதால் ஆயுளை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

Dongsheng Cai என்ற இந்த ஆய்வாளர் நியூயோர்க்கில் உள்ள அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றுகிறார். சுண்டெலிகள் முதுமை அடையும்போது ஹைபோதலமஸ் இல் NF-kB என்ற இரசாயனத்தின் செயற்பாடு அதிகரிப்பதை அவதானித்தார்கள். அந்த இரசாயனத்தின் செயற்பாட்டை ஆய்வாளர்கள் முடக்கியபோது சுண்டெலிகளால் 1100 நாட்கள் உயிர் வாழ முடிந்ததாம். அத்துடன் அவற்றின் எலும்பு, சருமம், தசைகள், மூளையின் செயற்பாடு ஆகியன மேம்பட்டிருந்தன.

வழமையாக சுண்டெலிகள் 600 முதல் 1000 நாட்கள் மட்டுமே வாழும் என்பது குறிப்பிடத்தக்கது. NF-kB என்ற இரசாயனத்தின் செயற்பாட்டை முடக்குவதற்குப் பதிலாக அதிகரித்தபோது ஆய்விற்குட்பட்ட சுண்டெலிகள் அனைத்தும் 900 நாட்களுக்கு முன்னரே மரணமடைந்தன.

ஆம் விஞ்ஞானத்தால் இயற்கையை மீறி எம்மை வாழ வைக்கவும் செய்யும். கிழடு தட்ட வைக்கவும் முடியும்.

இந்த NF-kB என்ற இரசாயனம் குறைவதானது Gn-RH என்ற ஹோர்மோனின் அளவை குருதியில் அதிகரிக்கச் செய்தது. இந்த ஹோர்மோனானது இனப்பெருக்கத்தோடு தொடர்புடையது. சுண்டெலிகளில் முட்டை, விந்து போன்றவை வளர்வதை ஊக்குவிப்பனவாக இருந்தன. அத்துடன் மூளையின் நரம்பு அணுக்களின் விருத்தியையும் ஊக்குவித்தது.

### மற்றொரு ஆய்வு

முதுமையைத் தள்ளிப்போடும் வேறு முறையிலான ஆய்வுகள் பற்றியும் அறிய முடிகிறது.

இது ஒரு சுவாரஸ்யமான ஆய்வு. இள இரத்தத்துடன் முது இரத்தத்தைக் கலந்து ஓடச் செய்வதன் மூலம் முதுமையைத் தடுக்கலாம் என்கிறது. இளங் குருதியை முதுமையான எலியின் குருதியுடன் கலக்கும் இந்த ஆராய்ச்சி முறை heterochronic parabiosis என்பார்கள். 150 வருடங்களுக்கு முன்னரே முயலப்பட்டு கைவிடப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய அறிவியல் தரவுகளுடன் புத்துயிர்ப்புப் பெறுகிறது.

இதுவும் மனிதர்களில் செய்யப்பட்ட ஆய்வு அல்ல. சுண்டெலிகளில் தான். ஆனால் இதுவும் மனிதர்களுக்கும் பொருந்தும் எனலாம். Stanford University School of Medicine தலைமையில் செய்யப்பட்டது.

ஒரு இளம் சுண்டெலியின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியை மற்றொரு முதிய சுண்டெலியின் குருதிச் சுற்றோட்டத்துடன் இணைத்ததன் மூலம் அவற்றின் இரத்தத்தை ஒன்றுடன் ஒன்றாக முழுமையாகக் கலக்கச் செய்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் முதிய சுண்டெலியை ஆராய்ந்து பார்த்தார்கள்.

ஆச்சரியம் காத்திருந்தது. அந்த முதிய சுண்டெலிகளின் மூளைக்குள் ஸ்டெம் செல்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. அத்துடன், மூளையின் கலங்களுக்கு இடையேயான தொடர்பாற்றல் 20 சதவிகிதத்தினால் அதிகரித்திருந்தது.

மூளையின் கலங்களுக்கிடையேயான தொடர்பாற்றலின் முக்கியத்துவம் என்ன? நாம் முதுமையடையும் போது இவை நலிவடைகின்றன. இந்த நலிவடைவே முதுமையில் ஏற்படும் மறதிப் பிரச்சினைக்கும் புதியனவற்றைக் கற்றறியும் ஆற்றல் குன்றுவதற்கும் காரணம் எனக் கருதப்படுகிறது. ஆனால், இந்த ஆய்வின் போது முது இரத்தத்தில் இள இரத்தத்தைக் கலந்தபோது இவை மேம்பட்டன. மறுதலையாக முது இரத்தத்தைப் பெற்ற இளம் சுண்டெலிகளின் மூளையில் ஆற்றல் குறைந்திருந்தது. உண்மையில் இது சென்ற வருடம் செய்யப்பட்ட ஆய்வு.

இந்த வருடம் மீண்டும் ஒரு ஆய்வை Villeda தலைமையிலான அதே குழுவினர் செய்தனர். இப்பொழுது முழு இரத்தத்திற்குப் பதிலாக குருதிக் கலங்களை அகற்றிவிட்டு அதன் திரவப் பகுதியான பிளஸ்மாவை (P-lasma)மட்டும் ஏற்றினார்கள். இரண்டு மாதங்களேயான இளம் சுண்டெலிகளின் பிளாஸ்மாவை, 18 மாதங்கள் வயதான முது சுண்டெலிகளுக்கு ஏற்றினார்கள். ஒரே தடவையில் ஏற்றவில்லை. சிறிய அளவுகளில் ஒரு மாத காலப்பகுதிக்குள் 8 தடவைகள் ஏற்றினார்கள்.

பின்னர் அவற்றின் நினைவாற்றலை நீர்ச் சிக்கலறை (water maze) யில் பரிசோதனை செய்தபோது 18 மாதங்களான அவற்றின் நினைவாற்றலானது 4 முதல் 6 மாதங்கள் வயதுள்ள சுண்டெலிகளின் நிலையை அடைந்திருந்தன. இதிலிருந்து தெரிவதென்ன?

''குருதியின் பிளஸ்மாவிலுள்ள ஆயிரக்கணக்கான இரசாயனக் காரணிகளில் ஏதோ ஒன்று அவற்றின் மங்கும் நினைவாற்றலை மீள கிடைக்கச் செய்கின்றன'' என்கிறார் விலேடா. கலங்கள் அகற்றப்பட்ட பிளஸ்மா என்பதால் ஸ்டெம் செல்ஸ் அதிலிருக்க முடியாது. எனவே நினைவாற்றல் அதிகரிப்பிற்கு அவை காரணமல்ல. இரசாயனக் காரணிகளே காரணம் என்பது அவரது கூற்றில் தொக்கி நிற்கிறது. ஆனால், அது என்ன என்பது இற்றைவரை கண்டறியப்படவில்லை. ஆனால், கண்டறிவதற்கான ஆய்வுகளில் விஞ்ஞானிகள் இறங்கியிருப்பார்கள் என்பது நிச்சயம்.

### வடகொரியா அதிபரின் சுயமுயற்சி

இந்த ஆய்வு பற்றி எதுவும் தெரியாத வடகொரியாவின் மறைந்த தலைவரான Kim Jong-il ஒரு ஆச்சரியமான விடயத்தைச் செய்தார் என்று சொல்லப்படுகிறது. இளம் கன்னிப் பெண்களின் இரத்தத்தை சிறிய அளவுகளில் ஊசி மூலம் தனக்குத் தானே ஏற்றிக் கொள்வாராம். இதன் மூலம் தனது இளமையைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என நம்பினாராம்.

2011 டிசம்பரில் அவர் இறந்தார். இறக்கும்போது அவரது வயது 69 மட்டுமே என்பதையும் கவனத்தில் எடுங்கள். எவ்வளவு பணமும் அதிகாரமும் கையில் இருந்தபோதும் மனிதனின் முயற்சிகளை இயற்கை எவ்வாறு முறியடிக்கிறது என்பதற்கு உதாரணமாகக் கொள்ளலாமா?

### இருதயத்தின் தசைகளையும் இளமையாக்கல்

இருதயத்தின் தசைகள் வயசாகும் போது தடிப்படைகின்றன. அவ்வாறு தடிப்படைந்த நிலையிலும் அவற்றால் குருதியை இயல்பாக பம்பண்ண முடிகிறது. அதாவது, அவை சுருங்கி விரிந்து குருதியை உந்தித் தள்ள முடிகிறது. ஆனால், இரு சுருக்கங்களுக்கு இடைப்பட்ட வேளையில் அவற்றால் வழமைபோல முழுமையாகத் தளர முடிவதில்லை. இதை மருத்துவத்தில் diastolic heart failure or diastolic dysfunction என்பர். தடித்த இருதயத் தசைகளை மீட்டெடுத்து அதன் செயற்பாட்டை வழமையாக்க நல்ல சிகிச்சை கிடையாது.

ஸ்டெம் செல் உயிரியலாளரான Amy Wagers மற்றும் இருதய நிபுணரான Richard Lee ஆகிய இருவரும் 24 மாத வயதான சுண்டெலிகளின் குருதியை இரண்டு மாத வயதான சுண்டெலிகளினதுடன் கலந்து சுற்றோட்டம் செய்ய வைத்தார்கள். இவ்வாறு 12 சோடி எலிகளுக்கு இரத்தத்தை 4 மாத காலத்திற்குக் கலக்கச் செய்தார்கள். 4 மாத முடிவில் 5 வயதான எலிகளின் இருதயத் தசை நார்களாவன 2 மாத வயதுள்ள எலிகளது இருதயத் தசைகள் போல தடிப்புக் குறைந்து மெல்லியதானதுடன், மெதுமையாகவும் மாறியிருந்தனவாம்.

இந்த ஆரம்ப கட்ட ஆய்வுகள் நம்பிக்கை அளிப்பதாக இருக்கின்றன. ஆனால், இது எதனால் நடந்தது, எந்த இரசாயனக் காரணி உதவியது. சுண்டெலியில் நடந்தது மனிதனுக்கும் பொருந்துமா என நீங்கள் கேள்வி எழுப்பினால் விடைகள் எதுவும் அவர்களிடமும் கிடையாது.

'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்பார்கள். இந்த ஆரம்பக் கண்டுபிடிப்புகள் அறிவாற்றல் மிக்க ஏனைய விஞ்ஞானிகளையும் கவரும். புதிய ஆய்வுகள் தொடரும். அவற்றின் பலனாக புதிய மருந்துகளும் சிகிச்சை முறைகளும் உருவாகும் என நம்பலாம்.

தொடரும் ஆய்வுகளால் சாகாவரம் கிட்டாவிடினும் சாகும் வரை உறுதியான உடலும் தெளிவான மன நிலையும் கிடைக்கும் எனில் அதை விடப் பேறு என்ன வேண்டும் எமக்கு. 'பாவம் அப்பா தொண்ணூறு வயதிலேயே தலையைப் போட்டு விட்டார்'

இவ்வாறு தனது நண்பனுக்குச் சொல்லிக் கொண்டே நடைப் பயிற்சியைத் தொடரும் 110 வயது இளைஞர்களைத் தெருவில் சந்திப்பது விரைவில் சாத்தியமாகலாம். ■

---

(19ஆம் பக்கத்தொடர்ச்சி...)

கொண்டிருக்கிறோம். சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, தகவல் செறிவுடைய ஊடகமொன்றைப் பற்றி நாம் பேச வேண்டுமானால், இந்தச் சிங்கள ஆட்சியின் பிடிக்குள் இருந்து ஊடகங்களை விடுவிக்க வேண்டியது முக்கியமானதாகும். இந்த ஆட்சியிடமிருந்து நிதிரீதியாக சுயாதீனமாக இயங்கக் கூடிய ஊடகமொன்றுக்குத் தான் ஒழுக்கக் கோவை நடைமுறையில் பொருத்தமானதாக இருக்கமுடியும். தனியார்துறை என்று பெயருக்கு சொல்லப்படுகிற போதிலும் பிரசுர கர்த்தாக்களும் உரிமையாளர்களும் ஆட்சியின் அங்கமாக இருக்கின்ற நிலையில், ஊடகங்களில் ஆசிரிய பீட சுதந்திரத்தைப்பற்றிப் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை.




இன்று உண்மையில், எவருக்காவது ஊடகங்களுக்கான நல்லதொரு ஒழுக்கக் கோவை தேவையென்றால், சுதந்திர ஊடக இயக்கத்துடன் சேர்ந்து இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் வரைந்த ஒழுக்கக் கோவையில் சகல மேம்பாடுகளையும் செய்வதே பொருத்தமானதாக இருக்கும். அரசாங்க ஊடக அமைச்சினால் வரையப்பட்டிருக்கும் ஊடகங்களுக்கான ஒழுக்கக்கோவைக்கும் ஊடகசுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை. இன்று ஊடக நெறிமுறை என்பது ஊடகங்களின் உடைமையை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து சுயாதீனமாக எவ்வாறு வைத்திருக்க முடியும் என்பதைப் பற்றிய பெரிய விவாதத்தின் ஒரு அங்கமாகும்! ■

சமூகவியல்





மானெல் அபேரத்ன

# வானளாவ உயரும் செலவினங்கள் மத்தியில் மூத்த பிரஜைகளால் கண்ணியமாக வாழ முடிகிறதா?

கடந்த சில வருடங்களில், விசேடமாக நாட்டின் சமூக-பொருளாதார நிலைமை துரிதமாகச் சீர்கேடைடைந்து வரும் நிலையில், ஓய்வூதியம் பெறுபவர்களினதும், முதியோர்களினதும் சூழ்நிலை வியப்பூட்டும் வகையில் மாற்றமடைந்துள்ளது. இலங்கைக்கான அதன் எதிர்கால நோக்கினைக் கொண்டுள்ளதாகக்கூறும், தற்போதைய அரசாங்கத்தின் 2006-2016 பத்து ஆண்டு அபிவிருத்தி வரைச்சட்டத்தை, தேசிய திட்டமிடல் அமைச்சு வெளியிட்ட போது, அது சிரேஷ்ட பிரஜைகளுக்கான அதன் நோக்கங்களைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தது. 'சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பில், அவர்களுக்கு சிறந்த வாழ்க்கைச் சூழ்நிலையையும், வாழ்க்கைத் தரத்தையும் உறுதிப்படுத்துவதே' அரசாங்கக் கொள்கையின் நோக்கமாகும். பாதுகாப்புக்கும், சேவைகளை அடைவதற்கும் அத்துடன் ஏனைய மக்கள் அல்லது அரசாங்கம் மீது முற்றுமுழுதாகத் தங்கியிருக்காமல் கௌரவமிக்கதும், சுறுசுறுப்பான தும், முழு நிறைவானதுமான வாழ்க்கையை மேற்கொள்வதற்குமான உரிமைகள் உரியவாறு அங்கீகரிக்கப்பட்டு, மேம்படுத்தப்படும். எமது சமூ கத்தில் சிரேஷ்ட பிரஜைகள் ஆற்றிய வரலாற்றுரீதியிலானதும், பாரம்பரியமானதுமான வகிபங்குகள் சிரேஷ்ட பிரஜைகள் பற்றி கவனமெடுப்பதும், அத்துடன் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குவதுமான சமூக மொன்றைத் தாபிப்பதில் எமக்கு ஆற்றல்வாய்ந்த உதாரணங்களை வழங்கும். சுதந்திரம், பராமரிப்பு, சுய-மனநிறைவு

மற்றும் கௌரவம் ஆகியவற்றை சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைகளினதும், சேமநலனினதும் பாதுகாப்புக்கும், முன்னேற்றத்திற்குமான முன்னுரிமையிலான மூலோபாயங்கள் வலியுறுத்துகின்றன.' எனினும், யதார்த்தநிலையில் சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைகளின் உயர்ந்த லட்சியங்களைப் பின்பற்றும் தொலைநோக்கு இன்னுமே வரையறுக்கப்படாத அதேவேளை, இன்னொரு அடையப்படாத மனோராஜ்யமாக பெருமளவு நோக்கங்கள் அமைந்துள்ளன.

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு குடித்தொகையியல் யதார்த்தநிலை பின்வருமாறு அமையும்: ''தற்போது 60 வயதையும், அதற்கு மேற்பட்ட வயதையும் கொண்ட சனத்தொகையின் பங்கு 11%இலிருந்து 2020இல் 16%வீதமாக அதிகரிக்கும். பின்னைய அதிகரிப்புகள் தாரம் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதையுமே கருத்தாகக் கொண்டுள்ளது. உண்மையான நாணயம் சார்ந்த பெறுமதியில் அத்தகைய அதிகரிப்புகள் சுமார் 5%இலிருந்து 7% வரை உயர்வாக இருக்கக்கூடும். அறிக்கையின் பிரகாரம் கட்டுப்படுத்த முடியாது என தற்போது விவரிக்கப்படும் பணவீக்கத்தை இது அதிகரிக்கும். அடுத்த தசாப்தத்தில் கொள்கை மற்றும் பொருளாதார போக்குகளுக்குப் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தி விகிதாசாரத்தில் மாற்றத்தைக் கொண்டிருக்கும். அரசாங்கக் கொள்கையில் மாற்றத்திற்கான அத்தகைய தாற்பரியங்களை குறிப்பாக வேலை செய்யும் வயதையும், சிரேஷ்ட பிரஜை வகுதியையும் உடனடியாக அங்கீகரிப்பதை தற்போது மிகைப்பட வலியுறுத்த முடியாது.'

இலங்கை கமத்தொழில் நாடொன்றாகக் கருதப்படுவதனால், அத்



2050இல் 29% வீதமாகவும், 2080இல் 34% வீதமாகவும் முன்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது சார்ந்திருக்கும் விகிதங்கள் அதிகரிக்கும் என்பதையும், வயதின் காரணமாக ஆட்குறைப்புச் செய்யப்படும் பெரிதுமே உற்பத்தித்திறனிலான வயதுக் குழுவொன்றைப் பராமரிப்பதற்கான உக்கிரமான சுமையைப் பொருளா

தகையதொரு மங்கலான எதிர்கால வாய்ப்புவளமொன்றை வழங்குகையில், கமத்தொழில் துறையில் உள்ள வேலையாட்களின் சதவீதம் பெரிதுமே உயர்வானதாகும். அடுத்தடுத்து பதவிவகித்த அரசாங்கங்கள் கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்றையும், மீனவர் ஓய்வூதியத் திட்டமொன்றையும் மேம்படுத்தின. (முதியோர்களுக்கான நன்மைகளுக்கு பாதுகாப்பளிக்கப்படாதவர்களாக பாரிய எண்ணிக்கையில் மீனவர்கள் இருந்துவருகின்றனர்). ஆனால், இவ்விரு திட்டங்களும் பங்களிப்பிலான ஓய்வூதியத் திட்டங்கள் என்பதனால், கமக்காரர்களினதும், மீனவர்களினதும் பிரதிபலிப்பு மிகவும் மோசமாகவே இருக்கின்றது. மேலும், அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்டங்களுக்கு ஒத்த முறையொன்றுக்கு கமக்காரர் அல்லது மீனவர் பங்களிக்க வேண்டும் என திட்டம் கோருவதனால், தமது பங்களிப்புகளை வைப்பிலிடுவதற்கு ஒரு சிலர் மட்டுமே முன்வருவார்கள்.

இச்சூழ்நிலையில் முதியோரைப் பராமரிப்பதற்கான சுமை குடும்பம் மீதே சுமத்தப்படுகின்றது. முன்னைய கூட்டுக்குடும்ப முறைமை நிலவிய காலகட்டத்தில், முதியோர்களைப் பராமரிப்பது அதிவிசேடமான விடயமல்ல. தந்தை, தாய் மற்றும் தாத்தா, பாட்டி ஆகியோர் பாரிய குடும்பக் குழுக்களினுள் ஒன்றிணைந்ததுடன், கூட்டுக் குடும்பங்களின் நிதிகளையும், பிள்ளைகளைப் பராமரிப்பதையும் நோக்கித் தம்மிடமுள்ள ஏதாயினும் வளங்களை அவர்கள் வழங்கினார்கள். அநேகமாக முதி

**வடக்கில் உள்ள எந்தவித ஆதரவுமற்ற பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி தங்களில் தங்கி வாழும் முதியவர்களுக்கும் ஆதரவளிக்க வேண்டியிருக்கிறது.**

**குறைந்து செல்கின்ற இளைஞர் சந்ததி ஒன்றின் மீது தொடர்ந்தும் முதியோர்கள் தங்கியிருக்காத விதத்தில் திட்டமொன்றை சமூக சேவைகள் அமைச்சு வகுப்பது இன்றியமையாதது**

யோர்களுக்குச் சொந்தமான காணி அவர்களில் தங்கியிருந்தவர்கள் மத்தியில் பிரித்துக்கொடுக்கப்பட்டன. இது காணியை அதிகளவு கூறுகளாக்குவதை விளைவித்தது. ஆனால், முதி யோர்களைப் பராமரிப்பதற்கான உடனடியான அவசியமொன்று இருக்கவில்லை.

எனினும், பொருளாதாரத்தின் தாராளமயப்படுத்தலுடன் இரு புதிய சூழ்நிலைகள் இடம்பெற்றன. கிராமிய இளைஞர்கள் நகரத்திற்கும், அதையொட்டிய பகுதிகளுக்கும் புலம்பெயர ஆரம்பித்ததினால் கூட்டுக்குடும்ப முறைமை படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. கூட்டுக் குடும்பத்திற்கு மேலாக, தனிக்குடித்தன முறை முன்னுரிமையடைந்ததுடன், நெருக்கடிமிக்க மாடிவீடுகளில் வாழ்ந்த விளிம்புநிலையிலான ஊழியரும், நடுத்தர வகுப்பு தனிக்குடித்தனக் குடும்பத்தினரும், தமது முதியோர்களுக்கு இடவசதியை அளிப்பதற்குக் கஷ்டப்பட்டனர். தொழிலுக்காக மத்திய கிழக்குக்கு கிராமியப் பெண்கள் புலம்பெயர்ந்தமை மற்றுமொரு காரணியாகும். இதனால், கிராமமொன்றில் முதியோர்களுக்குப் பாரம்பரியமான பராமரிப்பாளர் கிட்டவில்லை. மேலும், எழுபதுகளில் இலங்கை ஒரு சேமநலன் சார்ந்த நாடாக இருந்து, திறந்த பொருளாதாரம் செயற்பாட்டுக்கு வந்த பின்னர் படிப்படியாக மாற்றங்கள் ஏற்பட்டன. தமது அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களே வாங்க வேண்டும் என்பதும், இது கமத்தொழில் மற்றும் மீன்பிடித் துறைகளில் உள்ள சிரேஷ்ட பிரஜைகள் மீது மிகவும் மோசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது என்பதுமே இதன் அர்த்தமாகும். மேலதிகமாக, வடக்கில் ஒரு புதிய வியப்புக்குரிய விடயத்தைக் காண முடியும். இங்கு எதுவித ஆதரவுமற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு மட்டுமன்றி தம்மில் தங்கி வாழும் முதியவர்களுக்கும் தங்கியிருப்பவர்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும்.

இதனிடையே, அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் உள்ள நிலையான வருமானத்தைப் பெறும் பிரஜைகள் அநேகமாக தமது பிள்ளைகளின் மேலதிகமான படிப்புக்கு அல்லது தமது பிள்ளைகளின் திருமணத்திற்கு தமது ஒன்றுதிரட்டிய வருமானத்தையே பயன்படுத்த வேண்டியிருந்தது. இது அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினங்களை ஈடு செய்வதற்கு ஓய்வூதியங்களை அல்லது மாதாந்த வருமானமொன்றைக் கொண்டிருப்பதற்கு பணவசதியைக் கொண்டிருக்காத முதியோர்களின் ஊறுபடும் பகுதியினுள் இத்துறையையும் இட்டுச் சென்றுள்ளதுடன், அவர்களும் தங்கியிருப்பவர்கள் என்ற நிலைக்கும் தள்ளியுள்ளது. உண்மையில் தற்போது 2006இக்கு முன் இளைப்பாறிய அரசாங்க ஓய்வூதியம் பெறுபவர்கள் சேவையில் இருந்து, பின்னர் இளைப்பாறியவர்களின் சம்பளங்களை அதிகரித்ததினால் உருவாக்கப்பட்டுள்ள தமது ஓய்வூதிய முரண்பாடு தீர்க்கப்பட வேண்டும் என தொடர்ந்துமே நிர்ப்பந்திக்கின்றார்கள். இது இந்த அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு வாக்குறுதியாகும்.

இவ்வாறான சூழ்நிலையில், குறைந்து செல்கின்ற இளம் சந்ததியொன்றின் மீது தொடர்ந்துமே முதியோர்கள் தங்கி இருக்காதவிதத்தில், திட்டமொன்றைச் சமூக சேவை அமைச்சு வகுத்தமைப்பது இன்றியமையாததாகும். தமது வயதான காலத்தில் அநேகமாக 70 சதவீதமான உழைப்பாளர்கள் தமது முதுமையில் முற்றுமுழுதான தங்கிவாழ்பவர்களாக மாற வேண்டியுள்ளது என்பது வெளிப்படையானதாகும். மூன்று மில்லியனுக்கு மேற்பட்ட முறைசாராத் துறை ஊழியர்களுக்காக ஒரே சீரான தன்னிச்சையிலான பங்களிப்பு சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் சாத்தியக்கூற்றையிட்டு அரசாங்கம் கரிசனைக்கெடுத்துள்ளதாக மத்திய வங்கி மிக அண்மையில் அறிவித்திருந்தது. ஆனால், பங்களிப்பதற்கு முறைசாராத் துறையில் உள்ள பலரினதும் தயக்கத்தை வழங்குகையில், இத்தகையதொரு திட்டத்தை வழங்குவதற்கான ஏற்பாடு அதிகளவு விழிப்புணர்வுடன் நன்கு திட்டமிடப்பட வேண்டும். அப்பொழுதே அதை முறைசாராத் துறை வரவேற்கும். இதனிடையே, இத்தகையதொரு திட்டமொன்றுக்கான ஆரம்பத்திலான கொடுப்பனவுகளை நாட்டின் நிதிவளம் குறைந்த பொருளாதாரத்தினால் செய்ய முடியுமா? என்பது சந்தேகத்திற்குரியது.

இதனிடையே, சிரேஷ்ட பிரஜைகளின் சுகாதாரத் தேவைகளைக் கூட சுகாதார அமைச்சு கரிசனைக்கு எடுக்கவில்லை. முதியோர் வைத்தியப் பராமரிப்பில் விசேட 'வார்ட்' ஒன்றை ஏதாவது வைத்தியசாலை கொண்டிருக்கின்றதா? அல்லது முதியோருக்கு சிகிச்சையளிப்பதில் ஏதாவது விசேட பயிற்சி மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றதா? என்று நான் நினைக்கவில்லை. சுகாதாரக் காப்புறுதியை காப்புறுதி நிறுவனங்கள் வழங்குகின்ற அதேவேளை, நடுத்தர வகுப்பிலான இளைப்பாறிய பிரஜைகளுக்கு அவர்களது கட்டுப்பணம் முழுமையாக அடைய முடியாததாகும். தமது சுகவீனங்களுக்காக அவசியமான சிகிச்சையைப் பெறுவதற்கான வைத்தியசாலைகளில் உள்ள பலதரப்பட்ட சிகிச்சை நிலையங்களிலும், வைத்தியசாலை மருந்தகங்களுக்கு அருகிலும் முதியோர் வரிசைகளில் காத்திருப்பதை நாம் அடிக்கடி காண்கின்றோம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு போதியளவு வசதிகளை வழங்குமாறு அரசாங்கங்களிடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், பலதரப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் அளிக்கின்ற அதேவேளை, அவற்றை அது நிறைவேற்ற முடியாமல் இருப்பதாகத் தோன்றுகின்றது. அநேகமாக சமூக சேவை அமைச்சுடன் இணைந்து சுகாதார அமைச்சு

*(47ஆம் பக்கம் பார்க்க...)*





க.சண்முகலிங்கம்

# சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பாடுகள்

## ஒரு சுருக்க அறிமுகம்

**கோட்பாடுகள் குறித்து நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும் என்றும் நடைமுறையில் அவற்றின் பயன்தான் என்ன என்றும் கேட்கும் நடைமுறைவாதிகள் இருக்கிறார்கள். ஆனால் சாதாரண மக்கள் முதல் அறிஞர்கள் வரை உலக நிகழ்வுகள் பற்றிய தமது பார்வையை ஏதோ ஒரு கோட்பாட்டின் வழியே தான் வகுத்துக்கொள்கிறார்கள்**

2009 ஆம் ஆண்டில் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் யுத்தம் இலங்கையைக் களமாகக் கொண்டு இடம்பெற்ற சர்வதேச முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வு. இது போன்ற நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் உலக நாடுகள் பலவற்றையும் களமாகக் கொண்டு கடந்த 30 ஆண்டுகால எல் லையுள் நிகழ்ந்துள்ளன. இச்சம்பவங் கள் பற்றிய விபரிப்புகளாக அமை யும் எண்ணிறைந்த நூல்களும் கட்டு ரைகளும் எழுதப்பட்டுள்ளன. இந்த விபரிப்புகளில் சர்வதேச உறவுகள் என்ற விடயம் சம்பந்தப்படுகின்றது. சர்வதேச உறவுகள் பற்றிய கோட்பா டுகளும் இங்கே சம்பந்தப்படுகின் றன. கோட்பாடுகள் பற்றி நாம் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும்? நடை முறையில் அவற்றின் பயன் என்ன? என்று கேட்கும் நடைமுறைவாதிகள் உள்ளனர்.

இருப்பினும் சாதாரண மக்கள் முதல் அறிஞர்கள் வரை உலக நிகழ் வுகள் பற்றிய தம் பார்வையை கோட் பாட்டின் வழியே தான் வகுத்துக் கொள்கிறார்கள். முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளையே எடுத்துக் கொள் வோம். அப்போது தமிழ் மக்கள் மன திலே எழுந்த கேள்விகள் எவை என்று பார்ப்போம்.

சர்வதேச சமூகம் சும்மா பார்த்துக் கொண்டிருக்குமா? சர்வதேச சமூகத் திற்கு மனச்சாட்சி என்று ஒன்று இருக் குமானால் இந்த அவலத்தைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காதா? அந் நிய நாடுகளின் செயற்பாடுகள் வெறும் சுயநலநோக்கத்தை அடிப்ப டையாகக் கொண்டவையா? இக் கேள்விகளும் இவைபோன்ற ஏனைய கேள்விகளும் கோட்பாடு கள் சார்ந்தவையே.

முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை ஜேர்மன் மொழிச் சொல்லான 'real politic' கொண்டு விளக்கலாம் என்று சிலர் கூறுவர். 'ரியல் பொலிட்டிக்' என்பதன் பொருள் 'அதிகார அரசி யல்' (Power Politics) என்பதாகும். சர்வதேச உறவுகளில் அதிகார அரசி

யலின் முக்கியத்துவத்தை வற்புறுத்தும் கோட்பாடு இயல்புவாதம் (R-ea-l-ism) எனப்படும். இயல்புவாதம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக செல்வாக்குடன் இருந்து வரும் கோட்பாடாகும். இயல்புவாதத்தின் வாதப்படி சர்வதேச உறவுகளில் முக்கிய இடம் அரசுகள் என்னும் செயலிகளுக்கே (ACTORS) உள்ளது. சர்வதேச அரங்கில் பிற பல செயலிகள் இருக்கலாம். அவை முக்கியமற்றவை; அரசுகள் தாம் முக்கிய செயலிகள். அவற்றின் செயல்களை இயக்குவது அதிகார அரசியல் இக்கோட்பாட்டுக்கு மாறாக, சர்வதேச அரங்கில் பல செயலிகள் உள்ளன. அவை யாவும் முக்கியமானவை; சர்வதேச உறவுகள் பல அதிகாரமையங்களில் தீர்மானமாகின்றன என்று சிலர் கூறுவர். ஐ.நா.சபை, அதன் உறுப்பு நிறுவனங்களான யு.என்.எச்.சி.ஆர். போன்ற நிறுவனங்கள், சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, மனித உரிமை அமைப்புகள், சர்வதேச தொண்டர் நிறுவனங்கள், MNCக்கள் எனப்படும் பல்தேசியக் கம்பனிகள், அல்ஹைதா போன்ற பயங்கரவாத இயக்கங்கள் போன்ற எண்ணிறைந்த செயலிகள் (ACTORS) சர்வதேச அரங்கில் செயற்படுகின்றன என்று கூறும் கோட்பாடு பன்மைவாதம் (PLURALISM) என்று அழைக்கப்படும். இயல்புவாதம் சர்வதேச உறவில் ஒரு காட்டுத் தர்பார் நடப்பதாகவே பார்க்கிறது. இது நம்பிக்கையீனம், விரக்தி போன்ற உணர்வு நிலைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிகழ்வுகளின் தவிர்க்க முடியாமையை நியாயப்படுத்தும் கோட்பாடாக உள்ளது. பன்மைவாதம் நம்பிக்கை நோக்குடையது. அது முன்னேற்றம் சாத்தியம் என்று கருதுவது. காட்டுத்தர்பார் தற்காலிக ஒரு தோற்றமே, சர்வதேச சமூகத்தின் செயல்களால், பல செயலிகளின் தாக்கத்தால் மாற்றம் நிகழும் என்று பன்மைவாதக் கோட்பாட்டாளர் கூறுவர்.

இயல்புவாதம், பன்மைவாதம் என்ற இருவேறு நிலைப்பாடுகளை



விட இன்னோர் கோட்பாடும் சர்வதேச உறவுகளை விளக்க முனைகின்றது. இக்கோட்பாட்டின் படி சர்வதேச அரங்கில் செயலிகள் (ACTORS) செய்யும் செயல்கள் ஒரு கட்டமைப்புக்குள் நடைபெறுகின்றன. செயல்களோடு அவை இடம் பெறும் பின்னணியாகிய கட்டமைப்புகள் (STRUCTURES) முக்கியமானவை. கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் சர்வதேச உறவுகள் கோட்பாடு அமைப்பியல் வாதம் (STRUCTURALISM) எனப்படும். அமைப்பியல்வாதம் உலக முறைமை (world system) ஒன்று இருப்பதாகவும், அந்த முறைமையின் அமைப்பியல் அம்சங்கள் என்ற வரையறைக்குள் தான் செயலிகள் (ACTORS) செயற்படமுடியும் என்றும் கூறும். மார்க்சியம் உலக முதலாளித்துவமுறை என்ற கருத்தை முன்வைக்கிறது. சர்வதேச உறவுகள் பற்றிய மார்க்சியக் கோட்பாடு ஒரு அமைப்பியல் கோட்பாடாகும். நவ இயல்புவாதம் (NEO REALISM) பழைய இயல்புவாதத்தின் புதுக்கிய வடிவமாகும். இக்கோட்பாடும் அமைப்பியல்வாதம் என்ற வகைக்குள் சேர்க்கப்படக்கூடியதே.

முள்ளிவாய்க்கால் போன்ற உலக நிகழ்வுகள் யாவற்றிலும் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி; சர்வதேச சமூகம் சும்மா பார்த்துக்கொண்டிருக்கப் போகிறதா? அதற்கு மனச்சாட்சி என்று ஒன்று இருந்தால் இப்படிச் செய்யுமா? இக்கேள்விக்கு அல்லது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இவ்விரு கேள்விகளுக்கும் மேற்குறித்த மூன்று கோட்பாட்டாளர்களும் கூறும் விடை என்ன?

இயல்புவாதிகளின் பதில் 'மனச்சாட்சி' என்ற விடயம் தனிநபர்களுக்கு ரியது. தனிநபர் நடத்தையை மனச்சாட்சி தீர்மானிக்கலாம். ஆனால் அரசுகள் என்ற செயலிகள் உணர்ச்சிகளால் தூண்டப்பட முடியாதவை. குறித்த சூழலில் சம்பந்தப்பட்ட அரசுகளின் அதிகாரப்போட்டி, அதன் விளைவாக எழும் அதிகாரச் சமநிலை என்பனவே நிகழ்வுகளின் போக்கை நிர்ணயிக்கப் போகின்றன என்ற வகையில் இவர்களின் பதில் அமைகின்றது. பன்மைவாதிகள் அரசு அல்லாத செயலிகளின் (NON STATE ACTORS) வகிபாகத்தை அழுத்தும் முறையில் தம் பதிலைக் கூறுகின்றனர். அமைப்பியல் வாதிகள் உலக முதலாளித்துவ அமைப்பின் தலைமைப்பாத்திரத்தை ஏற்றிருக்கும் அமெரிக்காவின் நலன்கள், பூகோளமயமாக்கல், நவகாலனித்துவம் போன்ற கருத்துகளின் உதவியுடன் தமது பதிலை முன்வைப்பார்.

இச்சிறு கட்டுரையில் சர்வதேச உறவுகள் பற்றிய இம்மூன்று கோட்பாடுகள் பற்றிய விரிவான விளக்கத்தைத் தருதல் இயலாது. ஆதலால் இயல்புவாதம் என்னும் கோட்பாட்டை மட்டும் சுருக்கமாகக் கூறி, ஏனைய இரு கோட்பாட்டாளர்களும் அதற்கு எதிராக முன்வைக்கும் முக்கிய எதிர்வாதங்களையும் எடுத்துக்காட்டுவோம்.

## இயல்புவாதம்

'றியல் பொலிட்டிக்' எனும் இயல்புவாதம் நீண்ட கால வரலாற்றை உடையது. பெலப்பொனேசிய யுத்தத்தின் வரலாறு என்ற நூலை எழுதிய துசிடைட்ஸ், அர்த்த சாஸ்திரம் நூலைப் படைத்த கௌடல்யர், இளவரசன் என்னும் நூலை எழுதிய மக்கியலெசல்லி 'லெவியாதன்' என்ற நூலை எழுதிய தோமஸ் ஹாப்ஸ் ஆகியோர் இயல்புவாதத்தின் அடிப்படையாக சிலவற்றை நிறுவினர். இலங்கையின் உள்நாட்டு அரசியலில் ஜே.ஆர். ஜயவர்தன 'றியல் பொலிட்டிக்' தத்துவத்தை மிகச் செம்மையாகக் கையாண்டார். சர்வதேச உறவுகளுக்கு விஸ்தரிக்கப்படும் 'றியல் பொலிட்டிக்' அல்லது இயல்புவாதம் பின்வரும் அடிப்படை எடுகோள்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது.

- சர்வதேச முறைமையில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது.

- சர்வதேச முறைமையில் இறைமை யுடைய அரசுகள் பிரதான செயலி களாக உள்ளன.
- அரசுகள் ஒவ்வொன்றும் '-தமது தேசிய நலன்கள்' என்ற குறிக் கோளை வைத்துக் கொண்டு ஒரு முனைப்பாகச் செயற்படுகின்றன.
- தேசிய பாதுகாப்பும் தமது இருப்பு என்ற இரண்டுமே தேசிய நலன்க ளின் மிக முக்கிய அம்சங்கள்.
- தேசிய பாதுகாப்புக்காக தேசிய அதிகாரத்தையும் தமது வல்ல மையையும் அரசுகள் அதிகரித்துக் கொள்கின்றன.
- ஒரு நாட்டில் வல்லமையும், அதி காரமும் தான் சர்வதேச அரங்கி லும், அயல் நாடுகளுடனான அதன் உறவிலும் தீர்மான காரணி யாக உள்ளது.
- அரசுகளின் சர்வதேச உறவுகள் கொள்கை 'தேசிய நலன்கள்', 'தேசிய அதிகாரம்' என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த எடுகோள்களில் முதலாவ தான அராஜகம் என்ற கருத்தை அரசி யலில் விளக்கியவர் ஹாப்ஸ் என் னும் அரசியல் அறிஞர். ஹாப்ஸின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின்படி மனிதன் இயற்கை நிலையில் அரா ஜகம் தலைவிரித்தாடியது. பின்னர் மக்கள் செய்து கொண்ட உடன்பாட் டின்படி இறைமையுள்ள ஒருவன் சர்வ அதிகாரத்துடன் ஆட்சி செய் தான். இறைமையுள்ள அரசின் தோற் றம் அராஜகத்தைப் போக்கியது. உள் நாட்டு அரசியலில் யாவருக்கும் மேலாக உள்ள இறைமையுடைய அரசு இருப்பதுபோல் சர்வதேச அர சியலில் தனிநாடுகளிற்கு மேலான இறைமையுடைய உலக அரசு என ஒன்று இல்லை. ஆகவே உலக முறைமை அடிப்படையிலேயே அரா ஜகம் நிறைந்தது. ஹன்ஸ்.ஜே.மோர் கன்தோ (HANS.J.MO-R-G-E-N-T-H-AU) என்பவர் 1948இல் வெளியிட்ட POLITICS AMONG NATIONS THE STRUGGLE FOR POWER AND PEACE என்ற நூல் சர்வதேச உறவுகள் பற் றிய இயல்புவாதக் கோட்பாட்டைச்



சிறப்பாக எடுத்துக்கூறுவது 'தேசங்க ளுக்கிடையிலான அரசியல், அதிகா ரத்திற்கும், சமாதானத்திற்குமான முனைவு' என்னும் இந்த நூலில் இயல்புவாதத்தின் ஆறு தத்துவங் களை மோர்கன்தோ எடுத்துக் கூறி னார். அவற்றை சுருக்கமாக இங்கே குறிப்பிடுவோம்.

புற நிலையான விதிகள் : அரசியல் புறநிலையான விதிகளால் இயக்கப்ப டுவது. மாறாத தன்மையுள்ள, என் றும் நிலைத்திருக்கும் மனித இயல்பு கள் சில உள்ளன. இந்த இயல்புகளில் அரசியலின் புறநிலை விதிகளைக் கண்டு கொள்ளலாம்.

தொடர்ச்சியான மோதல்களும் போர் தோன்றக்கூடிய அச்சமும்: உல கில் போர்களும் அமைதியும் மாறி மாறி வந்து போகின்றன; போர் அல் லது அமைதிதான் நாடுகளிற்கிடையி லான உறவுகளின் இயல்பு என்று கூறுவது தவறு. உண்மையில் முரண் பாடுகளும் மோதல்களும் தொடர்ச்சி யாக ஏற்படுகின்றன. கூடவே போர் பற்றிய அச்சமும் நீடிக்கிறது. இந்த முரண்பாடுகளையும், அச்ச உணர் வையும் தணிப்பது இராஜதந்திர நடவடிக்கையாகும்.

- பாதுகாப்பும், அழிந்து போகாது இருத்தலும்; தேசங்களின் ஆகக் குறைந்த தேசிய நலன் என்ற அடிப் படையை நோக்கினால் அது பாது காப்பும், ஒரு தேசம் என்ற முறையில் அழிந்துபோகாது தப்பி இருத்தலுமேயாகும்.
- அறநெறியும் அரசுகளும் அரசுக ளின் நடத்தையை அறநெறிகள், உலகப்பொதுவான ஒழுக்கக் கோட்பாடுகள் கொண்டு விளக்க முடியாது. தனிநபர் அறநெறிகளை அரசுகள் பின்பற்றி நடக்கும் என்று கருதுவது ஆபத்தானது.
- ஒரு அரசின் அறநெறிகள் வேறு, உலகப் பொதுவான அறநெறிகள் வேறு: அரசு ஒன்றின் நடத்தையில் அறநெறி வெளிப்படலாம். உதார ணமாக மனித உரிமைகளைப் பாது காப்பது தன் நோக்கம் என்று ஒரு அரசு தன் நடத்தைக்கு விளக்கம் கொடுக்கலாம். உண்மையில் அர சின் மனித உரிமை நாட்டம் அதன் அதிகாரம், பாதுகாப்பு ஆகிய தேசிய நலன்களின் வெளிப்பாடு தான். அதனை உலகப் பொது வான அறநெறியுடன் குழப்பக் கூடாது.

## அரசியல் சுயத்துவமானது

ஏனைய துறைகளில் இருந்து தனித்து இயங்குவதாக சர்வதேச அர சியலை இயல்புவாதிகள் நோக்குவர். உள்ளதை உள்ளபடியே பார்த்தல், யதார்த்த நிலையைத் திரிபின்றி விளக்கிக் கொள்ளல் என்ற கொள் கையை இயல்புவாதிகள் கொண் டுள்ளனர். அவர்கள் இயல்பாக உள்ளதைப் பார்க்கிறார்களே அன்றி சர்வதேச உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கை தம் பார்வையில் புகுத்துவதில்லை. அது தவறான முடிவுக்கே இட்டுச் செல்லும் என்பது அவர்கள் கருத்து. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களி டையே போரைத்தடுக்கலாம், சமாதா னத்தைக் கொண்டு வரலாம் என்ற இலட்சியவாதம் மேலோங்கியிருந் தது. இந்த இலட்சியவாதம் 'லிபரல் உட்டோப்பியா' என ஈ.எச்.கார் என்ற வரலாற்றறிஞரால் கண்டிக்கப்பட் டது. அவர் இருபதாண்டுகளின் நெருக்கடி 1919-1939 (TWENTY YEARS CRISIS 1919-1939) என்ற நூலை போர் வெடிக்கும் தரு வாயில் எழுதி வெளியிட்டார். இது இயல்புவாதம் பற்றிய அடிப்படை களை எதிராளிகளின் கருத்துகளின் கண்டனம் என்ற முறையில் அலசும் சிறப்புமிக்க நூலாகும். ஈ.எச்.கார், மோர்கன்தோ ஆகிய இருவரும் வரையறை செய்து கூறிய இயல்பு வாதம் கெடுபிடி யுத்த காலத்தில் உலக அரசுகள் யாவற்றிற்கும் வழி காட்டும் தத்துவமாக விளங்கியது.

மோர்கன்தோ ஆறாக வகுத்துக் கூறிய இயல்புவாதத் தத்துவங்களை

எளிமைப்படுத்தி மூன்றாகக் கூற லாம். அவை

1. இயல்புவாதிகள் தேசிய அரசுகள் (NATION STATES)சர்வதேச உறவுகளின் முக்கிய செயலிகள் என்றனர்.
2. தேசிய அரசுகள் அதிகாரத்தைக் குறியாகக் கொண்டு செயற்படு கின்றன. தமது எதிராளிகளின் திட் டங்களை முறியடிக்க வேண்டும் என்பதே தேசிய அரசுகளின் பிரதான அக்கறை.
3. தேசிய அரசுகளின் சர்வதேச அர சியல் சுயத்துவம் உடையது. உள் நாட்டின் அரசியல் கட்டமைப்போ அல்லது உள்நாட்டின் எத்தகைய அரசு ஆட்சியில் இருக்கிறது என் பதோ முக்கியமில்லை. இவை சர்வதேச அரசியலின் சுயத்துவத் தைப் பாதிக்கமாட்டாது.

மூன்றாவதான சுயத்துவம் என்ப தனை பில்லியாட் பந்து மாதிரி (BILLIARD-BALL MODEL) என்பதைக் கொண்டு விளக்கலாம். பில்லியாட் விளையாட்டு மேசையில் உள்ள பந்துகளுக்கு ஒப்பானவை தேசிய அரசுகள். பந்தினை அடிக்கும் போது அவை பிறபந்துகளின் ஓரங்க ளில் மோதல்களை ஏற்படுத்தும். வெளி உறவுகள் என்பதும் இப்படித் தான் சுயத்துவமாக தேசத்துக்கு வெளியே நடைபெறும் விடயம்.

நவ இயல்புவாதம், பழைய இயல் புவாதத்தின் வாரிசாகத் தோன்றியது. நவஇயல்புவாதிகள் பொருளாதாரச் செயலிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். சர்வதேச உறவுக ளில் பொருளாதார விடயங்களும், பல்தேசியக் கம்பனிகளும் பெறும் வகிபாகத்திற்கு நவஇயல்புவாதம் அழுத்தம் கொடுத்தது. இருப்பினும் தேசிய அரசு மையநிலைப்பாட்டில் இருந்து நவஇயல்புவாதம் விலக வில்லை.

1979ஆம் ஆண்டு கென்னத் வால்ட்ஸ் சர்வதேச அரசியல் கோட்பாடு (THEORY OF INTER NATIONAL POLITICS) என்ற முக்கியமான நூலை எழுதினார். இந் நூல் சர்வதேச அரசியலில் அரசுகள்



என்ற செயலிகள் (ACTORS) முக் கியமே ஆயினும் உலக முறைமை யின் கட்டமைப்புகளும் (STRUC- TURES) முக்கியமானவை. கட்டமைப்புகளின் மட்டுப்பாடுக ளுக்கு உட்பட்டே செயலிகளின் நடத் தைகள் அமையும் என்றார் கென்னத் வால்ட்ஸ். இவரது கோட்பாடு அமைப்பியல் இயல்புவாதம் (STRUCTURAL REALISM) என்று அழைக்கப்படும்.

## பன்மைவாதம்

இயல்புவாதம் சர்வதேச அரங்கை 'பில்லியாட் பந்து மாதிரி'க்கு ஒப் பிட்டது. பந்துகளின் ஓரங்களில் மோதல் நிகழ்கிறது. இதுவே ஒரு அர சுக்கும் இன்னொரு அரசுக்கும் இடை யிலான வெளியுறவு. கடினமான, கன திமிக்க பெரிய பந்துகள் சிறிய பந்துகளை மோதி அடிக்கின்றன. அர சுகளின் பலமும், அவற்றின் தலைவர் களது சாகசமும், தனிப்பட்ட குணாதி சயங்களும் வெளியுறவு இராஜதந்திர த்திற்கு முக்கியமானவை. பன்மை வாதிகள் உலக அரசியல் பற்றிய இக் கருத்துக்கு மாறுபட்ட நிலையை எடுத்துக்காட்டினார்கள். உலக அரங் கில் அரசு அல்லாத செயலிகள் (NON STATE AC-T-O-R-S) பெறும் முக்கியத்துவத்தை இவர்கள் எடுத்துக்காட்டினர். அரசு அல்லாத செயலிகளை மூன்றாக வகுத்துக் கொள்ளலாம்.

* அரசுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்புகள் - 'சார்க்', 'ஆசியான்', 'ஆபிரிக்க நாடுக ளின் ஒன்றியம்', 'ஒபேக்' என் னும் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியன நாடுகளிற்கிடை யிலான அமைப்புகளுக்கு உதார ணங்களாகும். இன்று சுமார் 300 வரையான அமைப்புகள் செயற்ப டுகின்றன. இவை உலகின் விவகா ரங்களைத் தீர்மானிக்கும் முக்கிய செயலிகளாக உள்ளன.
* அரசு சார்பற்ற உலக நிறுவனங் கள். இவை IN-GO என அழைக் கப்படுபவை. சர்வதேச மன்னிப் புச்சபை, செஞ்சிலுவைச் சங்கம், றோமன் கத்தோலிக்க திருச்சபை, கிறிஸ்தவ சமய அமைப்பான 'வேர்ள்ட் கவுன்சில் ஒவ் சேர்ச் சஸ், 'ஒக்ஸ்பாம்' முதலியன அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதார ணங்களாகும். அரசசார்பற்ற நிறு வனங்களுள் இன்னொரு வகை யின பல்தேசியக் கம்பனிகள் (M-N-C-'s-)-எனப்படும். ஜென ரல் மோட்டோர்ஸ், போர்ட் எக்ஸ் சொன், யுனிலிவர், மைக்ரோ சொப்ற், மிற்சுபிசி, டொயோடா, கொக்காகோலா, பெப்சி போன்ற பல்தேசியக் கம்பனிகள் சர்வதேச ரீதியில் மிகுந்த செல்வாக்கை வகிப்பன.
* பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), ஆபிரிக்க தேசிய காங்கி ரஸ் (ANC), தென்மேற்கு ஆபி ரிக்க தேசிய மக்கள் இயக்கம் (SWAPO) போன்ற அரசியல் விடுதலை இயக்கங்கள் மூன்றா வது வகைச் செயலிகள் ஆகும். யூதர்களின் அமுக்கக் குழுவான 'சியோனிஸ்ட்லொபி' அமெரிக் காவில் மிகுந்த செல்வாக்குடைய தாக அமெரிக்காவின் வெளிநாட் டுக் கொள்கையை இஸ்ரேல் பக் கம் சாய வைப்பதாய் செயற்படுகி றது.

மேற்குறிப்பிட்ட மூவகையான அரசு அல்லாத செயலிகள் சர்வதேச அரங்கில் பெறும் வகிபாகம் சர்வ தேச அரசியலை தீர்மானிப்பதாக உள்ளது. அரசு அல்லாத செயலிகள் நான்கு வகைகளில் தமது செல்வாக் கைப் பிரயோகிக்கின்றன.

1. சர்வதேச இராஜதந்திர நிகழ்ச்சி நிரலில் ஒரு விடயத்தை புகுத்தும் சக்தி இவற்றுக்கு உண்டு.
2. பூகோள ரீதியானதும், பிராந்திய ரீதியானதுமான பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றிப் பிரசாரம் செய்து மக்களின் உணர்வுகளைத்

தூண்டுவதற்கும் அவர்களை விழிப்படையச் செய்யவும் இவை முயற்சி செய்கின்றன.

3. தமது கொள்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஆதரவு தேடிப் பிரசாரம் செய்வதோடு, உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதிலும் சர்வதேச நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுப்பதிலும் முன்னின்று செயற்படுகின்றன.
4. நேரடி நடவடிக்கையில் இறங்குதல் சிலவேளைகளில் அச்சுறுத்தல், பலாத்காரத்தை உபயோகித்தல் என்பனவும் இடம்பெறுவதுண்டு. குறிப்பாக பல்தேசியக் கம்பனிகள் இவ்வாறு நேரடித் தலையீடு செய்வதற்குச் சில உதாரணங்கள் உள்ளன.

## அமைப்பியல்வாதம்

மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகிய இருவரும் எழுதி வெளியிட்ட 'கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை' (1848), மார்க்ஸ் எழுதிய 'மூலதனம்' (1867) ஆகிய நூல்களில் உலகு தழுவிய நிலையில் ஏற்படும் யுத்தங்கள், மூலதனத்தின் விஸ்தரிப்பு, குடியேற்ற வாதமும் உலகு தழுவிய சமூக பொருளாதார மாற்றங்கள், தொழிலாளர் வர்க்கப்புரட்சி என்பன பற்றிய விளக்கங்கள் உள்ளன. இவர்களுக்குப் பின்னர் லெனின், ஸ்டாலின், மா ஓ ஆகியோரின் படைப்புகள் மார்க்சிய நோக்கிலான சர்வதேச உறவுகள் கோட்பாடு உருவாகத் துணையாக அமைந்தன. லெனின் எழுதிய 'ஏகாதிபத்தியம் - முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்னும் நூல் மார்க்சிய சர்வதேச கொள்கையின் அடிப்படையாக உள்ளது. மார்க்சிய சர்வதேச உறவுகள் கொள்கையின் 2 முக்கிய அம்சங்கள் பின்வருவன.

## பாட்டாளி வர்க்க சர்வதேசியம்

தேசிய எல்லைகளைக் கடந்த பொதுவான கொள்கைகளைக் கொண்ட தொழிலாளர் வர்க்க இயக்கம் என்ற கருத்தை இத்தொடர்



குறிக்கின்றது.


## ஏகாதிபத்திய எதிர்ப்பு

மேற்குறித்த 2 அம்சங்களோடு முன்னாள் காலனிகளாக இருந்த நாடுகளின் விடுதலை இயக்கங்களை ஆதரிக்கும் சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு, சர்வதேச உறவுகளில் 'சமாதான சகவாழ்வு'

என்ற இரண்டு அம்சங்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரான 50 ஆண்டுகாலத்தில் முக்கியம் பெற்றிருந்தன.

## உலக முறைமைக்கோட்பாடு (World System Theory)

இம்மானுவல் வலர்ஸ்ரீன், ஜோன் ஹல்டுங் ஆகிய இருவரும் உலக முதலாளித்துவ அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலைபற்றி உலக முறைமைக்கோட்பாடு மூலம் விளக்கம் தந்துள்ளனர். உலக முறைமைக்கோட்பாடு சர்வதேச உறவுகள் பற்றிய அமைப்பியல் கோட்பாடாகும். இம்மானுவல் வலர்ஸ்ரினின் உலக முறைமைக்கோட்பாடு நவீன உலக முறைமை (MODERN WORLD SYSTEM) (1974) என்ற




அவரது நூலில் விளக்கப்பட்டுள்ளது. வலஸ்ரீன் உலக அமைப்பை 3 பகுதிகளைக் கொண்ட முறைமையாகக் காண்கிறார். மைய நாடுகள் (CORE), சார்பு மண்டல நாடுகள் (PERIPHERY) அரைகுறை சார்பு நாடுகள் (SEMI PERIPHERY) என்ற 3 பகுதிகளை உடைய உலக அமைப்பை பின்வரும் காட்டுருவின் துணையுடன் விளக்கலாம்.

காட்டுரு 1: உலக முறைமையின் அமைப்பு

வலர்ஸ்ரீன் வரலாற்று நோக்கில் உலகில் 2 வகை முறைமைகள் இருந்ததாகக் கூறுகிறார். சிற்றளவு முறைமைகள் (MINI SYSTEMS), உலக முறைமைகள் என்ற இரு முறைமைகள் இருந்தன. சிற்றளவு முறைமைகள் பலவற்றை இணைத்த பேரரசுகள் தோன்றின. உரோமப் பேரரசு, துருக்கியப் பேரரசு, சோழப் பேரரசு என்ற பல உதாரணங்கள் பேரரசு என்ற வகை உலக முறைமைக்கு உதாரணங்களாகும். இப்பேரரசுகள் 5 கண்டங்களையும் இணைத்த அரசுகள் என்ற அர்த்தத்தில் 'உலக முறைமை' என்று கூறப்படவில்லை. அவற்றின் பிரதேச-பிராந்திய விரிவாக்கத்தையே 'உலகு' என்ற சொல் குறிப்பிடுகிறது. 16ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவ விவசாயமுறை ஐரோப்பாவில் விருத்தியாகியது. உலக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் பெருகியது. காலனிகள் உருவாகின. இதன் பின்னர் உலக முதலாளித்துவம் என்ற உலக முறைமை உருவானது. முன்னைய பேரரசுகளை இணைத்த விடயம் அரசியலாகும். பேரரசுகள் அரசியல் அதிகாரத்தின் மூலம் பல சிற்றளவு முறைகளை ஒன்றிணைத்தது. உலக முதலாளித்துவ அமைப்பு என்ற முறைமை பொருளாதார அடிப்படையில் உலகை ஒன்றிணைப்பதால் உருவாகும் முறைமை என்று வலர்ஸ்ரீன் விளக்கம் தருகின்றார்.

உலக முறைமையில் மைய நாடுகள் முதலாளித்துவ உற்பத்தி முறையில் மிகவும் முன்னேறிய நாடுகளாகும். இவை கைத்தொழில் உற்பத்தி, வங்கிச் சேவை, முதலாளித்துவ முறையிலான விவசாயம் என்பனவற்றில் மிக உயர்ந்த தொழில்நுட்ப முறைகளை உபயோகித்து உலக பொருளாதாரத்தின் உற்பத்தி, வர்த்தகம், நுகர்வு ஆகியவற்றில் பெரும் பங்கினைத் தமதாக்கிக் கொண்டுள்ளன. சார்பு மண்டல நாடுகள் என்ற வகைக்குள் '3ஆம் உலகு' என அழைக்கப்படும் நாடுகள் அமைகின்றன. மூலப்பொருட்களையும், வர்த்தகத்திற்கான உணவு, விவசாய உற்பத்

திகளையும் ஏற்றுமதி செய்வனவா யும், மையநாடுகளில் உற்பத்தியா கும் கைத்தொழில் நுகர்வுப் பொருட் களை இறக்குமதி செய்வனவாயும் சார்பு மண்டல நாடுகள் விளங்குகின் றன. அரைகுறை சார்பு மண்டல நாடு கள் என்ற வகைக்குள் அடங்கும் நாடுகள் முன்னர் சார்பு மண்டலத் தின் பகுதியாக இருந்து பின்னர் கைத் தொழில் விருத்திமூலம் தம்நிலையை உயர்த்திக் கொண்டவை. தென் கொரியா, ஹொங்கொங், மலே ஷியா, சிங்கப்பூர், மெக்சிக்கோ, பிரே சில் முதலியன இவ்வாறு அரைகுறை சார்பு மண்டலத்துள் நகர்ந்தவை. முன்னர் மைய நாடுகளாக இருந்த போர்த்துகல், ஸ்பெயின் ஆகியன அரைகுறை சார்பு மண்டலத்திற்கு நகர்ந்தன. உலக முறைமையின் இவ் வாறான அமைப்பியல் அம்சங்களே சர்வதேச உறவுகளின் தீர்மானக் கார ணிகள் என்று உலக முறைமைக் கோட்பாட்டாளர்கள் விளக்குவர். உலக அமைப்பின் 3 பகுதிகளுக்குள் ளேயும் உள்ள நாடுகளின் வர்க்கக் கட்டமைப்புகளும் அரசியல் முறை யும் வேறுபட்டனவாய் உள்ளன. உலக முறைமையில் முரண்பட்ட இயல்புகளும் உலக உறவுகளின் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றன. அர சியல் என்ற ஓர் அம்சத்தை மட்டும் பார்ப்போம்.

- மைய நாடுகள் ஜனநாயக அரசி யல் முறையைக் கொண்டுள்ளன.
- சார்பு மண்டலத்தில் ஜனநாயகம் பலவீனமாக உள்ளது.
- அரைகுறை சார்பு நாடுகள் சர்வா திகார ஆட்சிமுறைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

### வெஸ்ட்பாரியாவிற்குப் பிந்திய உலகம்

இயல்புவாதக் கோட்பாடு சர்வ தேச உறவுகளின் தீர்மானசக்திகளாக தேசிய அரசுகள் (NATION ST-A-T-E-S-) விளங்குகின்றன என்று கூறி யிருப்பதை இக்கட்டுரையின் தொடக் கத்தில் கூறினோம். இக்கோட்பாடு நாடுகளின் இறைமை என்ற கருத் தையும் முதன்மைப்படுத்துகிறது. வர




லாற்று நோக்கில் பார்க்கும் போது இன்றைய உலக ஒழுங்கு 1648ஆம் ஆண்டில் ஐரோப்பிய அரசுகள் 30 ஆண்டுப்போரின் முடிவில் செய்து கொண்ட வெஸ்ட்பாரிய உடன்படிக் கையின் மாதிரியில் வடிவமைக்கப் பட்டுள்ளன. உலக அரசுகளின் வெஸ்ட்பாரிய முறை நீண்ட ஒரு போரின் முடிவில் வடிவமைக்கப் பட்டு காலப்போக்கில் ஒரு நியமமாக் கப்பட்டது. நாடுகளுக்கு உள்ளே ஏற் பட்ட சமயப் பூசல்கள் கத்தோலிக் கர்களுக்கும், கிறிஸ்தவ சமயப் பிரிவினர்களுக்கும் இடையிலான உள்நாட்டு யுத்தங்களாக வெடித்தன. அவ்வேளை தனது அயல் நாட்டில் தம் சமயத்தவர்களின் படுகொலை யை பொறுத்துக்கொள்ள முடியாத அரசு தன் படைகளை அனுப்பி உள் நாட்டுப்போரில் தன் தலையீட்டைச் செய்வது வழக்கமாக இருந்தது. முப்பதாண்டுப் போரின் மூலகா ரணம் இதுவே. வெஸ்ட்பாரிய உடன் படிக்கை உள்நாட்டிற்குள் ஒரு அரசு தன் பிரஜைகளுக்கு என்ன தீங்கை இழைத்தாலும் அயல் நாடு அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாதென்ற விதியைக் கொண்டு வந் தது. வெஸ்ட்பாரிய மாதிரி 3 தத்து வங்களை முன்வைத்தது.

1. தெளிவான எல்லைகளைக் கொண்ட புவியியல் எல்லைக்குள் அமையும் அரசுகள். இவ் எல்லை கள் புனிதமானவை. இந்த எல் லைக்குள் நுழையும் அதிகாரம் அந்நிய அரசுகளுக்கு இல்லை. இதனை Territoriality வரையி டப்பட்ட பிரதேச அலகு என்று கூறலாம்.
2. இறைமை: வரையிடப்பட்ட இந்த எல்லைக்குள் அரசு முழு இறைமை வாய்ந்ததாக இருக்கி றது.
3. சுயாதீனம்: அரசியல்,சமூகம், பொருளாதாரம் என்ற விடயங்க ளில் ஒவ்வொரு அரசும் சுயா தீனம் உடையவை. இவ்வாறான சுயாதீன அரசுகளின் இடையி லான உறவுகளே சர்வதேச உறவு கள் என்று வெஸ்ட்பாரிய மாதிரி விளக்குகின்றது. 20 ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியிலும் 21 ஆம் நூற்றாண்டிலும் உலக அரங் கியல் வெஸ்ட்பாரிய மாதிரியின் உடைவும், நெருக்கடியும் ஏற்பட் டுள்ளது. அரசு அல்லாத செயலிக ளின் வகிபாகம் அரசுகளின் இறை மைக்குச் சவாலாக அமைந்துவிட்டது. குறிப்பாக மனித உரிமைகள் என்ற விவ காரம் நாடுகளின் எல்லையைத் தாண்டிச் செயல்புரியும் அதிகாரத் தைச் சர்வதேச சமூகத்திற்கு வழங் கியுள்ளது. சர்வதேச உறவுகள் பற்றி வெவ்வேறு கோட்பாடுகள் இது பற்றி என்ன சொல்கின்றன என்பது சுவாரஸ்யமானதொரு விவாதத்திற்கு நம்மை இட்டுச் செல்லும். அது பிறிதொரு கட்டு ரையில் விரித்துரைக்கப்பட வேண் டியது. ■



## கடைசிப் பக்கம்

# வாழ்வும் கடனும்



செ.கணேசலிங்கன்

எம்மை ஒத்த தலைமுறை எழுத்தாளர்களில் பலர் மார்க்சிய சிந்தனையில் நம்பிக்கை கொண்டவர்கள். அவை சார்ந்த இயக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டவர்கள். இதனால் நமக்கு பல்வேறு வகையிலான அறிவு அனுபவங்களைத் திரட்டி வளப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. நான் இந்தத் தருணம் வரை தொடர்ச்சியாக வாசித்துக் கொள்வதுடன், அவற்றை உள்வாங்கி சமகாலச் சமுதாயத்தை விளங்கிக்கொள்ள உதவும் வகையில் இலக்கியத்தையும் அதனுடன் இணைத்து பயணம் செய்து வருகிறேன். எனது எழுத்துகளை தொடர்ந்து வாசிப்பவர்களுக்கு ஏதோவொரு வகையில் உதவி செய்கிறேன். இது எனது சமூகக் கடமையாகவும் அமைந்துள்ளது.

சமீபத்தில் நான் 'வாழ்வும் கடனும்' என்ற நாவலை எழுதியுள்ளேன். இதற்காக பொருளாதார வரலாறு, அரசியல் பொருளாதாரம், பண்பாட்டியல், சமூகவியல் முதலான ஒன்றுக்கொன்று தொடர்பான பல்துறை விடயங்களை ஆழமாகக் கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. மேற்குறித்த நாவலுக்கு கெயின்சின் கடன் கொள்கை, யுத்தமும் வேலைவாய்ப்பும், வங்கிக் கடன், இரண்டாவது உலகப்போர், கடனும் முதலாளித்துவமும், கடன் சுமையும் நுகர்வும், நுகர்பண்டம், முதலாளிகள், வளர்ச்சியும் கடனும் முதலான விடயங்களிலே ஆழமான பார்வைகளைச் செலுத்த வேண்டி இருந்தது. பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் கெயின்ஸ் மற்றும் அரசியல் பொருளாதார சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் கருத்துகளை ஆழமாகக் கற்கவும் அவற்றில் இழையோடும் ஆய்வு முறையியல், தர்க்கவியல் முதலானவற்றை புரிந்து கொள்ளவும் முயற்சி செய்துள்ளேன்.

ஏகாதிபத்தியத்திற்கு வாய்ப்பாக அமைந்த கெயின்ஸின் பொருளாதாரக் கொள்கையை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வில்லியம் டேவிட்ஸ் பின்வருமாறு விபரிக்கிறார்; 'முதலாளித்துவத்திற்கு துயரமான உச்சநிலையில் பங்கு பற்றுவோருக்கு பொறுப்பேற்கும் மனநிறைவற்ற நிலை ஏற்பட்டது. திருப்தியற்ற தேவைக்கு கெயின்ஸின் பொருளாதாரம் உதவியது. முதலாளித்துவ அமைப்புக்கு ஆபத்து தனிமனிதராலும் கூட்டாகவும் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் திருப்தி ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டது.'

முதலாளித்துவத்தின் மரண நிலைப் பிரச்சினை அரசுகளைக் காப்பாற்றுவது அல்லது திருப்தி ஏற்படாத பசியில் நுகர்வோரைக் காப்பாற்றுவதே. அது பசியைப் போக்க மேலும் கடன் பெறும் வழியைத் தேடியது. ஆகவே கெயின்ஸின் காலம் அதன் பின்னைய நவீன தாராளமய காலத்திடையே உள்ள வேறுபாட்டை வகுத்துக் கூறலாம். அதாவது கெயின்ஸின் காலம் என்பது தணியாத கடன் தொல்லை, வளமற்ற அரசு, நவீன தாராளமயக் கொள்கை, மகிழ்ச்சியற்ற நுகர்வோர் போன்ற அம்சங்களை தெட்டத் தெளிவாக அடையாளம் காட்டுகிறது.


'உலகப் பொருளாதார மேம்பாடு, உலகமயமாதல் ஆகிய நிலையில் மனித மகிழ்ச்சி நுகர்பண்ட கோட்பாட்டை வெட்கமின்றி மேம்படுத்துகின்றது. இதனால் சமத்துவமின்மை மேலும் அதிகரிக்கிறது. தொடர்ந்து வறுமையும் நீடிக்கிறது.' இவ்வாறு ரிச்சார்ட் எனும் அறிஞர் 'உலக சமய எழுச்சி' எனும் நூலில் குறிப்பிடுவதையும் நாம் எச்சரிக்கையுடன் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

வருவாயில் முன்னெப்போதும் இல்லாதவாறு ஏற்றத்தாழ்வு. உற்பத்தி மேல்மட்டத்தில் உள்ளவர்களுக்காகவே நடைபெறுகிறது. ஏழைகளுக்காக அல்ல. தற்போது ஏராளமானவர்களிடம் பணம் இல்லை. அவர்கள் அரை வயிற்றுடன் வாழ்கின்றனர். இந்தப் பின்புலத்தில் முதலாளித்துவ வளர்ச்சிக்கு புதுவழி காட்டியவர் கெயின்ஸ் எனலாம். இவர் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தேவை கடன் என்கிறார். இன்று உலகம் கடனில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. கடன் பட்டால் நெஞ்சம் அமைதியாவதில்லை. எங்கும் சமத்துவம் இன்மை கோலோச்சுகிறது.

எனது 'வாழ்வும் கடனும்' என்ற நாவல் சமூக மேல்தட்டு வாழ்க்கையில் வாழ்பவரின் நுகர்பண்ட வேட்கை, கெயின்ஸ் காட்டிய கடன் சுமை, உலகெங்கும் தனிப்பட்ட கடனாளிகளின் சுமையான வாழ்வு, வேலையில்லாப் பிரச்சினை, சமத்துவமற்ற கூலியமைப்பால் ஏற்படும் பிரச்சினைகள் யாவற்றையும் வெளிப்படுத்த முயற்சிக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு விடிவு என்ன என்பதன் மீதான ஆர்வத்தையும் தூண்டுகிறது.

இவை தொடர்பான புரிதலுக்கு மார்க்சியம் மீதான ஆழமான தேடலும் கற்றலும் முக்கியம் என்பதை வலியுறுத்த வேண்டும். இதற்கான சாதகமான சூழலை உருவாக்கிக் கொண்டு பயணப்பட வேண்டும். ■


இஷ்டம்போல அள்ளி நொறுக்கிட
இனிய தருணங்களில் இன்றியமையாத டேவிட் தயாரிப்புகளை
இன்றே வாங்கி சுவைத்து மகிழுங்கள்
தனிச்சுவை என்பது இதுதானோ
மீண்டும் மீண்டும் உண்ணத்தோன்றும்
டேவிட் நிலக்கடலை சுவையின் சாரம்
GIVING YOU ONLY THE BEST SINCE 1962
DAVID GRAM STORES
214, Gas works Street, Colombo 11.
Tel: 0112434601, 0112335024
Fax: 2335061 Email: davidgramsl@gmail.com
STORES:
No. 16, Albion Place, Colombo 09.
Tel: 011 2696706, 011 2692718 Fax: 0115358024, 0112636303
BRANCHES:
40, Sri Sangaraja Mawatha, Colombo 12, 14, Front Street, Colombo 11, 338, Baseline Road, Colombo 9, 20, Basilika Road, Ragama, 2/b, James Peries Mawathe, Colombo 2, 157/1, Stanley thilakarathne Mawatha, Nugegoda, 33, St. Joseph Street, Colombo 14, 222, Oldcott Mawatha, Colombo 11, 15, Galle Road, Dehiwala, 463/A, 2nd Division, Maradana.




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.